
அகிலா கோவிந்த்
செப்டம்பர்-2012
ரூ.15/-
வெண்ணிலா
நாவல்



கோவிந்த்

# என் முத்தான முத்தல்லவோ...

முதன் முதலில் கதிரவனை அவள் பார்த்தது கல்லூரி நாட்களில்தான். கல்லூரி இறுதி வருட படிப்பில் அவளது பிரிவில் புதியதாய் வந்து சேர்ந்தவன் கதிரவன். ஆரம்பத்தில் அவனைப் பார்த்ததுமே அவளுள் ஒருவித பிரமிப்பு அவளையறியாமல் ஏற்பட ஆரம்பித்ததும் உண்மைதான்!

"என்ன மாது இப்படி வைத்த கண் வாங்காமல் அவனைப் பார்க்கிறாய்? அதற்குள் கெமிஸ்ட்ரி ஸ்டார்ட் ஆகி விட்டதா?" என தோழி புவனா கிண்டலடித்துக் கேட்ட போதும், "சே! சே! அதெல்லாம் ஒன்றும் இல்லை...." என மறுக்கவே செய்தாள் அவள்.

அகிலா கோவிந்த்

ஆனால் அவன் கதிரவன், வெண்ணிற பல்வரிசை தெரிய அழகாய் புன்னகைத்து யாரிடம் பேசினாலும் அவளுள் பொறாமைஎழுந்தது. எவ்வளவு இனிமையாய் பார்க்கப் பார்க்க தெவிட்டாத புன்னகை... அது... அதை அவளைப் பார்த்தும் அவன் சிந்தலாம் தானே?

ஆனால் என்னவோ கதிரவன் மாதுரி பக்கம் திரும்பாதது மட்டுமல்ல. அவளைக் கண்டாலே விலகி விலகிப் போனான்.

அங்கு அவள் இருப்பது தெரிந்தாலோ, அவள் அங்கு நுழைந்து விட்டாளோ உடனே இடத்தை காலி பண்ணினான் அவன். முதலில் இதை உணராத அவள் திடீரென ஒருநாள் இதை நன்கு அறிந்தபோது துணுக்குற்றவே செய்தாள்.

பெரிய செல்வந்தரின் மகள். ஐஸ்வர்யா ஜீவல்லர்ஸ் என்ற பல கிளைகள் கொண்ட பிரும்மாண்டமான நகைக்கடை அதிபரின் செல்ல மகள். நாற்பது லட்ச ரூபாய் மதிப்புள்ள புதுரகபென்ஸ் காரில் கல்லூரி முன் வந்து இறங்குபவள். என அவளைப் பற்றி ஒரு பணக்காரத்தனம் கல்லூரி முழுவதும் பரவிஇருந்தது. ஒருவேளை... இது... இந்த பணக்காரத்தனம் எல்லாம் அவனுக்கு பிடிக்காமல் போயிற்றா? அவளை பணத்திமிர் பிடித்தவள்... கர்வக்காரி என்றெல்லாம் நினைத்து விட்டானா?

அப்படி நினைக்க கூட வாய்ப்பில்லையே? எவ்வித பந்தாவோ பகட்டுத்தமோ இல்லாமல் எல்லோருடனும் எளிமையாய் பழகுபவள்தானே! யார் பீஸ்கட்ட பண உதவி கேட்டாலும் முகம் சுழிக்காமல் கொடுத்து உதவுவாள்! வழியில் பஸ் கிடைக்காமல் நடந்து செல்லும் தோழியரை எல்லாம் தனது காரில் ஏற்றி உரிய இடத்தில் ட்ராப் செய்பவளாயிற்றே! என அவள் எளிமையைப் பற்றி சொல்லிக்கொண்டே போகலாம்தானே?

பின் எது அவனுக்கு அவளிடம் பிடிக்காமல் போயிற்று? எதனால் அவளைக்கண்டு விலகிவிலகி செல்லவேண்டும்? அதுதான் அவளுக்கு சுத்தமாய்ப் புரியவில்லை.

அவளுள் அதிசயித்து எழுந்த அந்தக் கேள்விகளே அவளை



ஆர்வத்துடன் தூண்டுதல் செய்ய அவள் அவனை விரட்ட ஆரம்பித்தாள். லைப்ரரி, புல்தரை மைதான ஆலமரம் என அவன் சென்ற இடங்களில் எல்லாம் அவள் பின் தொடர்ந்தாள்.

நேருக்கு நேர், எதிரும் புதிருமாய் முட்டாத குறையாய் வந்த போதெல்லாம் விழிகளைத் தாழ்த்தி சரேலென விலகினான் கதிரவன்.

அவளுள் கோபம் மூண்டு ஆத்திரமாய் கிளம்பியது. அவள் என்ன சிங்கமா... புலியா... பார்த்ததும் இந்த ஓட்டம் ஓடுகிறான்? விடக் கூடாது இவனை.... கேட்டுத்தான் ஆகவேண்டும்... என முடிவெடுத்து அதே வேகத்தில் ஒருநாள் புல்தரைப் ப்க்கம் தனியே வந்த அவனை வழிமறித்தாள். வேண்டுமென்றே 'மிஸ்டர்....' என ஆரம்பித்து படபடவென அவள் அவனது செய்கையெலலாம் சுட்டிக் காட்டி விளக்கம் கேட்க கொஞ்சமும் அதிராது மென்மையாய்ச் சிரித்தான் அவன்.

'இதான்.... இதற்குத்தான்..!' என்றான் மேலும் புன்னகையை பெரிதாக்கியபடி

'இதற்குத்தான் என்றால்...?

இழுத்தபடி கண்கள் விரியப் பார்த்தவளை குனிந்து உற்றுப் பார்த்தவன், 'நான் அப்படி விலகிப் போனது... இதற்கு.... இப்படி நீயாக என்னைத்தேடி வந்து பேசுவதற்கு.... பேசவைப்பதற்கு.... என்றான். புரியவில்லை...?' என்றாள் மறுபடியும் விழிகள் விரிய.

கைகட்டியபடி நிதானமாய் குறுகுறுப்பு பார்வை பார்த்தவன், 'கொஞ்சம் இப்படி நான் செல்கிறது போல் யோசித்துப் பார். நானாக உன்முன் வலிய வலிய வந்து பேச முயன்றிருந்தால் என்ன நடந்திருக்கும்? நீ முகம் வெட்டி எரிச்சலாகத்தானே அகன்றிருப்பாய்.... அப்படி நீ நடந்து கொண்டால் என்னால் தாங்க முடியாதே? உன் இனிய தோழமைஎனக்கு கிடைக்காமல் போய் விடுமே?' என அவன் நிறுத்த, 'தோழமையா?' என்றாள் ஆச்சரியம் பொங்க.

'ம்ம்.... தோழமையான நட்பு. அதுவுமஇந்திரலோகத்து சுந்தரி போன்ற ஒரு அழகான பெண்ணின் நட்பு.....'

ஆனால் அவன் கதிரவன் வெண்ணிற பல்வரிசை தெரிய அழகாய் புன்னகைத்து யாரிடம் பேசினாலும் அவளுள் பொறாமைஎழுந்தது. எவ்வளவு இனிமையாய் பார்க்கப் பார்க்க தெவிட்டாத புன்னகை... அது... அதை அவளைப் பார்த்தும் அவன் சிந்தலாம் தானே?

ஆனால் என்னவோ கதிரவன் மாதுரி பக்கம் திரும்பாதது மட்டுமல்ல. அவளைக் கண்டாலே விலகி விலகிப் போனான்.

அங்கு அவள் இருப்பது தெரிந்தாலோ, அவள் அங்கு நுழைந்து விட்டாளோ உடனே இடத்தை காலி பண்ணினான் அவன். முதலில் இதை உணராத அவள் திடீரென ஒருநாள் இதை நன்கு அறிந்தபோது துணுக்குற்றவே செய்தாள்.

பெரிய செல்வந்தரின் மகள். ஐஸ்வர்யா ஜீவல்லர்ஸ் என்ற பல கிளைகள் கொண்ட பிரும்மாண்டமான நகைக்கடை அதிபரின் செல்ல மகள். நாற்பது லட்ச ரூபாய் மதிப்புள்ள புதுரகபென்ஸ் காரில் கல்லூரி முன் வந்து இறங்குபவள். என அவளைப் பற்றி ஒரு பணக்காரத்தனம் கல்லூரி முழுவதும் பரவிஇருந்தது. ஒருவேளை... இது... இந்த பணக்காரத்தனம் எல்லாம் அவனுக்கு பிடிக்காமல் போயிற்றா? அவளை பணத்திமிர் பிடித்தவள்... கர்வக்காரி என்றெல்லாம் நினைத்து விட்டானா?

அப்படி நினைக்க கூட வாய்ப்பில்லையே? எவ்வித பந்தாவோ பகட்டுத்தமோ இல்லாமல் எல்லோருடனும் எளிமையாய் பழகுபவள்தானே! யார் பீஸ்கட்ட பண உதவி கேட்டாலும் முகம் சுழிக்காமல் கொடுத்து உதவுவாள்! வழியில் பஸ் கிடைக்காமல் நடந்து செல்லும் தோழியரை எல்லாம் தனது காரில் ஏற்றி உரிய இடத்தில் ட்ராப் செய்பவளாயிற்றே! என அவள் எளிமையைப் பற்றி சொல்லிக்கொண்டே போகலாம்தானே?

பின் எது அவனுக்கு அவளிடம் பிடிக்காமல் போயிற்று? எதனால் அவளைக்கண்டு விலகிவிலகி செல்லவேண்டும்? அதுதான் அவளுக்கு சுத்தமாய்ப் புரியவில்லை.

அவளுள் அதிசயித்து எழுந்த அந்தக் கேள்விகளே அவளை



ஆர்வத்துடன் தூண்டுதல் செய்ய அவள் அவனை விரட்ட ஆரம்பித்தாள். லைப்ரரி, புல்தரை மைதான ஆலமரம் என அவன் சென்ற இடங்களில் எல்லாம் அவள் பின் தொடர்ந்தாள்.

நேருக்கு நேர், எதிரும் புதிருமாய் முட்டாத குறையாய் வந்த போதெல்லாம் விழிகளைத் தாழ்த்தி சரேலென விலகினான் கதிரவன்.

அவளுள் கோபம் மூண்டு ஆத்திரமாய் கிளம்பியது. அவள் என்ன சிங்கமா... புலியா... பார்த்ததும் இந்த ஓட்டம் ஓடுகிறான்? விடக் கூடாது இவனை.... கேட்டுத்தான் ஆகவேண்டும்... என முடிவெடுத்து அதே வேகத்தில் ஒருநாள் புல்தரைப் ப்க்கம் தனியே வந்த அவனை வழிமறித்தாள். வேண்டுமென்றே 'மிஸ்டர்....' என ஆரம்பித்து படபடவென அவள் அவனது செய்கையெலலாம் சுட்டிக் காட்டி விளக்கம் கேட்க கொஞ்சமும் அதிராது மென்மையாய்ச் சிரித்தான் அவன்.

'இதான்.... இதற்குத்தான்..!' என்றான் மேலும் புன்னகையை பெரிதாக்கியபடி

'இதற்குத்தான் என்றால்...?

இழுத்தபடி கண்கள் விரியப் பார்த்தவளை குனிந்து உற்றுப் பார்த்தவன், 'நான் அப்படி விலகிப் போனது... இதற்கு.... இப்படி நீயாக என்னைத்தேடி வந்து பேசுவதற்கு.... பேசவைப்பதற்கு.... என்றான். புரியவில்லை...?' என்றாள் மறுபடியும் விழிகள் விரிய.

கைகட்டியபடி நிதானமாய் குறுகுறுப்பு பார்வை பார்த்தவன், 'கொஞ்சம் இப்படி நான் செல்கிறது போல் யோசித்துப் பார். நானாக உன்முன் வலிய வலிய வந்து பேச முயன்றிருந்தால் என்ன நடந்திருக்கும்? நீ முகம் வெட்டி எரிச்சலாகத்தானே அகன்றிருப்பாய்.... அப்படி நீ நடந்து கொண்டால் என்னால் தாங்க முடியாதே? உன் இனிய தோழமைஎனக்கு கிடைக்காமல் போய் விடுமே?' என அவன் நிறுத்த, 'தோழமையா?' என்றாள் ஆச்சரியம் பொங்க.

'ம்ம்.... தோழமையான நட்பு. அதுவுமஇந்திரலோகத்து சுந்தரி போன்ற ஒரு அழகான பெண்ணின் நட்பு.....'

இது என்ன புது வழிசல்? என எரிச்சல் வந்தாலும், நான் சுந்தரி இல்லை. மாதுரி....! தன் பெயரை அவன் சரியாக உணரவில்லையோ என திருத்தினாள் அவள். 'இருக்கட்டுமே... அந்த சுந்தரியை விட இந்த மாதுரி அழகுதானே? அதுதான் எனக்குப் பிடித்துப் போய் இப்படி ஒரு குறுக்கு வழியை என்னுள் ஏற்படுத்தியது' எனப் பேசியவன் தன்னைத்தானே மெச்சிக்கொள்வதுபோல், 'நான் நினைத்தது போலவே நடந்து விட்டது. என் கணக்கு தப்பவில்லைதான்!' என்றான்.

'ஆனால் என் கணக்கு தப்பிவிட்டது. நட்பிற்காக இப்படி ஒரு குறுக்கு வழி தேடுவது... நடிப்பது... கேவலம்... உங்களைப் பற்றி என்னவோ நினைத்திருந்தேன். எல்லாம் வீண்..' என்றாள் அவள் கோபமாக.

அவன் கொஞ்சமும் புன்னகைமாறாமல் அவனது முகத்தை தாழ்த்தி மேலும் அவள் அருகாமையில் வந்தவன், 'அப்படி என்னைப்பற்றி என்னதான் நினைத்திருந்தாய்? சொல்லேன்!' என்றான் ஒருவித மெல்லியகுரலில்.

மறுபடியும் திகைத்தாள். புன்னகை மட்டுமல்ல. அவன் பரந்த நெற்றியின் கீழ் குறுகுறுப்பாய் பளபளத்த அவனது இருவிழிகளும் அவளை வசீகரித்து அவளிடம் எதையோ பேசுவது போல் இருந்தன. கண்கள் அப்படிப் பேசுமா என்ன?

அவள் தனது மைவிழிகளை மேலும் அகலமாக்கியபோது, அட.... உன் கண்கள் கூட பேசுகிறதே... நான் கேட்டதற்கான பதிலை உன் உதடுகள் சொல்வதற்குள் கண்கள் முந்திவிட்டதே...!' என மறுபடியும் ஒரு கண்டுபிடிப்பு சொல்ல அவள் அசந்து போனாள்.

இரண்டொரு நிமிடத்தில் என்னவெல்லாம் பேசி விட்டான்?... இவனிடம் பார்த்துதான் பேச வேண்டும் இல்லாவிட்டால் வகையாய் மாட்டிக் கொள்வோம்... என பயந்துதான் போனாள்.

அவள் முகத்தில் தெரிந்த மிரட்சியைப் பார்த்து மறுபடியும் கணித்தான்.



என்னைப் பார்த்து எந்த பயமும் கொள்ள தேவையில்லை. 'ஜஸ்ட் எ ப்ரெண்ட்! உங்கள் தோழமைவிரும்பும் ஒரு நண்பன்...!' என்றபடி கைகளை குலுக்க உரிமையுடன் நீட்டினான்.

அவன் கேட்டபடி வெண்பற்கள் தெரிய சிரித்த அந்த வசீகரச் சிரிப்பில் அவள் எங்கோ பாதாளத்தில் விழுவது போல் உணர்ந்தாள். இப்படி முன்பு எந்த ஆண் சிரித்தபோதும் அவளுக்கு ஏற்பட்டதில்லை தான்!

அதனாலே அவளையறியாமல் அவள் கைகள் உயர்ந்து அவனது கரங்களை பிடித்து குலுக்கியது. விடுவித்ததும், உங்களைப் பற்றி வேறு ஒன்றும் எனக்கு தெரியாதே? என்றாள் அவனைப்பற்றி முழுதும் தெரிந்து கொள்ளும் ஆவலோடு.

அவனோ அசால்டாக தோள்களை குலுக்கிக் கொண்டவன், 'என்னைப் பற்றி சொல்ல ஒன்றுமில்லை. ஐ ஆம் கதிரவன். தி கிரேட் மாதுரியின் ப்ரெண்ட்...!' என்றபடி கண்களை குறும்பாக சிமிட்டினான்.

பதிலுக்கு அவளும் அதே போல் சிமிட்டியவள், 'ஐ ஆம் மாதுரி. தி கிரேட் கதிரவன் ப்ரெண்ட்! போதுமா? உங்களையும் பதிலுக்கு ஐஸ் வைத்தாயிற்று!' என்றபடி சிரித்தாள். அவனும் அதை ரசித்து உதடுகளை விரித்து கடகடவென சிரித்தான்.

என்ன ஒரு ஆளுமையான சிரிப்பு....! அவளுக்கு திரும்பவும் மயக்கம் வந்தது. சிரிப்பு மட்டுமல்ல... நல்ல வலுவான உடற்கட்டும்...ஆரோக்யமான தேகமுமாய் நெஞ்சு நிமிர அவன் நின்றது... ஒரு ஆஜானுபாகுவான ஆளுமைத் தன்மையை பறைசாற்றி அவளை மேலும் மேலும் பார்க்க வைத்தது.

இப்படித்தான் ஒரு பார்வையுடன் ஒரு பேச்சும் சிரிப்பும் அவர்களிடையே ஆரம்பமானது

அதன்பின் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் நிறைய பேசினார்கள்.

ரொம்பவும் பழகினார்கள்.

ஒருநாள் கதிரவன் அவளிடம் 'உன்னைப் பார்த்த முதல்

சந்திப்பிலேயே என்னை நீ வசீகரித்துவிட்டாய், நான் மனதுள் தேடிய பெண் நீதான். நீதான் என வாழ்க்கைத் துணையாய் வர வேண்டும்' என்ற காதல் வசனத்தை ஆரம்பிக்க அவளும் பதிலுக்கு, 'நானும் எப்பவோ உங்களை விரும்ப ஆரம்பித்து விட்டேன்...! என்றாள் முகம் சிவக்க அக்கணமேஇருவரும் மன்மதன் பிடியில் காதல் கடலில் தொபுக்கடீர் என விழுந்து விட்டனர்.

ஆன்னால் அவர்களது காதல் ரொம்பவும் இங்கிதமானது. விரல் நுனி படாமல் ஸ்பரிச உணர்வுகளும் அப்பாற்பட்டு இனிமையாய் வளர்ந்துது.

அணைப்பது, முத்தமிடுவது, நெருக்கமாய் ஊர் சுற்றுவது என்று இல்லாமல் கை கோர்ப்பது, தோள் உரச சில சமயங்கள் நடப்பது என கல்லூரியில் வேறு யாரும் உணராதபடி அளவோடு முன்னேறியது.

கல்லூரி முடிந்ததும் கதிரவன் தீவிரமாய் வேலை தேடினான். மூன்றே மாதத்தில் தனியார்கம்பெனி ஒன்றியல் மார்க்கெட்டிங் மேனஜர் வேலை கிடைத்தது. நல்ல பதவி, நல்ல சம்பளம்!

ஆனால்....?

மாதுரியின் செல்வச் செழிப்பை ஒப்பிடும்போது அவனது வருமானம், சம்பளம் சொற்பமே!

காதலிக்கும் போது அவர்கள் கொஞ்சமும் யோசிக்காத அந்த ஸ்டேட்டஸ் விஷயம் - மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம் - அப்போது பூதகாரமாய்த் தோன்றி அவர்கள் இருவரையும் மலைக்க வைத்தது.

திகைத்துப் போனார்கள் இருவரும்.



கதிரவனும் மாதுரியும் திகைத்தமைக்கு சரியான காரணமும் இருந்தது.



கோடி கோடியாய் புரளும் நகை வியாபாரம், நகரின் முக்கிய இடங்களில் நான்கு கிளைகள், அரண்மனை மாதிரி மிகப் பெரிய வீடு, விதவிதமான புதுரக கார்கள், சொல்லும் வேலையை துடிப்பாய் செய்யக் காத்திருக்கும் பணியாட்கள், இன்னும்.... நிறைய சொத்துக்கள்... நிலபுலன்கள்..இவற்றையெல்லாம் தன் கடின உழைப்பாலும், சாதுர்யத்தாலும் சம்பாதித்தவர் மோகன்ராம். அவருக்கு பிறந்த மூன்றாவது சீமந்த புத்திரி மாதுரி.

மாதுரிக்கு முன்வபு பிறந்த இரண்டு அண்ணன் மார்களும் கல்யாணம் ஆகி அந்த அரண்மனை வீட்டில் கூட்டுக்குடும்பமாய் சந்தோஷமான வாழ்க்கை. இரண்டு அண்ணன்களும் பள்ளிப்படிப்போடு நிறுத்தி தந்தைக்கு உதவியாய் நகை பிஸினெஸை கவனித்துக் கொள்ள போய்விட... கடைக்குட்டியாய், சுட்டிப் பெண்ணாய் அந்த வீட்டில் வளை வந்தது விளையாடி மகிழ்ந்தது மாதுரி ஒருவள் மட்டுமே!

அதனால் அப்பா செல்லம், இரண்டு அண்ணன்கள் செல்லம் என மூன்று செல்லங்களும் ஒருசேர கிடைக்க குதூகலமாய் வளர்ந்தாள் மாதுரி!

ஆனால் இதற்கு நேர் எதிர் சூழல் கதிரவனுடையது. சாதாரண மிடில் கிளாஸ் குடும்பம்... ஒய்வு பெற்ற தமிழாசிரியரான அவனது தந்தை சென்ற வருடம் இறந்துவிட அவரது பென்ஷனிலே தாய், இரண்டு தங்கைகள், தம்பி, என நடுத்தர வாழ்க்கையாய் வாடகை வீட்டில் வசிக்கும் சூழ்நிலை. கதிரவனுக்கு.

கல்லூரி படிப்பை முடித்து கதிரவன் உடன் வேலை தேடி சம்பாதிக்க ஆரம்பித்தது அவனது இரண்டு தங்கைகளின் படிப்புச் செலவை சமாளிக்க ரொம்பவே உதவியது. மேலும் அவன் வேலை பார்க்கும் மல்டிலெவல் மார்க்கெட்டிங் கம்பெனியில் கடுமையாக உழைத்து வேலையில் தன் திறமையைக் காட்டி பல உயர் பதவிகளையும் கை நிறைய சம்பளத்தையும் வெகு சீக்கிரமேஅவனால் பெற முடியும். அதன் மூலம் தங்கைகளை நல்ல இடத்தில் கட்டி கொடுத்து தம்பியை ஒரு நல்ல நிலைக்கு கொண்டு வந்து என அவனது எல்லா குடும்பப் பொறுப்புகளையும் திறன்பட சமாளித்து

அவன் ஒரு நல்ல நிலையை அடைந்து விடலாம்தான்!

ஆனால்....?

அப்போதும் அவனது பொருளாதார நிலைக்கும் மாதுரியின் கோடீஸ்வர நிலைக்கும் ஏணிவைத்தாலும் எட்டாத தூரம்தான். அதிகமான இடைவெளிதான் இருக்கும்.

இதற்கு என்ன செய்வது?

இருவரும் திகைத்துப் போய் அப்படியே உட்கார்ந்து விட்டார்கள்.

'தெரியாத்தனமாய், முன் பின் யோசிக்காமல் நாம் காதலித்து விட்டோமோ... மது...?' என்றான் ஒருநாள் கதிரவன் வருந்தும் குரலில்.

'எனக்கு அப்படி வருத்தம் சிறிதும் இல்லை...' என்றாள் தெள்ளத்தெளிவான குரலில் மாதுரி.

'எப்படி மது? கொஞ்சமும் பொருத்தமில்லாமல் அல்லவா நம் ஸ்டேட்டஸ் பிரச்சினை எழும்புகிறது...?'

'அதைப் பற்றி கவலைப்படாதீர்கள் சரிப்படுத்தி விடலாம்...' என்றாள் உறுதியான குரலில்

'எப்படி?'

'இன்று அப்பாவிடம் இது பற்றி பேசிவிடப் போகிறேன்...' என்றாள் அவள் புது தைரியம் வந்தவளாய்.

மாதுரியின் தந்தை மோகன்ராம் பிரபலமான ஐஸ்வர்யா ஜுவல்லர்ஸை உருவாக்கியவர். தாய் லதாங்கி. தயானந்தன், குணசீலன் என ஐந்து வருட மூப்பில் இரண்டு அண்ணன்கள், பாரதி, திலோத்தமா என இரு அண்ணிமார்கள்.

மாதுரி எப்போதுமேகலகலடைப் ஆனதால் கல்லூரி விட்டு வீடு வந்தால் போதும். அண்ணிகளிடம் ஒரே அரட்டைதான்; அவரகளுடன் ஷாப்பிங், சினிமா என ஊர்சுற்ற கிளம்பி விடுவாள்.

அண்ணிகளுக்கும் அவளுக்கும் கொஞ்சமேவயது வித்தியாசம் இருந்ததால் இருவருமேதோழிகளைப் போலவே



மாதுரியுடன் பழகினர்.

தந்தை எவ்வளவுக்கு எவ்வளவு கண்டிப்பு காட்டுவாரோ அந்த அளவுக்கு அவள் மீது பாசத்தையும் காட்டுவார். அந்த தைரியத்திலேயே அவரிடம் தன் காதல் விஷயத்தைப் பற்றி துணிச்சலாய் பேச முடிவெடுத்தாள் மாதுரி.

'அப்பா, உங்களிடம் ஒரு முக்கியமான விஷயம்...' என்று இழுத்தபடி ஒருநாள் இரவு பால்கனிப் பக்கம் தனியே காற்று வாங்கிக் கொண்டிருந்தவரிடம் ஆரம்பித்து விட்டாள் மாதுரி. 'என்ன விஷயம், சொல்லு செல்லம்...!' என ஆர்வமாகவே கேட்டார் மோகன்ராம்.

ஆனால் அவள் விஷயத்தைச் சொல்லச் சொல்ல அவரது முகம் மாறிவிட்டது. இப்படிப்பட்ட ஒரு விஷயத்தை அவர் சற்றும் எதிர்பார்க்கவில்லை.... என்பதை அதிர்ச்சியடைந்த அவரது முகமேஎடுத்துக் காட்டியது.

ஆனாலும் எவ்வித சலனமும் காட்டாது, குறுக்கே எதுவும் பேசாமல் அவளை முழுவதுமாய் சொல்ல விட்டு கவனமாய்க் கேட்டார்.

அவள் மாதுரி தயங்கித் தயங்கி ஒருவழியாய் கதிரவன் பற்றியும், தாங்கள் ஒருவரை ஒருவர் இரண்டு ஆண்டுகள் நேசிப்பது பற்றியும் அவள் விரும்பிய கதிரவனே அவளுக்கு மணாளனாய் வந்து விட்டால் உலகிலேயே மிகமிக சந்தோஷம் அடைவது அவளாகத்தான் இருக்கும் எனவும்அந்த விலைமதிப்பில்லா மகிழ்ச்சியை அவள்பெற அவர்தான் பெரிய மனது பண்ணி உதவ வேண்டும்....! என்றும் அவள் கெஞ்சும் குரலில் சொன்னபோது தன்னை மறந்து, தான் கொண்டிருந்த இறுக்கத்தை மீறி டக்கென சிரித்துவிட்டார் மோகன்ராம்.

பக்கத்தில் வந்து அவள் தலையை செல்லமாய் தட்டியவர், 'மீன்குஞ்சுவுக்கு நீந்தவா கற்றுக்கொடுக்க வேண்டும்? என் பொண்ணாயிற்றே.. என்னைப் போலவே அல்லவா லாவகமாய் பேசுகிறாய்...?' என அதே சிரிப்புடன் சொன்னவர் பின் சட்டென

சீரியஸாகி, 'இது நான் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை மாதும்மா...'! என்றார் ஏமாற்றம் தொனிக்கும் குரலோடு

'என்னை மன்னித்து விடுங்கள் அப்பா..' என்றாள் அவள் அவரது கைகளைப் பற்றி மறுபடியும் கெஞ்சுவது போல். பின், 'நான் செய்தது..... தவறா...?' என கேட்டு விட்டு அவளே, 'தவறு! தவறுதான்! என்னை மன்னித்து விடுங்கள்.... ப்ளீஸ்!' என்றாள் மெல்லிய குரலில் விழிகள் தரை தாழ நோக்கியபடி.

மோகன்ராம் உடன் ஒன்றும் பேசவில்லை. சில நிமிடங்கள் மௌனமாகவே இருந்தார். அவளும் அவரை நிமிர்ந்து பார்க்கும் தைரியம் இல்லாம் குனிந்தே இருந்தாள்.

சிறிது நேர அமைதிக்குப்பின் தொண்டை கணைப்புடன் பேச்சை ஆரம்பித்தவர், 'ஆனாலும் எனக்கு மிகப்பெரிய அதிர்ச்சி. ஏமாற்றம் மாது....! உன்னிடமிருந்து இப்படியொரு செய்தியை நான் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை.....' என குரல் கம்மச் சொன்னவர் மறுகணமேஅதை ஜீரணிப்பது போல், 'ஆனாலும் இனி என்ன செய்ய? சரியா... தவறா... குற்றமா... குற்றம் இல்லையா... என்றெல்லாம் விவாதிப்பதைவிட என்ன முடிவை எடுக்க வேண்டும் என்பது தான் இப்போது முக்கியம்...' என நிறுத்தினார்.

பக்கத்தில் வந்து மாதுரியின் கண்களை கூர்ந்து பார்த்தார்.

மிரட்சியுடன் படபடத்த அவளது விழிகளை உற்று நோக்கி விட்டு, 'பயப்படாதே செல்லம். எனக்கு எல்லாவற்றையும் விட உன் மகிழ்ச்சிதான் முக்கியம். அதுவும் நீ சொன்னாயே அந்த விலைமதிப்பில்லாத மகிழ்ச்சி உனக்கு கிடைக்கும். அதற்கு உன் பாசமான தந்தை ஒரு போதும் குறுக்கே நிற்க மாட்டார். போதுமா?' என்றபோதுதான் அவளுக்கு மூச்சே வந்தது.

கண்களில் ஆனந்தமாய் நீர் தளும்பி, 'தாங்க்ஸ்... டாடி!... தாங்க்ஸ் டாடி...!' என பேச வார்த்தைகளின்றி சட்டென உருகிப் போனாள் அவள்.

தொடர்ந்து மோகன்ராமே, 'எனக்கு சம்மதம்தான். ஆனாலும் எனக்கு ஒருநாள் அவகாசம் கொடு. சில விஷயங்களை



விசாரித்துவிட்டு, சில யோசனைகளை மனதுள் செய்துவிட்டு உன்னிடம் விரிவாய் பேசுகிறேன்...!' என்றார்.

மகிழ்ச்சி பொங்கினாலும், ஒரு கணம் திகைத்தவளாய் பயமாகவே அவருக்கு தலையசைத்தாள் மாதுரி!



## 3



மாதுரிக்கு தந்தை சொன்ன அந்த ஒரு நாள் அவகாசமும் திக் திக் கென்றுதான் இருந்தது.

அவளுக்கு தந்தையைப் பற்றி நன்கு தெரியும். தொழிலானாலும் சரி, குடும்ப மானாலும் சரி எடுத்தோம் கவிழ்த்தோம் என்றில்லாமல் ஆழ்ந்து சிந்தித்துதான் முடிவெடுப்பார். அதுபோல் அவர் எடுக்கும் முடிவுகளும் நல்லதாகவே அமையும். அமைந்திருக்கிறது.

மேலும் சிறுவயதிலேயே மாதுரி தாயை இழந்து விட்டதால் அந்த தாய்ப்பாசத்திறகான ஏக்கம் அடிக்கடி அவளுள் எதிரொலிக்கும். எல்லோருக்கும் கிடைத்த அந்த தாய்ப்பாசம் தனக்கு கிடைக்கவில்லையே... எனதாயின் புகைப்படத்தின் முன்னால் கண்கள் வெறிக்க பலமுறை நின்றிருக்கிறாள்.

இப்படி சாந்தமும் புன்னகை முகமும் கூடிய அம்மா மட்டும் இன்று உயிரோடு அவளுடன் இருந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்? அவளைப் புரிந்து கொள்வாளே? இப்படி தந்தையிடம் தயங்கித் தயங்கி சொல்ல வேண்டிய அவசியமில்லாமல் தானே அந்த பொறுப்பை எடுத்துக்கொள்வாளே?

நாம் கொடுத்து வைத்தது அவ்வளவுதான்! என ஒரு முடிவுக்கு வந்து அடிக்கடி சலித்துக்கொள்வாள் மாதுரி.

ஆனால் மோகன்ராம் அவளுக்கு அந்த குறைபாடு தெரியாமல் தன் மொத்த பாசத்தைக் காட்டியும் வளர்த்தார். அதற்காகவே அவர் தாயின் மறைவுக்குப் பின் எவ்வளவோ பேர் வற்புறுத்தியும் மறுமணம் புரிவதை கூட தவிர்த்து விட்டார்.

இப்படி அவரது உறுதியான முடிவுகளை, நிலைப்பாடுகளை அவ்வப்போது உணரும் போது அவள் நெகிழ்ந்தவளாய், 'யூ ஆர் கிரேட் டாடி! உங்கள் மகளாய் நான் பிறக்க கொடுத்து வைத்திருக்க வேண்டும்...' என்றெல்லாம் சொல்லி பூரிப்படைவது உண்டு.

அதனாலே இப்போதும் தந்தை ஒரு நல்ல முடிவையே எடுப்பார் என நம்பினாள். தந்தையின் ஒப்புதம் கிடைத்ததும் இரண்டு தனையன்களிடம் அவள் விஷயத்தைச் சொல்ல வேண்டும்.

அவர்களும் 'மதுக்குட்டி! மதுக்குட்டி!' எனக் கொஞ்சி அன்பைப் பொழியும் பாசக்கார அண்ணன்மார்கள்!

என்ன அப்பாவின் கண்ணசைவிற்கே பயந்துகட்டுப்படுகிறவர்கள். அதனால் தந்தை காதல் விஷயத்திற்கு சம்மதித்தது தெரிந்தாலே எவ்வித எதிர்ப்பும் காட்டாது அவர்களும் தலையாட்டி விடுவார்கள்.

ஆக... தந்தையின் முடிவுதான் முக்கியம். கதிரவன் கூட இன்று காலையே அவளுக்கு ஃபோன் அடித்து பரபரத்தான். என்னாயிற்று? தந்தை என்ன சொன்னார்? என்றே ஆவலில் துடித்தான்.

'ஒருநாள் பொறுங்கள். நல்ல முடிவு கிடைக்கும்...' என்றாள் அவளும் குரலில் உறுதி தொனிக்க.

ஒருநாள் கழிந்து மறுநாள் இரவில் அதேபோல் பால்கனிப் பக்கம் அவளை அழைத்துப் பேச ஆரம்பித்தார் மோகன்ராம்.

பேச்சைத் தொடங்குவதற்கு முன் தலைசாய்த்து திகிலாய் விழிகள் விரிய நின்ற அவளின் நிலை கண்டு சிரித்தே விட்டார். அதே குறுகுறுப்பில், 'முதலில் வாய்விட்டு நன்றாக சிரிப்பாயாம். அப்போதுதான் மேலும் சிரிக்கும்படி விஷயத்தைச் சொல்வேனாம்...' என்றதும் கலகலவென தான் கிண்கிணி சிரிப்பை உதிர்த்தாள் மாதுரி.

பின் மோகன்ராம் தொடர்ந்தவர், 'செல்லம், நேற்றேதான் உனக்கு ஒப்புதல் கொடுத்து விட்டேனே...? பிறகு எதற்கு கலக்கம்?' என வினவிவிட்டு முகம் சற்று சீரியஸாக, 'என்னனால் உன் நிலையை,



உன் மனதுக்குள், காதல் என்னும் மாயை தோற்றுவித்த ஆசையை நன்றாக புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால் என் நிலையில் இருந்து, அதாவது பெற்ற செல்ல மகளுக்கு ஆசை ஆசையாய் ஒரு நல்ல மாப்பிள்ளையைப் பார்த்து கண்குளிர கட்டிவைக்க வேண்டும் என்ற கடமை, அந்த கடமையில் கிடைக்ககூடிய பெருமிதம் எல்லாம் நிராசையாக போய் விடுகிறது... பார்த்தாயா...? அது... எனக்கு பெரும் அதிர்ச்சிதான். ஆனாலும் நான் ஜீரணித்துக்கொள்கிறேன் செல்லம்... உனக்காக மட்டுமல்ல...'

'மாறி வரும் ஹைடெக் உலகில் இனியும் பழைய பஞ்சாங்கமாய் சம்பிரதாயங்களை மட்டும் பேசிக் கொண்டிருந்தால் போதாது... என்ற காரணத்தினாலும் தான். அதனால் நான் சம்மதம் என முடிவு செய்துவிட்டேன். உன் காதலுக்கு பச்சைக் கொடி காட்டி நீ விரும்பும் அந்த கதிரவனை நானே அவர் வீடு தேடிச்சென்று பெண்கேட்டு கல்யாணத்திற்கு ஏற்பாடு செய்கிறேன். ஆனால்....'

கடகடவென சொல்லிக்கொண்டே போன மோகன்ராம் டக்கென நிறுத்தி அவளைக் கூர்ந்து பார்த்தவாறு, 'எல்லாவற்றும் பதிலாக ஒரே ஒரு... நிபந்தனையை.... ஒரே ஒரு விருப்பத்தை மட்டும் உன் சைடில் இருந்து எதிர்பார்க்கிறேன். அது உன் கதிரவன் வீட்டோடு மாப்பிள்ளையாய் நம் வீட்டுக்கு வந்துவிட வேண்டும். என் ஆசை மகளான நீ எப்போதும் நான் கண்குளிரப் பார்க்கும்படி சந்தோஷமாய் வாழ்க்கை நடத்த வேண்டும்.... என்பது தான்!'

மோகன்ராம் பேசி முடித்து விட்டார். வடித்து வைத்த கோயில்சிலை போல் சில மணித்துளிகள் அவள்தான் அசைவில்லாமல் அப்படியே நின்று விட்டாள்.

வீட்டோடு மாப்பிள்ளை...!

எவ்வளவு பெரிய வார்த்தை!

சொலலப்போனால் ஒரு ஆண்மகன் தன்னை பணம் கொடுத்து விலைக்கு வாங்கும் நிலையைப் போல் அல்லவா நினைக்கக் கூடும். நினைக்க வைக்கும்?

ஒருவேளை மிகப்பெரிய தொழிலதிபராய் இருக்கும் தந்தை

அதே பிசினஸ் பாணியில் கதிரவனை வளைத்து விலைக்கு வாங்கப் பார்க்கிறாரா?

காதலுக்கு சம்மதிப்பது போல் சம்மதித்து சூசகமாய் அதிலும் ஒரு லாபம் பார்த்துவிட அவர் போட்டிருக்கும் திட்டம்தானா இது?

இதற்கு எப்படி கதிரவன் சம்மதிப்பான்? மேலும் இப்படி கதிரவன் இதற்கு சம்மதிக்க மாட்டான் என யூகித்துதான் இப்படி ஒரு நிபந்தனையை தந்தை கோரிக்கையாய் வைக்கிறாரா?

என்னென்னவோ யோசனைகள். பதில் தெரியாத கேள்விகள்!

திரும்பவும் ஒருவித நப்பாசையில், இதைத்தவிர வேறு எதுவும் வழி இருக்கிறதா? என தந்தையிடம் கேட்டுப் பார்த்தாள்.

'ஸாரி செல்லம். நான் உன் காதலை அனுமதிப்பதே பெரியவிஷயம். அதனால் இந்த நிபந்தனை மிகமிகமுக்கியம்...!' என கருராய் சொல்லிவிட்டார் மோகன்ராம்.




குழப்பமாய் இருந்தாலும் அன்று இரவு முழுவதும் மாதுரிக்கு ...க்கம் வரவில்லை. ஒரே பரவசம்தான்! அப்பா காதலுக்கு சம்மதித்து ...ட்டார். இனி கதிரவனோடு கல்யாணம்தான் என குபீரி ...தோஷத்துடன் எழுந்த ஆரவார மகிழ்ச்சி, அப்பாவின் ...க்கியமான நிபந்தனை ஞாபகத்திற்கு வர சற்றே அமர்ந்து ...டங்கவும் செய்தது.

அப்பா எல்லாவற்றையும் சொல்லிவிட்டார். தனது கருத்தை, ...து உண்மையான அக்கறையை நியாயப்படுத்திவிட்டார்.

ஆனால் கதிரவன் இதற்கு ஒப்புக் கொள்ளவேண்டுமே?

வீட்டோடு மாப்பிள்ளை என்பது லேசா? தன் குடும்பத்தை ...றிவிட்டு வர வேண்டுமே? தன்னையே நம்பி இருக்கும் அவர்களை ...போவென விட்டுவிட்டு வர கதிரவன் எப்படி சம்மதிப்பான்?

தனக்கு ஒரு பணக்கார சொகுசு வாழ்க்கை கிடைக்கிறது



என்பதற்காக சுயநலமாய் செயல்படுவது நேர்மைதவறுவது அவனது குணம் அல்லவே? மேலும் அவன் மாதுரியைக் கவர்ந்தது.

மாதுரிக்கு அவனிடம் பிடித்தது அந்த நேர்மையான குணம், தெளிவான சிந்தனைதானே?

அதையே பலிகேட்பது போல் நடந்து கொள்ளச் சொல்வது எப்படி நியாயமான ஒன்றாகும்?

ஆனால் அப்பாவைச் சொல்லியும் தப்பில்லை? அவர் தெளிவாகவே அவள் புரியும்படியே விளக்கிவிட்டார். இவ்வளவு அரும்பாடு பட்டு நான் சேர்த்த பணத்தில் எனது அருமைமகள் வாழாமல் எங்கோ ஒரு வாடகை வீட்டில் போய் வாழ்கிறேன் என்றால்... அது நான் உழைத்து சம்பாதித்த பணத்தை, என் உழைப்பை அவமானப் படுத்துவது போல் ஆகிவிடாதா? என்கிறார்.

மேலும் மாப்பிள்ளை தன் குடும்பத்திற்கு தனது சம்பளப் பணத்தை மட்டும் அல்ல வேறு தேவைப்படும் என்ன உதவிகளை வேண்டுமானாலும் செய்யலாம். யாரும் குறுக்கே வர மாட்டார்கள் என்கிறார்.

அதனால் அப்பாவின் பேச்சும் நிபந்தனையும் நியாயமாகத்தான் தோணுகிறது.

ஆனால் எப்படி இதை செயல்படுத்துவது?

கதிரவனுக்கு இது பாதிப்பில்லாத ஒன்று என்று புரியவைத்து அவனை சம்மதிக்க வைக்க வேண்டுமே?

யோசித்தபோது அந்த திட்டம் இலகுவாய் அவளுள் உருப்பெற்றது.

மறுநாள் கதிரவன் ஃபோனில் தொடர்பு கொண்டு தந்தையின் முடிவு பற்றி கேட்டபோது மாலை அவன் வீட்டிற்கு வந்து எல்லாவற்றையும் விளக்கமாய் சொல்வதாய் தெரிவித்தாள்.

வீட்டில் வைத்தா....? என ஒரு ஆச்சரியத்துடன் ஃபோனை வைதது விட்டான் கதிரவன். வழக்கமாய் அவர்கள் சந்திக்கும் லைப்ரரி, ரெஸ்ட்டாரண்ட் என அதையெல்லாம் தவிர்த்து விட்டு வீடு எனறு சொல்கிறாளே... என்ன காரணமாக இருக்கும்? என்று

குழம்பினான்.

ஆனால் மாதுரியின் திட்டமும் அதில்தான் அடங்கியிருந்தது.

அப்பா சொன்ன நிபந்தனை சரியோ... தவறோ... எதுவும் உள் நோக்கம் கொண்டதோ அவளுக்குத் தெரியாது. ஆனால் இப்போது அதன்படி நடந்து கொண்டால்தான் அவர்களது கல்யாணமேநடக்கும்.

அப்பா சொல்லியது போல் அவர் இப்படி சம்மதிப்பதே, காதலை அனுமதிப்பதே பெரிய விஷயம்தான்!

அதனால் கதிரவனை இதற்கு எப்படியும் சம்மதிக்க வைத்தாக வேண்டும்.

தனியே அவனுடன் பேசினாள் அவன் ஒருபோதும் சம்மதிக்க மாட்டான். ஆனால அவன் வீட்டு உறுப்பினர்களுடன் அவர்கள் முன்னிலையில் பேசினால்... தன் பேச்சின் நியாயத்தை அவர்கள் உணரக்கூடும். அவர்களும் வற்புறுத்தக்கூடும். இதுதான் மாதுரியின் திட்டமும் கூட.

மாதுரி கதிரவனின் வீட்டிற்கு ஒரிருமுறை சென்றிருக்கிறாள். எனது கல்லூரி ப்ரெண்ட் என்று கூறி அவன் வீட்டு உறுப்பினர்களுக்கு எல்லாம் கதிரவன் அவளை அறிமுகப்படுத்திடி இருந்தான்.

அப்பா, அம்மா தம்பி தங்கைகள் என அன்பான சூழ்நிலை, அவர்கள் பாசமாய் பழகியவிதம் எல்லாம் மாதுரிக்கு ரொம்பவும் பிடித்திருந்து. இப்படிப்பட்ட சொந்தங்களுடன் வாழ நாம் கொடுத்துவைத்திருக்கவேண்டும் நாம் அதிர்ஷடசாலிதான்! என அப்போதெல்லாம் மாதுரி நினைத்ததுண்டு.

ஆனால் இப்போது தந்தையின் நிபந்தனையால் அவை எல்லாவற்றையும் இழக்க வேண்டுமேஎன்ற கவலை தோன்றியது.

தனக்கே இப்படித் தோன்றுமானால் பிறந்து வளர்ந்து அவர்களுடனே வாழும் கதிரவனால் மட்டும் எப்படி அவர்களை



உதறிவிட்டு வர முடியும்?

பெரும் கவலை தாக்க மனதில் கலக்கத்துடன் தான் அன்று மாலை கதிரவன் வீடுதேடி பேசச்சென்றாள்.

மாதுரி அடுக்கு மாடி குடியிருப்பின் பிளாட் ஒன்றில் இருந்த கதிரவன் வீட்டு பஸ்ஸரை அழுத்திய போது திறந்தது கதிரவனின் சுட்டித் தங்கை உதயாதான்.

'ஹாய்! வாட் எ சர்ப்பரைஸ்! வாங்க! வாங்க!' என முன்பொருமுறை அவள் வந்திருந்ததை ஞாபகம் வைத்து வரவேற்றாள். அவள் உதயா ப்ளஸ்டு. அவளுக்கு மூத்தவள் அக்கா வசுமதி. அவள் கல்லூரியில் இரண்டாம் ஆண்டு. தம்பி பாலு பள்ளிப் படிப்பு என கதிரவன் சொல்லக் கேட்டிருந்தது அவள் ஞாபகத்தில் ஓடியது.

அவள் இனிமையான புன்சிரிப்புடனே உள்ளே நுழைய அரவம் கேட்டு உள்ளறையில் இருந்த கதிரவன், கிச்சனிலிருந்த அம்மா கற்பகம் தோட்டப் பக்கம் இருந்த இன்னொரு தங்கை வசுமதி என எல்லோரும் வந்து விட்டனர்.

கதிரவன் அவள் முகத்தையே உற்று கவனித்து விஷயத்தை படிக்க முயன்று கொண்டிருந்தான். கற்பகம் கொடுத்த வடை காபி உபசரிப்பை மென்று தின்றவள் பேச்சை எப்படி ஆரம்பிப்பது என தவிக்கவே செய்தாள்.

ஆனால் கதிரவன் அவர்களது காதலையும் அவளது தந்தையிடம் அவள் தெரிவிக்கப்போகுமவிஷயத்தையும் வீட்டில் முன்பே தெரிவித்திருப்பான போலும். அவளது சங்கடத்தை போக்குவதுபோல், 'அம்மா, நான் சொன்ன எங்களது காதல் விஷயம், அதுபற்றி மாதுரி தன் தந்தையிடம் பேசிவிட்டாள். அவர் சொன்ன முடிவு பற்றிதான் நம்மிடம் பேச வந்திருக்கிறாள்...' என அவன் எடுத்துக் கொடுத்ததும் தயக்கம் நீங்க கடகடவென விஷயத்தைக் கொட்டிவிட்டாள் அவள்.

வீட்டோடு மாப்பிள்ளை... என்ற தந்தையின் நிபந்தனை பற்றி சொல்லவந்தபோதும் சொல்லும் போதெல்லாம் அவளால்

கதிரவன் முகத்தை நிமிர்ந்து கூட பார்க்க முடியவில்லை.

அவளுக்கே அந்த வார்த்தைகளைப் பிரயோகிக்க கஷ்டமாகத்தான் இருந்தது.

கதிரவன் கோபமுற்று முகத்திலடித்தாற்போல், எடுத்தெறிந்து பேசிவிடுவானோ என்ற பயமும் அவளை வாட்டியது.

அவள் விஷயம் முழுவதையும் சொன்னவள் கூடவே அவர்களது குடும்பத்திற்கு கதிரவனின் சம்பளம் மட்டுமில்லாது எல்லாவித உதவிகளையும் செய்ய காத்திருப்பதாக தந்தை உறுதிபட கூறியதையும் அழுத்தமாய் தெரிவித்தாள்.

கொஞ்ச நேரம் ஒருவர் முகத்திலும் சலனமில்லை. அசையாமல் அப்படியே உட்கார்ந்திருந்தனர்.

கதிரவன்தான் சில நிமிட அமைதிக்குப்பின் பேசினான்.' இது கொஞ்சமும் சரிப்பட்டு வராது மாது. உன் தந்தையிடம் உனக்கு வேறு இடத்தில் வீட்டோடு மாப்பிள்ளையை தேடிக்கொள்ளச் சொல்லு!' என்றான் முகம் இறுக.




கதிரவன் அப்படி ஒரு முத்து உதிர்ப்பான் என மதுரி எதிர்பார்த்ததுதான். அதனால் அவள் கொஞ்சமும்அதிர்ச்சியடையவில்லை!

பதிலுக்கு, நீங்கள் சொல்வது ரொம்பவும் சரி. அப்பா சொன்னபோது எனக்கும் இப்படித்தான் கோபமாய் தோன்றியது... என்றாள் அவர்கள் எல்லோரையும் அதிர வைத்தவாறு.

அதே திகைப்புடன் எல்லோரும் திரும்பி அவளைப் பார்க்க விளக்கினாள் அவள்.

பின் எப்படி பாசமாய் அன்பாய் தனக்கு இருக்கும் குடும்பத்தை உதறிவிட்டு யாரால்தான் தனக்கென சுயநலமாய் ஒரு வாழ்க்கை அமைத்துக் கொள்ளப் பிடிக்கும்? நீங்களே சொல்லுங்கள்!



மாதிரி எதிர் கேள்வி கேட்க கதிரவன் உட்பட எல்லோர் முகத்திலும், இவள் என்னதான் சொல்ல வருகிறாள்? என்ற குழப்பரேகை பரவியது.

அப்படியானால் 'உன் தந்தையிடம் பதிலுக்கு நீ என்னதான் சொன்னாய்?' என்றான் கதிரவன் பொறுமையிழந்தது போல்.

மாதுரியும் அதை ஆமோதிப்பது போலவே தலைவெட்டியவள், 'எல்லாம் நீங்கள் சொன்னது போல்தான். அப்பா இப்படி நீங்கள் இந்த நிபந்தனை போடுவதும்...எனது காதலை மறுத்து... என்னிடம் கதிரவன் மறக்கச் சொல்வதும்... ஒன்றுதான். என்ன சுற்றிவளைத்து உங்கள் மறுப்பை என்னிடம் தெரிவிக்கறீர்கள்... என்று சண்டை போட்டேன்....' என்றபடி திரும்பவும் கதை சொல்வது போல் ஆரம்பித்து அவள் நிறுத்த எல்லோரும் அவள் முகத்தையே பார்க்க ஆரம்பித்தனர்.

'பதிலுக்கு அவர் என்ன சொன்னார் தெரியுமா?' என்று அதே போல் குரல் உயர்த்தி ஆரம்பித்தவள், அவர் சொல்கிறார் 'மாதும்மா, நீ அப்படியோசிப்பது தப்பு. ஒன்றை நன்றாகப்பார். ஸ்டேட்டஸ், பணம், அந்தஸ்... என எல்லாவற்றையும் ஒதுக்கிவிட்டு நான் கல்யாணத்திற்கு சம்மதிக்கிறேன். நீ கை காட்டியவரை மனமார மாப்பிள்ளையாய் ஏற்றுக்கொள்கிறேன். பதிலுக்கு நான் விருப்பப்படும் இந்த சின்ன உபகாரத்தை நீ ஏன் செய்யக்கூடாது? மேலும் நீ எனது ஒரே செல்லப்பெண், செல்லக்குட்டி, உன்னை ஆசையாய் வளர்த்துவிட்டு வயதான காலத்தில் உன்னைப் பிரிந்து அந்த துயரை நான் அனுபவிக்க வேண்டுமா? அப்புறம் இன்னொரு முக்கியமான விஷயத்தையும் நீ தெரிந்துகொள்... இந்த கதிரவன் மட்டுமல்ல... வேறு ஒரு மாப்பிள்ளை வரனை நான் உனக்காக தேடினாலும் இப்படி வீட்டோடு மாப்பிள்ளையாய் வரவேண்டும் என்றுதான் நிபந்தனை வைப்பேன்... அப்படி ஒரு எண்ணத்தைதான் மனதுள் இவ்வளவு நாளும் ஆசையாய் தேக்கி வைத்திருந்தேன். நான் சொல்லும் இந்த விஷயங்களை போய் விரிவாய் உன் மாப்பிள்ளை வீட்டாரிடம் சொல் புரிந்து கொள்வார்கள்... என்கிறார். எனது தந்தை.....!'என ஒருவாறு தனது நீண்ட உரையை முடித்தாள் மாதுரி.

என்னவோ அவள் அப்படி யோசித்து வைத்து அதே போல் பேசியது தந்தையின் நிபந்தனையை ஓரளவு நியாயப்படுத்துவது போல் கூறி, அப்படி ஒரு கருத்தை அவர்களுக்கு தோற்றுவிக்கவேண்டும் என்பதுதான்.

திரும்பவும் குழப்பமாய் யோசிக்க ஆரம்பித்த அவர்களது முகத்தைப் பார்த்ததும் அதில் ஓரளவு வெற்றிபெற்று விட்டதைப் போலவே அவள் உணர்ந்தாள்.

யோசனை செய்யட்டும். நம் மணம் விரும்புவது போல் ஒரு நல்ல முடிவாக ஒன்றை அவர்கள் எடுக்கட்டும்! மனம் உருக நினைத்தவள் கூடவே அவர்களுக்கு உடனே முடிவெடுக்கும்படி எவ்வித நிர்பந்தத்தை கொடுக்ககூடாது என்ற யூகிப்போடு, அவசரமில்லை. நன்கு யோசித்து உங்கள் முடிவைச் சொல்லுங்கள். நான் கிளம்பட்டுமா? என எழுந்து விட்டாள்.

கதிரவனே அவளது இந்த செய்கையை எதிர்பார்க்கவில்லை.

வந்தாள். விஷயத்தைச் சொன்னாள். தனக்குஅதில் எவ்வித சம்பந்தமும் இல்லா மூன்றாம் மனுஷி போல் எல்லாவற்றையும் சொல்லிவிட்டு, நீங்களே முடிவெடுங்கள்... என்றபடி அகலவும் போகிறாள்... ஆக... அவள் எண்ணத்தை அவள் கருத்தை அவள் சொல்லவே இல்லையே?

விடுவிடுவென முன்னால் சென்றவளின் பின்னாலே யோசனையோடு வந்த கதிரவன், மாது, நில்! என்றான்.

நின்று திரும்பிப் பார்த்தாள்.

'நீ ஒன்றும் சொல்லவே இல்லையே... உன் முடிவுதான் என்ன?'

இம்முறை பதில் சொல்லாமல் அவள் கண்களை விரித்து அவனையே பார்த்தாள்.

'அது... உங்களுக்குப் புரியாததா? உங்களால் புரிந்து கொள் முடியவில்லையா?' என்றாள் மைவிழிக் கண்களை சிமிட்டியபடி

கதிரவனும் இறுக்கம் தளர்ந்து புன்னகைத்தவன்,



இருந்தாலும் உன் செவ்விதழ்கள் மூலம் காதுகுளிர அதை கேட்க விரும்புகிறேன்... என்றான் எதையோ யூகித்தது போல்.

மேலும் கண்கள் விரிய மலர்ச்சியாய் சிரித்தவள், நீங்கள் யூகித்தது ரொம்பவும் சரி கதிரவன். நீங்கள்இல்லாத ஒரு வாழ்க்கையை என்னால் நினைத்துப் பார்ப்பது கூட முடியாது. அதுதான் உண்மை..! என்றாள்.

அதற்கு மேல் பேசினால் நாம் கண்கலங்கி உடைந்து விடுவோம் என பயந்தாலோ என்னவோ அத்தோடு நிறுத்திவிட்டு அவனிடம் விடைபெற்று கிளம்பிவிட்டாள்... அவள்.

அவள் போவதையே கவலையேடு பார்த்த கதிரவனின் முகத்திலும் குழப்பமான இறுக்கமெல்லாம் தளர்ந்து புதுவித சிந்தனையொன்று உயிர்பெற ஆரம்பித்தது.

அன்று முழுவதும் கதிரவன் குடும்பத்தினர் விடிய விடிய யோசித்தனர் என்றுதான் சொல்லவேண்டும்.

கடைசியில் மறுநாள் அம்மாவும் தங்கைகளும் தன்னிடம் வந்து சொனன முடிவைக் கேட்டு கதிரவன் அதிர்ந்துதான் போனான்.

'வீட்டோடு மாப்பிள்ளையாய் நீ செல்வதுதான் சரி!' என்றனர் ஒரே குரலில்.

'என்னம்மா இப்படிச் சொல்கிறீர்கள்?' என தாயைப் பார்த்து பதறித்தான் கேட்டான் அவன்.

அமைதியாய் விளக்கினாள் தாய் கமலம். 'கதி«வா, அவர்கள் அப்படி கேட்பதில் ஓரளவு நியாயம் இருக்கத்தான் செய்கிறது. எவ்வளவு பெரிய கோடிஸ்வர இடம் அது. அவர்களே ஸ்டேட்டஸ் பார்க்காது இறங்கி வந்து உன்னை மாப்பிள்ளையாய் ஏற்றுக்கொள்ளும்போது, நாமும் கொஞ்சம் இறங்கி வருவதால் தப்பில்லைதான்! மேலும் வீட்டோடு மாப்பிள்ளையானால் என்ன.... நீ... எங்களைவிட்டு எங்கோ தூரமாக போய் விடுவாயா? இல்லையே! எப்போது நினைத்தாலும் நீயோ நானோ ஒருவரையொருவர் உடனே பார்த்துக்கொள்ளலாம் தானே? அதனால் நீ எதையும் யோசிக்காமல் வேறு எது பற்றியும் குழம்பாமல்

உடனே உன் சம்மதத்தைக் கூறி கல்யாண ஏற்பாடுகளை தொடங்கச் சொல்...!' என்றாள். உறுதியாய் தெளிவான குரலில். தாயின் கருத்துக்களையே தம்பி தங்கைகளும் வலியுறுத்திப் பேச... கதிரவனுக்கு வேறு வழியில்லாமல் போயிற்று.

அரை மனதுடன் அன்று மாலை வீடு தேடி வந்த மாதுரியிடம் தன் வீட்டாரின் சம்மத விஷயத்தைச் சொன்னான். அப்படியே குதூகலம் பொங்க துள்ளிக் குதித்தாள் மாதுரி!






அன்று அந்த சம்மதித்த சந்தோஷத்தில் இருவரும் பூங்காவிற்குப் போய் மணிக்கணக்காக பேசினார்கள்.

'நேற்று இரவு முழுவதும் தூக்கமில்லை. என்ன நடக்கப் போகிறதோ... என துவண்டு போய் விட்டேன்...!" மாதுரி தந்தியடிக்கும் உதடுகளுடன் அப்படியே அதை பேசிக்காட்டிச் சிரிக்க பதிலுக்கு அவனும் சிரித்தான்.

எனக்கு மட்டும் என்ன? உன் தந்தை சொன்ன வீட்டோடு மாப்பிள்ளை நிபந்தனையைக் கேட்டு ஒரே அதிர்ச்சி. என்னை அவ்வளவு பெரிய குமுட்டை என்று எண்ணி விலைபேசி விட்டாரா என்ற ஒரே திகைப்பு...!

அவன் முடிப்பதற்குள் அவள் குறுக்கிட்டு, ஒரு சின்ன திருத்தம். குமுட்டையை யாராவது வாங்க முயல்வார்களா? நீங்கள் நல்லமுட்டை அதனால்தான் அப்பா வீட்டிற்கு வாங்கிவந்து உங்களை ஆம்லேட் போட்டுவிட தீர்மானித்துவிட்டார் போலும்...! எனக்கூறி அடக்க முடியாமல் குலுங்க குலுங்க சிரித்த... போதுஅவனும் சேர்ந்து கொண்டான்.

அப்படி சிரித்தபடியே அவளது விரல்களை பற்றினான். இன்னொருகை அவளது இடையை வேகமாய் தழுவியது.

அதை அவள் உணர்ந்து திடுக்கிட்டுப் பார்க்க, என்ன



பார்க்கிறாய்? இதுநாள் வரை எல்லைக்கோடு... வரைமுறை என தொடவிட்டிருப்பாயா? எனவும், நான் தொட அனுமதிப்பது இருக்கட்டும். நீங்கள் மட்டும் தொட்டீர்களா? நீங்களும் பயந்தாங்குள்ளிதானே? என்றபடி மறுபடி சிரித்தாள் அவள்.

அவன் அப்படியே அனைத்து அவளைப் பிடித்தவன், ஆனாலும் மாது, கல்யாணம் நிச்சயமாகிவிடும். நீ எனக்கு செந்தமாகப்போகிறாய் என்ற சந்தோஷத்தில் உன்னை கட்டியனைக்கும் ஸ்பரிசம் அந்த சுகம் தனி... என்றான் நெகிழ்ச்சியான குரலில்.

அவள் குனிந்து தலையை லேசாகத் திருப்பி ஓரக்கண்ணால் அவனை ஒயிலாக ஒரு பார்வை பார்த்து பார்த்து அப்படியே மென்மையாக புன்னகை செய்தாள். அவன் கிறங்கிப் போய் கத்தினான். இதான்... இந்த பார்வையில்தான் அப்படியே.... டொம்மென காதலில் விழுந்தேன்...! என்ன ஒரு ஆழம்.... என்ன வீச்சு...! திரும்ப ஒருமுறை செய்து... காட்டேன்... ப்ளீஸ்....

அவன் கொஞ்சியபடி கொஞ்ச மறுபடி அப்படி ஒரு பார்வை அவனைப் பார்த்து சொக்க வைத்தாள் அவள்.

காதலில் ஜாடை ஒரு அங்கம் என்று சும்மாவா சொல்வார்கள். ஒவ்வொரு ஜாடைக்கும் அழகுப் பெண்ணின் ஒவ்வொரு அசைவிற்கும் ஒரு அர்த்தம் இருக்கிறதே...!

மேலும் பார்வையிலே ஒருவருக்கொருவர் புரிதல் ஒருவித அர்த்தம் இருவருக்கும் ஏற்படுகிறதே...? இதைத்தான் ஆளுமை என்று அது தன்னை மயக்குவதை அவள் உணர்ந்திருக்கிறாள். அதே போல் அவளுள்ளும் அந்த ஆளுமைஇருந்து அவனை மயக்கவைக்கிறதா? வாய் விட்டுச் சொல்கிறானே?

நம்பமுடியாத வியப்புடன் ஆச்சரியப்பட்டவள் அந்த சந்தோஷத்தில் அப்படியே அவனை கட்டிக்கொண்டாள்.

மனமொத்த கணவன் மனைவியாய், எல்லோருக்கும் எடுத்துக்காட்டாக அவர்கள் வாழப்போகும் வாழ்க்கையைப் பற்றிய கனவுபலிக்கும் நேரம் வந்துவிட்டது என்கிற உணர்வே தித்திப்பாய்

இனித்தது.

அந்த பரவசத்தோடு அவனைப் பார்த்தவள் அவள்முகம் மாறுவது கண்டு துணுக்குற்றாள்.

'எனக்கு ஒருபுறம் பயமாகவும் இருக்கிறது மாது....' என்று கதிரவன் கவலை தோய சொன்னவிதம் அவன் என்ன சொல்ல வருகிறான் என்பதை சட்டென அவளுக்கு உணர்த்திவிட்டது.

'புரிகிறது. நீங்கள் வீட்டோடு மாப்பிள்ளை விஷயத்தைத்தானே சொல்கிறீர்கள்? என்றாள் புருவம் உயர்த்தி கதிரவன் தலையசைக்க, கவலையே வேண்டாம். எனக்கு என்னவோ முன்பு நீங்கள் செய்ததை விட கூடுதலாகவே உங்கள் குடும்பத்திற்கு உங்களால் உதவமுடியும் என நினைக்கிறேன். மேலும் தந்தை என் விஷயத்தில் வேறுஎதுவும் புதுநிர்ப்பந்தம் கொடுக்கவும் மாட்டார். அதனால் நீங்கள் கொஞ்சமும் பயப்படத்தோவையில்லை. எல்லாவற்றுக்கும் மேல்...' என்றவள் அப்படியே நிறுத்தி அவனை ஒரு ஆழமான பார்வை பார்த்தவாறு, எல்லாவற்றுக்கும் மேல் நான் இருக்கிறேன். நீங்கள் எது சொன்னாலும் சரி என்ன முடிவெடுத்தாலும் சரி... அதற்கு தலைசாய கீழ்ப்படிந்து நடந்து கொள்வேன். போதுமா?' என அவன் கைகளைப் பிடித்து அழுத்தியவாறு முடித்தாள்.

அந்த அவனது செயலில் கதிரவன் அப்படியே நெகிழ்ந்து விட்டான் என்றுதான் சொல்லவேண்டும்.

'இதுபோதும் மாது...!' என்றபடி அழுத்திய அவளது கைகளைத் தூக்கிப்பிடித்து மென்மையாய் முத்தமிட்டான்.

அதன்பின் மாதுரி கதிரவன் வீட்டு சம்மதத்தை தன் தந்தையிடம் தெரிவிக்க அவரும் பெரும் மகிழ்ச்சியை முகத்தில் காட்டினார்.

'இப்போதுதான் நிம்மதியாக இருக்கிறது செல்லம். எங்கே இந்த விஷயத்தில் நம் இருவருக்கும் பெரும் மனஸ்தாபம் ஏற்பட்டு விடுமோ என்று பயந்தேன்....' என அவர் சொல்ல அவரது வெளிப்படையான பேச்சைக் கண்டு மாதுரியும் நெகிழ்ந்தாள்.



'ஐயோ அப்பா! நான் உங்கள் பிள்ளை! உங்களது செல்வம்...! அப்படியெல்லாம் உங்களிடம் கொள்வேனா? 'என்றபடி சிணுங்கி அவரது கழுத்தைக் கட்டி தோள்களில் சாய்ந்தாள்.' ரொம்பவும் நன்றி டாடி! பெரிய மனதுடன் இந்த பெரிய விஷயத்தை ஜீரணித்து எனக்காக சம்மதம் சொல்லியிருக்கிறீர்கள். இதற்காக நான் ரொம்பவும் உங்களுக்கு கடமைப்பட்டிருக்கிறேன். தாங்க்ஸ் டாடி... வெரி வெரி தாங்க்ஸ் டாடி...!' சொல்லியபடி மறுபடியும் அவள் உருகினாள்.

மோகன்ராம் அவளது அந்த துள்ளலான மகிழ்ச்சியை சந்தோஷமாய்ப் பார்த்தவர், தாங்க்ஸ் எல்லாம் இருக்கட்டும். அண்ணன்களிடம் சொல்லிவிட்டாயா? என்றார்.

'ஐயோ.... இல்லை...டாடி பயமாய்த்தான் இருக்கிறது...' என்றாள் கண்களைச்சிமிட்டி.

'நான் ஓரளவு சொல்லி வைத்திருக்கிறேன், இருந்தாலும் உன் வாயால் சொல்லிவைத்துவிடு...' என்றதும் அன்று காலையே அவர்களைத்தேடிப் போய் விஷயத்தைச் சொன்னாள்.

'ஏய்...குட்டி...! நீயா இப்படி...? சின்னப் பெண் என்று நினைத்திருந்தோம், பெரிய மனுஷிபோல் காதலிக்கவெல்லாம் செய்திருக்கிறாய்?' என கலாய்த்தனர்.

மேலும், 'அந்த மாப்பிள்ளை சாரை உடனே எங்களுக்கு காட்டு. உடனே நாங்கள் பார்க்க வேண்டும்....' என பரபரத்தனர்.

அதனால் அன்று மாலையே கதிரவனை அவர்களது நகைக்கடை அலுவலகத்திற்கு வரவழைத்து அறிமுகப்படுத்தினாள்.

கைகுலுக்கி சகோதரர்கள் உற்சாகமாய் கதிரவனுடன் பேசுவதைக் காண அவளுள் சந்தோஷம் பொங்கியது.

பொதுவாக அண்ணன்கள் தனசேகரனும் சரி குணசீலனும் சரி அவள் விஷயத்தில் எப்போதும் பரிவாய் நடந்து அவள் எது செய்தாலும் ரைட் என சொல்கிற ரகம்தான். அதனாலே இந்த காதல் விஷயத்தையும் பெரிதுபடுத்தாமல், 'மனதுக்கு பிடித்தவனை எங்களுக்கெல்லாம் வேலை கொடுக்காமல் நீயேசெலக்ட்

பண்ணிவிட்டாய். வாழ்த்துக்கள் மதுக்குட்டி...!' என வாழ்த்தவே செய்தனர்.

அண்ணிமார்கள் பாரதியும் திலோத்தமாவும் கூட, 'எங்களுக்கெல்லாம் தெரியாமல் இவ்வளவு பெரிய காரியத்தை பண்ணிவிட்டாயே... நீ... கெட்டிக்காரிதான் மாது...' என்றனர். அது பாராட்டா அல்லது செல்லமான குட்டா என்று தெரியாமல் பற்களைக் காட்டிச் சிரித்து சமாளித்தாள் மாதுரி.

அதற்குப் பின் கல்யாணவேலைகள் வேகம்பெற்று மளமளவென நடந்தன.

இருவீட்டாரும் பேசி நல்ல நாள் நல்ல முகூர்த்தம் குறிக்கப்பட்டு கல்யான தேதி உறுதி செய்யப்பட்டது.

நகரிய பெரிய திருமண மண்டபம் ஒன்றில் கல்யாண ஏற்பாடுகள் தொடங்கின. பளபளப்பான ஜரிகை வேலைப்பாடுகளுடன் தங்கக்கலரில் உருவான கல்யாண இன்விடேஷனில் இருந்து ஒவ்வொரு ஏற்பாடுகளிலும் ஒவ்வொரு கல்யாணச் சடங்குகளில் பிரும்மாண்டம் தான்... பணத்தை தண்ணீராய் வாரி இறைத்த பணக்காரத்தனம் தான்!

தான் சம்பந்தம் வைத்துக்கொள்ளும் இடம் ஆனாலும் இவ்வளவு பெரிய்ய்ய்ய பணக்கார இடமா? என கதிரவனே பிரமித்தான்.





மணமேடையில் ஜரிகைப்பொட்டுகள் நிறைந்த பளபளப்பு சேலையில் சிவப்புக்கலரும் தங்கமுமான பலவகை நகைகள் ஜொலிக்க ரதிபோல் அவள் வீற்றிருந்தாள்.

அவன் கதிரவனும் அந்த அவளது அழகிற்கு கொஞ்சமும்



குறைவில்லாமல் சந்தனக் கலர் புல் சபாரி சூட்டில் நெடு நெடு உயரமும் சீரான உடற்கட்டுமாய் பட்டத்து இளவரசனைப் போன்ற கம்பீரத்துடன் நடந்து வந்து அவள் பக்கத்தில் அமர்ந்தான்.

அவள் அப்படி ஓரக்கண்ணால் விழி விரிய தன்னைப் பார்த்து வியப்பதை அவனும் கவனித்து விட்டான். கூடவே அவன் கண்களும் பெரிதாகி மணப்பெண் கோலத்தில் ஜொலித்த அவளது அபார அழகைப் படம்பிடிக்க ஆரம்பித்தான்.

அந்தப் பார்வையில் கன்னங்கள் சிவக்கத் திரும்பியவள், ஏதோ தோன்ற கூட்டத்தில் தந்தையைத் தேடினாள்.

தந்தை முகம்மலர ஓடியாடி கல்யாணத்திற்கு வரும் ஒவ்வொருவரையும் வரவேற்று உபசரித்துக் கொண்டிருப்பது கண்ணில் பட்டது

நிஜமாகவே, நம் தந்தை பெருந்தன்மையானவர்தான்.... மகளின் விருப்பத்திற்காக அவர்களது காதலையும் ஏற்றுக்கொண்டாரே.... என மெய்சிலிர்த்தாள்.

அவர்களைவிட பெரிதும் வியந்தது பிரமித்தது கதிரவனின் நிலைமைதான்! சிலசமயம் நடக்கும் பணக்கார களேபரங்களைப் பார்க்கும் போது மயக்கமேவந்துவிடும் போல் அவனுக்குத் தோன்றியது.

மண்டபம் முழுக்க ஏஸிதான், இருந்தாலும் ஆங்காங்கே ஸ்பெஷலாக தருவிக்கப்பட்ட ஏர் கூலர்கள், வரும் விருந்தினர்களுக்கு பந்திக்கு முன் பருக விதவிதமான குளிர் பானங்கள், குழந்தைகளுக்கான ஐஸ்க்ரீம்கள் ஒவ்வொரு விருந்தினருக்கும் கொடுக்கப்பட இருக்கும் மினி கிப்ட் பாக்ஸுகள்... அறுசுவையுடன் கூடிய விதவிதமான உணவுப் பதார்த்தங்கள்.... என சொல்லிக்கொண்டே போகலாம்.

போதாதென்று மண்டப முகப்பு முழுக்க விதவிதமான கார்களின் அணிவகுப்பு... மாதுரியின் தந்தை மோகன்ராம் பிரபலநகைக்கடையின் உரிமையாளர் ஆனதால் ஊரின் மொத்த பணக்காரர்களும் தவறாது கல்யாணத்தற்கு ஆஜராகியருந்தனர்.

பட்டு பளபளப்பில் கழுத்தை நெறிக்கும் நகை அணிகலன்களுடன் பணக்கார பெண்களும், கோட் சூட் சபாரி என பணக்கார ஆண்களும் நிரம்பியிருக்க... கல்யாணத்திற்கு வந்த மிடில் கிளாஸ்கூட்டங்கள்தான் பிரமிப்பில் திணறிக்கொண்டிருந்தனர்.

இதில் நிஜமாகவே பரிதாபமாய் தவித்தது கதிரவனின் குடும்பத்தினர்தான் என்று சொல்ல வேண்டும். இந்த பணக்கார இடத்தில் நாம் சம்பந்தம் பண்ணுகிறோமா? இவர்கள் நம் சம்பந்தியா? என கதிரவனின் தாய் கற்பகம் ஒவ்வொரு நொடியும்தவித்து அதிர்ந்து போனாள்.

ஆனாள் மோகன்ராம் எவ்வித கௌரவமும் பார்க்காமல் முன்வந்து நமஸ்கரித்து, 'சம்பந்தியம்மா, எதுவானாலும் சொல்லுங்க. இது நம்மபிள்ளைங்க விருப்பப்பட்டு அமைத்துக்கிட்ட கல்யாணம். நாமஜாம் ஜாம்ன்னு நடத்துவோம்...' என்று கைகூப்பலாய்ச் சொல்ல பதிலுக்கு கண்களில் நீர் தழும்ப நமஸ்கரித்து பெரிதாய் தலையாட்டினாள் அவள்.

தன்னையும் இவ்வளவு தூரம் மதித்து மோகன்ராம் அப்படிக் கேட்ட அதிர்ச்சியில் அவளுக்கு பேச்சே வராமல் போயிற்று.

கற்பகத்திற்கு மட்டுமல்ல. மாப்பிள்ளையான கதிரவனுக்கும் அதே நிலைமையே!

மோகன்ராம் அவனிடமும் இன்முகமாய் வந்து, 'மாப்பிள்ளை வேறு எதுவும் ஏற்பாடுகள் செய்ய வேண்டுமா...? கல்யாண நிகழ்ச்சிகள் எல்லாம் உங்களுக்கு திருப்திதானே?' என பணிவாய் கேட்ட போது அவனுக்கு பேச வார்த்தை எழவில்லை. தயக்கமாகவே பற்களைக் காட்டி தலையசைத்தான்.

பதிலுக்கு அவரிடம் ஏதோ சொல்ல நினைத்துவாயெடுத்தவனுக்கு அவரை உரிமையாய் மாமா என்ற அழைக்கவே தயக்கம்தான்.

அவன் எதோ சொல்ல நினைத்து அப்படியே நிறுத்தி விட்டதை கவனித்த மோகன்ராமே, 'என்ன மாப்பிள்ளை? என்ன விஷயம்?' என்க... கதிரவன் தயக்கத்தை விடுவித்து, 'உங்களை மாமா



என்று அழைக்கலாம் தானே? 'என முத்து உதிர்க்க கடகடவென சிரித்துவிட்டார் மோகன்ராம்.

'ஐயோ...! என்ன மாப்பிள்ளை... இது...? எனது மாப்பிள்ளை நீங்கள்.... பின் நான் உங்களுக்கு மாமாதானே? யாராவது கேட்டால் சிரிக்கப் போகிறார்கள்...! ரொம்பவும் அப்பாவியாக இருக்கிறீர்களே...!' என மேலும் சிரித்தபடி அவன் தோள்களை தட்டிவிட்டு சென்று விட்டார்.

சற்று தள்ளி நின்ற மாதுரியின் தோளைத்தட்டி அதே போல் 'அப்பாவி மாப்பிள்ளை' என சிரிப்புடன் விளித்து அவள் காதுகளில் எதையோ சொன்னபடி அகன்றார் மோகன்ராம்.

சில நிமிடங்களில் அவனுக்குப் பக்கத்தில் வந்த மாதுரி அதே கிசுகிசுப்புடன், அப்பாவும் சரி என் வீட்டாரும் சரி... பணம்.. அந்தஸ்து என எதையுமேதலைக்கணமாய் வைத்துக் கொள்ள மாட்டார்கள். நீங்கள் எதற்கும் கூச்சமோ... சங்கோஜமோ கொள்ள வேண்டாம் கதிரவன்.. என்றபோது புரிந்தது போல் தலையசைத்தான் அவன்.

ஆனால் சில மணி நேரங்களில் நடந்த ஒவ்வொரு கல்யாண நிகழ்ச்சிகளின் போதும் மாதுரி சொன்ன வார்த்தைகளின் உண்மைதெளிவாய் அவனுக்குப் புரிந்தது.

மோகன்ராமும் சரி மாதுரியின் அண்ணன்மார்களும் சரி சிரித்த முகமும் கூப்பி கரங்களுமாய்த்தான் மண்டபத்தில் எப்போதும் நடமாடினர். எதிரில் யார் வந்தாலும் சரி கை கூப்பலான வணக்கம்தான். பணிவான உபசரிப்புதான், ஏழை, பணக்காரன் என எந்த கோட்பாடும் வைக்காமல் சமமாகவே எல்லோரையுமவரவேற்றனர். இனிமையாய் உபசரித்தனர். ஒருவாறு காலைச் சடங்குகள் முடிந்ததும் மாலை ரிசப்ஷனுககாக இன்னிசைக் கச்சேரிவேறு. மறுபடியும் விதவிதமான அலங்காரங்கள் பளபளஉடைகள். ரிசப்ஷனுக்காக அவளே கடைக்குச் சென்று மெருன்கலர் சபாரி சூட் ஒன்றை மாதுரி கதிரவனுக்காக செலக்ட் செய்திருந்தாள்.

அதையே அணிந்து கதிரவன் கம்பீரமாக அவள் பக்கம் வந்து நின்றபோது அந்த முறுக்கு மீசையும், கண்களைச் சுழற்றியபடி மிளரும் அந்த வசீகரச் சிரிப்புமாய் ஜொலித்த ஆண்மைஅழகில் அப்படியே அவனை இறுகக் கட்டிக்கொள்ள வேண்டும் போலத்தான் அவளுக்குத் தோன்றிற்று.

அடக்கிக் கொண்டு அவனைப் பார்த்தாள் அட.... என்னஇது அவனுக்கும் இதே நிலைமையா? என்னமாய் அப்படி ஒரு விழுங்கும் பார்வை பார்க்கிறான்? இதுவரை இவன் இப்படியொரு பார்வை பார்த்ததில்லையே? என முகம் சூடாக சிவந்துதான் போனாள்.

ரிசப்ஷனுக்காக பக்கத்தில் வந்து நின்றவன் இதையெல்லாம் நொடியில் கவனித்து, கணித்தவனாய் அவள் கைகளோடு கரங்கோர்த்துக்கொண்டு யாருமறியாமல் கிள்ளவும் செய்தான்.

அவள் பொய்க் கோபத்துடன் அவனைப் பார்க்க, இரவுதான் வரப்போகிறதே.... அதற்குள் அவசரமாக? என்று கிசுகிசுத்து மேலும் அவளை குனியவைத்தான்.

அன்று ரிசப்ஷனுக்கு எக்கச்சக்க கூட்டம் என்றுதான் சொல்ல வேண்டும். அவர்களது ஐஸ்வர்யா ஜுவல்லர்ஸின் நாலுகிளைகளின் ஊழியர்கள், தெரிந்தவர்கள், பக்கத்து வியாபாரிகள், கடைக்காரர்கள் என வாழ்த்துவதற்கு நிறைய பேர் வந்துவிட கூட்டம் கியூ வரிசையாய் அலைமோதிற்று

கதிரவனும் சரிமாதுரியும் சரி கைகூப்பி, கைகுலுக்கி, சிரித்து, போட்டோவுக்கு போஸ் கொடுத்து என ரொம்பவும் களைத்துதான் போனார்கள்.

ஒரு மூன்றுமணி நேரத்தில் எல்லாம் முடிந்த போதுதான் ரிசப்ஷனுக்காக போடப்பட்ட இருக்கைகளில் மூச்சுவாங்க அவர்களால் உட்கார முடிந்தது

பின்சிறிது ஓய்வுக்குப்பின் உணவருந்தினார்கள்.

பின் அன்றைய இரவு முதலிரவாய் அவர்களுக்கு மலர்ந்தது


பூக்களும் வாசனைத்திரவியங்களுமாய் ஜொலித்த கட்டிலில் கதிரவன் உட்கார்ந்திருக்க குனிந்த தலையும் புதுவெட்கமும்



வந்தவனாய் பால் சொம்புடன் நுழைந்தாள் அவள்.

அவள் நுழைந்ததும் டக்கென கட்டிலில் இருந்து எழுந்து விறுவிறுவென சுவர்ப்பக்கமாய் போய் ஒருவித விரைப்புடன் கைகளை இறுக கட்டிக்கொண்டான் கதிரவன்.

அவன் முகத்தில் தொனித்தஇறுக்கத்தைக் கண்டு அதிர்ச்சியானாள் அவள்!




கதிரவன் சட்டென எழுந்து போய் விரைப்பாகவும் ஒருவித இறுக்கத்துடன் நின்றதையும் கண்டு துணுக்குறவே செய்தாள் மாதுரி!

ஆனால் அவள் அவசரப்படவில்லை. கொண்டிருந்த புன்னகை மாறாமல் அவன் காலில் விழுந்து வணங்கிவிட்டுக ட்டிலில் உட்கார்ந்தாள். அவனையும் உட்கார வைத்தாள்.

'இப்போது சொல்லுங்கள் கதிரவன்...' என்ற போதும் அவன் தன் பக்கம் தலை திருப்பாதது அவளை என்னவோ செய்தது.

என்ன கோபம் அதற்குள்? ஒரு வேளை தந்தையோ வீட்டாரோ...எதுவும் புண்படும்படி சொல்லிவிட்டார்களா? என்னவாக இருக்கும்?

பதட்டமாய், 'யாரும் எதுவும் சொன்னார்களா? சொல்லுங்கள்... கதிரவன்...' என குரல் கம்மஅவள் கேட்க மறுப்பாய் தலையசைத்தான் அவன்.

'பின் வேறு என்னள என்னைப் பார்க்கக்கூட பிடிக்காதது போல்.... முகத்தைத் திருப்பிக்கொண்டு.... பாருங்கள்... இந்த ஜரிகைப்பொட்டு பச்சை வண்ணச்சேலை, இந்த அலங்காரங்கள் எல்லாம் நீங்கள்... நீங்கள் பார்ப்பதற்கு என்று..' என அவள் மறுபடியும் குரல் உடைந்து கலக்கமாய் அழும் நிலைக்கு போய்விட்டாள்.

சட்டென திரும்பி அவள் தோள்களைப் பிடித்தான் கதிரவன், 'அதான்... அதனால்தான் மாது உன்னைப் பார்க்கப் பயப்படுகிறேன்...சும்மாவே நீ அழகு.....' போதாதென்று இந்த அலங்காரங்களும் சேர்ந்து கொண்டால்.... கொஞ்சம் யோசித்துப் பார்.... என்னால் தான் சும்மா இருக்கமுடியுமா?' என் உணர்ச்சிகளைத்தான் கட்டுப்படுத்த முடியுமா? 'எனக் கேட்டபோது தான் அவளுக்கு, 'அப்பாடா! பிரச்சினை ஒன்றுமில்லை!' என்று பயம் நீங்கி மூச்சே வந்தது.

ஆனாலும்அவன் பேச்சில் தொனித்த அர்த்தத்தில் கொஞ்சம் கலவரப்பட்டவளாய், எதற்கு கட்டுப்படுத்த வேண்டுமாமா? அதற்குள் கட்டியது கூட கட்டியவருக்கு மறந்து போயிற்றா? என்றபடி விரல்களால் தாலியை நிரடினாள். புதிராகவே அவனைப் பார்த்தாள்.

புரிந்தது போல் வேகமாகவே தலையை அசைத்தான் கதிரவன், 'எல்லாவற்றுக்கும் ஓர் காரணம் இருக்கு மாது. நான் புரிந்து கொண்டது போல் நீயும் அதை புரிந்து கொள்ள வேண்டும். புரிந்து கொள்வாயா?' என்றபடி அவள் நிறுத்த, எவ்வித சலனமுமில்லாமல், 'சொல்லுங்கள்...!' என்றாள் அவள்.

'மாது,என்னதான் உன் தந்தை எல்லாவற்றுக்கும் சம்மதித்து விட்டாலும் நம் திருமணத்தில் இனிதான் நிறைய விஷயங்களை, பிரச்சினைகளை நாம் எதிர்கொள்ளக்கூடும். அது என்னவோ என்ன பிரச்சினையானாலும் எவ்வளவு பெரிதாக இருந்தாலும் நாம் ஒன்றாய் நின்று சமாளித்து விடுவோம். ஆனால் என் நிலை... வீட்டை விட்டு விட்டு இங்கு புதுமாப்பிள்ளையாய் குஷாலாய் இப்படிப்பட்ட ஒரு ஏஸிரூமில் சகல வசதிகளுடன் இருப்பதைப் பார்...! அது... அது... அதுதான் என்னை ரொம்பவும் நெருடுகிறது... என்னமோ தவறு செய்கிறோமோ என... மனதை பதறவைக்கிறது... தந்தையின் மறைவுக்குப் பின் வீட்டின் மூத்த பிள்ளையாய் இருந்து எனது குடும்பத்தை கட்டி காக்க வேண்டிய நான் இப்படி பொறுப்புகளை எல்லாம் தட்டி கழித்து விட்டு சுயநலமாய் செயல்பட ஆரம்பித்துவிட்டோமோ... என ஒருவித குற்ற உணர்ச்சி



ஏற்படுகிறது. அதனால்.....'

சொல்லியவன் மேற்கொண்டு பேசத்தயங்கியவனாய் அப்படியே நிறுத்தினான்.

அவன் என்ன சொல்ல வருகிறான் என அவளுக்கு சகலமும் புரிந்து விட்டது. என்ன தடுத்தும் ஒருவித ஏமாற்றம் சட்டென நெஞ்சுக்குழிக்குள் கசப்பாய் இறங்குவதை அவளால் தவிர்க்க முடியவில்லைதான!. அலங்காரத் தேர் போல அவளை அவளே ஆசையாய் ரசனையாய் அலங்கரித்து விட்டு பின் வீதி உலா இல்லையென்று சொன்னால் எப்படி?

ஆனாலும் தனது ஏமாற்றத்தை கொஞ்சமும் அவன் உணர்ந்து கொள்ளா வண்ணம் சட்டென்று புன்னகைத்து, 'புரிகிறது...! புரிகிறது...!' என தலையசைத்தாள்.

அவளின் அந்த தலையசைப்பில் நெகிழ்ந்து போனவனாய் சற்று நெருக்கத்துடன் அவன் பக்கம் நகர்ந்து அவள்கைகளை எடுத்து விரல்களால் அழுந்தப் பற்றிக் கொண்டான்.

'ரொம்பவும் தாங்க்ஸ் மாது! இந்த விஷயத்தில் உன் ஒத்துழைப்பை மிகவும் எதிர்பார்க்கிறேன். சராசரிப் பெண்ணாய் நீ அதிகம் எதிர்பார்ப்பு கொண்டிருப்பாயோ....என்று பயந்தேன். நல்லவேளை நீ அப்படி இல்லை....' என அவள் நிலைமையை முழுவதும் உணராமலே மெய்சிலிர்த்தான் அவன்.

ஆனால் இவன் நினைக்கிற அள்வுக்கு நிலைமைஒன்றும் மோசமானதாக இல்லையே....? வீட்டோடு மாப்பிள்ளை என்ற ஒரு பிரச்சினைதானே இவனுக்கு... மற்றபடி பணத்தையோ அந்தஸ்தையோ பற்றி யாரும் கவலைப்படவோ, பெரிசுப்படுத்தவோ இல்லையே...? பிறகு எதற்கு ஏதோ வேதனையைச் சுமப்பது போல் இந்தச் சடங்குகளை தள்ளிப் போடவேண்டும்?

உள்ளுக்குள் அவளுக்குள் கேள்வி எழுந்த போதும் அவனது குழப்பமான ஒரு சூழ்நிலையைக் கண்டு எல்லாவற்றையும் அடக்கிக் கொண்டாள்.... மாதுரி.

ஆனால் கதிரவனே தொடர்ந்து, 'ஆனால் மாது ஒ

விஷயத்தை நான் பாராட்டியே தீர வேண்டும். உன் தந்தையும் சரி.... உன் சகோதரர்களும் சரி கொஞ்சமும் நாங்கள் பணக்காரர்கள் மேல்தட்டு மனிதர்கள் என்றெல்லாம்.... பந்தா இல்லாமல்...' சொல்லியவன் அவள் சிரிப்பதை உணர்ந்து, அதன் அர்த்தத்தையும் புரிந்தவன்போல், 'அதாவது கிட்டத்தட்ட எல்லோரும் உன்னைப் போலவே இருக்கிறார்கள்.... என சுருக்கமாகவே சொல்லி விடுகிறேன். அதற்காகத்தானே இப்படி ஒரு சிரித்தாய்?' எனவும் மறுபடியும் சிரித்து ஓய்ந்தாள்அவள்.

கதிரவன் தொடர்ந்து சீரியஸான ஒருவித பாவனையுடன், 'ஆனால் மாது, என்னதான் நீயும் உன் வீட்டாரும்அப்படிப் பழகினாலும் என்னாலும் சரி என் வீட்டாரும் சரி அதை இயல்பாக ஏற்றுக் கொள்ள முடியாமல் ரொம்பவும் தான் சங்கோஜப்படுகிறோம். எனக்கே இங்கே உன் அரண்மனை போன்ற வீட்டில் சகலவித வசதிகளுடன் சொகுசாக இருக்கும் நிலையைப் பார்த்து, நம் தகுதிக்கு மீறிய இடத்தில் போய் தலையை கொடுத்து விட்டோமோ என்ற கேள்வி ஒவ்வொரு நொடியும் என் முன் எழுந்து என்னமாய் ஆடுகிறது தெரியுமா என்றவன் ஒருகணம் நிறுத்திவிட்டு அவள் மைவிழிக் கண்களை உற்றுப்பார்த்தான், என்ன நீ... என் மீது காட்டும் அன்பு... அந்த உன்னுடைய புனிதமானமனது எல்லாம்தான் என்னைக் கவர்ந்து இப்படி இங்கே இருக்க கட்டிப் போட்டும் வைத்திருக்கிறது...' என்றான்.

அவனது நிலைமை அவளுக்கு நன்றாகப் புரியத்தான் செய்தது. அதனால்கைகளை அவன் செய்தது போலவே அழுத்தி 'எனக்காக கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்கள். சரியாகிவிடும் ப்ளீஸ்...' என்றாள்.

பதிலுக்கு தலையசைத்தவன், 'நான் பொறுத்துக் கொள்கிறேன். அதே போல் நீயும் இந்த விஷயத்தை கொஞ்சம் தள்ளிப்போட்டு பொறுத்துக் கொள்ள வேண்டும்...' என்றபடி கட்டிலைக் காட்ட முகம் சிவக்க தலையாட்டினாள் அவள்.

பின், இருவரும் சிறிது நேரம் பேசினார்கள். பின் களைத்தவர்களாய் துயில் கொள்ளமுடிவு செய்த போது கதிரவன்



தலையணையுடன் கீழே படுக்க தயாரானாள்.

'மேலேயே படுங்கள். கட்டுப்பாட்டுடன் இருவரும் இருந்தால் போதாதா?' என்றதும் அவன் எழுந்து கட்டிலிலே படுத்தான்.

அப்படி அவன் படுத்தவுடன் சட்டென அவனது நெஞ்சினில் சாய்ந்து கைகளால் வளைத்துப்பிடித்தவள், 'இப்படி கட்டுப்பாட்டுடன் அணைத்தபடி பேசிக்கொண்டு அப்படியே தூங்கலாம் தானே... அதிலொன்றும் தவறில்லையே....?' என கண்களைச் சிமிட்டியபடி அவனைக்கேட்டாள். பக்கென்று சிரித்து விட்டான் கதிரவன்!




அன்றைய இரவு அவனது பேச்சினால் மாதுரி ஓரளவு கலவரமடைந்தாலும் அவனது சூழ்நிலையை தெளிவாக புரிந்துகொண்டாள்.

அதனாலே எல்லா இளம் பெண்களைப் போல் இல்லாமல் மனதில் குபீரென எழுந்த ஆசைகளை முழுவதுமாய் அடக்கி, பிரச்சினையை வெளியே இருந்து யோசித்துப் பார்க்கும்படி மனதை மாற்றிக்கொண்டாள்.

அவன் நெஞ்சினில் இனிமையாக படுத்தவள் ஒருசில நிமிடங்களிலே எவ்வித சலனமுமில்லாமல் தூங்கியும் போனாள். அவள் அப்படிக் குழந்தை போல் தன்னைக் கட்டிக்கொண்டு தூங்குவதைக் கண்ட கதிரவனால்தான் தூங்க முடியவில்லை...!

அவள் உள்ளே நுழைந்தபோதும் உட்கார்ந்து பேசிய போதும் பார்க்காத அவளின் கொள்ளை அழகை இப்போது பார்த்தான்

திருட்டுத்தனம் பொங்க. அவளது பளீர் நெற்றியில் புரண்ட சுருள் முடிகளும் இமைகள் மூடிய மைவிழிக் கண்களும் முத்துப் புன்னகையை அடிக்கடி உதிர்க்கும் அந்த பவழ உதடுகளின் மேல்புறமாய் இருக்கும் அந்த அதிர்ஷட மச்சமும், கழுத்துக்குக் கீழே விண்ணென செதுக்கி வைத்த சிற்பம் போல இருக்கும் வளைவுகளான உடல்வாகும்.... இவை எல்லாவற்றையம் தூக்கி அடிப்பது போல் சாந்தி முகூர்த்தத்திற்காக அவள் கட்டியிருந்த அழகான ஜரிகை பார்டர் ஸேரி செய்த நேர்த்தியான ஜடை பின்னல், பின்னலின் கூந்தலில் மல்லிகை கூட்டமாய் சரங்கள்... இத்யாதி இத்யாதி.... என... மயக்கம் கொள்ளவைக்கும்அழகுதான்! இவள் பேரழகிதான்!.... என்ன கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாதது போல் இப்படி பார்த்துக் கொண்டு மட்டும்தான் இருக்கவேண்டும் என்ற விதி நமக்கு போலும்!

ஒரு பெருமூச்சுடன் தன்னைத் தானே நொந்து கொண்டவன் நெஞ்சில் கவிழ்ந்து படுத்திருந்தவளை ஒரு புறமாய் கைகளால் அணைத்தபடி படுக்க கூட பயந்தான்.

அப்படி அணைத்தால் அவனது ஸ்திரத்தன்மை, அந்த கட்டுப்பாடு...அதை அவன் இழந்து விடக்கூடாது அல்லவா? அவள் பாட்டுக்கு அவன் சொன்னதும் சரியென தலையாட்டிக்கொண்டு படுத்தவள் தூங்கியும் விட்டாள்.

ஆனால் அப்படி அவள் நெஞ்சினில் படுத்ததினால் உணர்ச்சிகளுடன் போராடவேண்டியது அவன் செயலாக அல்லவா போயிற்று! இதில் அணைத்து வேறு பிடித்தால்... யப்பா.... வேறு விபரீதமேவேண்டாம்!

பயந்து பின்வாங்கியவன் இப்படியே யோசித்துக் கொண்டிருப்பது கூட ஆபத்துதான் என நினைவுகளை வேறுபுறமாய் திருப்பினான்.

நினைவை திருப்பியதும்... வீட்டு நினைப்புதான்! அவனது வீட்டார் எவ்வளவு வற்புறுத்தியும் பெண்வீட்டில் அன்று இரவு தங்காமல் அவன் வீட்டிற்குச் சென்று விட்டனர்.



இந்நேரம் அம்மா தம்பி, தங்கைகள் படுத்திருப்பார்கள். அவனது படுக்கை இடம் மட்டும் காலியாக இருக்கும். மகன் கல்யாணம் செய்து பெண் வீட்டோடு சென்று விட்டான். இனி வர மாட்டான் என்ற நினைப்பு எழத்தானே செய்யும்? பின் அவர்களால் எப்படி நிம்மதியாய் தூங்க முடியும்?

சே! முன் பின் யோசிக்காமல் பெரிய பிழையொன்றை செய்து விட்டோமோ? எனக் கூட கதிரவன் வருந்தினான்.

ஆனால் கூடவே மாதுரியின் வார்த்தைகள் ஞாபகத்திற்கு வந்து ஓரளவு நிம்மதியைத்தந்தன. பலவாறாக அப்படியே யோசித்தவன் தன்னை மீறி அப்படி எதுவும்நடந்து விடாது... என தனக்குத்தானே ஒரு உறுதிகொண்டு விட்டு உறங்கியும் போனான்.

அதற்குப் பின் வந்த இரண்டு நாட்களில் கல்யான சம்பிரதாயங்கள் எல்லாம் முடிந்து போய் மூன்றாம் நாள் தன் வேலைக்கு கிளம்பி விட்டான் கதிரவன்.

ஃபைல்களையும் மதிய லஞ்ச் பாக்ஸையும் அவனது பைக்கில் எடுத்துக்கொண்டு மாதுரிக்கு கையசைத்தவாறு கிளம்பிப்போனான்.

மாதுரி புன்னகையான கையசைப்புடன் விடைகொடுத்து திரும்பியவள் தன்னையே, தன் சைகையையே சிரிப்புடன் பார்த்தபடி தந்தை நிற்பது கண்டு வெட்கமானாள்.

'என்ன டாடி?' என குரல் குழையக் கொஞ்சினாள்.

'ஆனாலும் கல்யாணம் என்ற ஒன்று வந்து ஆளையே புரட்டிப் போட்டு விடடுகிறதே... அம்மாடி.... ஒரே நாளில் குடும்பத்தலைவி போல் பெரிய மனுஷியாகி விட்டாயே....!' என்றார். சிரிப்பைவிடாமல்.

'ச்சு.... போங்க.... டாடி...!' என அவள் சிணுங்கியபோது மோகன்ராம், 'செல்லம், மாப்பிள்ளை வேலைக்கு பைக்கில் ஏன் கஷ்டப்பட்டு போகவேண்டும்? வீட்டில் இரண்டு கார்கள் டிரைவருடன் சும்மாதானே நிற்கிறது. ஏற்பாடு பண்ணட்டுமா?' என்றார்.

மோகன்ராம் சாதாரணமாக கேட்க மாதுரிதான் பதறிப்

போய் விட்டாள். அவன் கதிரவன் அவளிடம் போட்டிருக்கும் முக்கியமான நிபந்தனையே அதுதானே. 'வீட்டோடு மாப்பிள்ளையாய் இருப்பது பெரிய விஷயமில்லை மாது. ஆனால் உங்கள் பணக்கார அந்தஸ்திற்கு என்னை இழுக்காமல் என் சுதந்திரத்தில் தலையிடாமல் நீங்கள் இருக்க வேண்டும். அதற்கு நீ தான் பொறுப்பு!' என தெள்ளத் தெளிவாய் சொல்லி இருக்கிறானே!

அதனாலே துணுக்குற்றவள் அதே பதட்டத்தோடு, 'அப்படியெல்லாமவேண்டாம் டாடி. அவர் சுதந்தரத்தில் நாம் தலையிட வேண்டாமே!' என்றதும் மோகன்ராம் அப்படியே விட்டுவிட்டார்.

தந்தையைப் போலவே சகோதரர்கள் இருவரும் அதையே சொன்னதோடு இன்னும் ஒரு படி அதிகமாகவே சொல்லினர். 'எதற்கு மதுக்குட்டி, மாப்பிள்ளை வேலைக்கு எல்லாம் செல்ல வேண்டும்? நீ மட்டும் சம்மதம் சொல்லு நம் நகைக்கடையின் புது பிராஞ்ச் ஒன்றை திறந்து வைத்து அதற்கு மாப்பிள்ளையையே இன்சார்ஜ் ஆகப் போட்டிருவோம்..' எனவும் அவள் பதறியே போனாள்.

'ஐயோ அண்ணா...! அவரது முக்கியமான நிபந்தனையே அவர் அவராகத்தான் இருப்பார்..... நமக்காக.... நம் அந்தஸ்திற்காக எதையும் மாற்றிக்கொள்ள மாட்டார் என்பதுதான்!' என உறுதிபடச்சொல்லி அவர்களுக்குப் புரியவைத்தாள்.

ஆனால் அவர்களோ, 'முதலில் அப்படித்தான் சொல்வார். பிறகு நீயே பாரேன்! நம் வழிக்கு வந்துவிடுவார். பணம் பத்தும் செய்யும். இதுவெல்லாம் உனக்க புரியாது மதுக்குட்டி!' என செல்லமாய் அவள் கன்னத்தை தட்டியபடி இருவரும் சென்றுவிட்டனர்.

ஆனால் மாதுரிக்கு அவர்கள் சொன்னதில் கொஞ்சமும் ஒப்புதலில்லை. ஏனெனில் கல்லூரி நாட்களிலே கதிரவன் அடிக்கடிஅவளிடம் சொல்வான், மாது, எனக்கு உன்னிடம், உன் அபாரமான அழகிற்கு அடுத்தாற்போல் பிடித்த விஷயம் என்ன தெரியுமா? உன் பணக்காரபகட்டுத்தனம் இல்லாத எளிய குணம்! உன் மனதோடு ஒட்டிய எளிமைஅதைத்தான் விரும்புகிறேன்! என



அடிக்கடி புகழ்வானே? அப்படிப்பட்டவனா பணத்திற்காக தன்னை மாற்றிக்கொள்வான்? என நினைத்தாள் அவள்.

அதைவிட இரு அண்ணிமார்கள் சொன்னதுதான் அவளை ரொம்பவும் எரிச்சலூட்டி பாதித்தது. 'மதும்மா, ஆனாலும் உன் காதல் கணவர் இப்படி லஞ்ச் பாக்ஸைத் தூக்கிக் கொண்டு அலுவலகம் செல்வது நன்றாகவா இருக்கிறது? எவ்வளவு பெரிய பங்களாவில் இருந்து கொண்டு மாமாவை, உன் தந்தையை அவமானப்படுத்துவதுபோல் செய்யும் செயல் அல்லவா?' என்று பெரும் அக்கரை காட்டி கேட்டார்கள்.

ஆனாலும் பொறுமையாய், 'அப்பாவிடமே இதுபற்றி சொல்லிவிட்டேன். அவர் புரிந்து கொண்டுவிட்டார்...' என்றாள்.

'ம்ம்... எதோ எங்களுக்கு சொல்லத்தோன்றியதை சொல்லிவிட்டோம். நீ ஒன்றும் தவறாக நினைக்காதே மாது...' என்று சமாதானப் படுத்துவது போல் அவர்கள் சொல்ல மாதுரி அங்கிருந்து அகன்றுவிட்டாள்.

ஆனால் அண்ணிமார்கள் பாரதியும், திலோத்தமாவும் முகம் எரிச்சலாக ஒருவரை ஒருவர் பார்த்தனர்.

'என்ன சொல்ல....? கல்யாணமாகி இடத்தைக் காலி செய்து ஓடுவாள் என்று பார்த்தாள் இப்படி மாப்பிள்ளையோடு தக்கை போல் வந்து உட்கார்ந்துவிட்டாளே? இப்படியே விட்டால் பின்னாளில் மாமாவின் சொத்துக்களுக்கெல்லாம் பெரிய பங்காளியாய் அல்லவா வந்து விடுவாள் என்ன சொல்கிறாய்?'

ஒருநாள் பாரதி இப்படி கேட்க, திலோத்தமா பெரிதாய் தலையாட்டியவள், 'நீ சொல்வது உண்மைதான் நாளை மக்கு கிடைக்க வேண்டிய சொத்துக்களையெல்லாம் இவளே போட்டியாகி விடுவாள் அதனால் இவளை அடித்து விரட்டியாக வேண்டும். முதலில் அந்த ஆளை எரிச்சல் படுத்தி துரத்துவோம். இவள் பின்னாலே ஓடிவிடுவாள்.... எப்படி?' என்றாள் பாரதி ஆவலாய்.

'அதற்கு ஒரு திட்டம் வைத்திருக்கிறேன்....' என்று முகத்தில்

விஷமம் தொனிக்க விவரிக்க ஆரம்பித்தாள் திலோத்தமா.




பாரதியும் திலோத்தமாவும் அப்படி விஷமத்தனமாய் யோசிக்க அவர்களுக்கு ஒரு சரியான காரணமும் இருந்தது.

அதில் முக்கியமாக அவர்கள் பயப்படும் விஷயம் சொத்தும், நகை பிஸினஸ் பற்றியும்தான்! எங்கே மாதுரி கல்யாணமாகி மாப்பிள்ளை வீட்டுக்குச் சென்றுவிடுவாள். ஏகப்பட்ட நகை நட்டுகளைப் போட்டு ஜாம்ஜாம்மென கல்யாணம் செய்து அனுப்பிவைத்து விடலாம் என எண்ணியிருந்தவர்களுக்கு மோகன்ராம் செய்த வீட்டோடு மாப்பிள்ளை ஏற்பாடு வேப்பங்காயாக கசந்தது.

இது..... என்ன.... புது வைக கூத்து? இப்படி மகளை வீட்டோடு வைத்துக்கொண்டால் நாளை சொத்தை பங்கு பிரிக்கும்போது சரி பாதியாய் ஒரு பங்கு அவளுக்கும் கொடுக்க வேண்டிய சூழ்நிலை வரலாமே?

அது போதாது என மாப்பிள்ளையும் உடன் இருந்தால் பணமாய் கொட்டும் ஐஸ்வர்யா ஜுவல்லர்ஸ் நகைக்கடையிலும் அவர் கால் பதிக்கும் சூழ்நிலைநாளை உருவாகலாம்தானே?

பின் நகைக்கடை பிசினஸிலும் மருமகன் என்று அவர்....அவருக்கும் ஒரு பங்கு உண்டு என வந்து விட்டால்...?

வேறு வினையே வேண்டாமே? கோடான கோடி சொத்துக்களுக்கு முன்பின்தெரியாத அவனும் ஒரு பங்குதாரர் ஆகி... இந்த வீட்டில் அவர்களுக்கு ராஜமரியாதை ஏற்பட்டுவிடுமே?

சும்மாவே மகளை செல்லம்.... செல்லம் என நொடிக்கொருதரம் சொல்லிக் கெஞ்சும் மோகன்ராம் அந்த செல்லமகள் தன் கூடவே இருந்து விட்டால் அதில் பூரிப்படைந்து பின் கடைசிகாலத்தில் தான் சமாபதித்த மொத்த சொத்துக்களையும்



அவள் மேல் எழுதி அவர்களை செல்லாக் காசாய் ஆக்கிவிடும் பெரும் அபாயமும் கூட இருக்கிறதே?

பின் அவர்கள் காத்திருக்க... நேற்று மாப்பிள்ளையாய் வந்த ஒருவன் அப்படி எல்லாவற்றையும் சுருட்டிக் கொண்டு போக அவர்களால் எப்படி அனுமதிக்க முடியும்?

அதனால்தான் முடிவெடுத்தனர். யோசித்து யோசித்து திட்டம் தீட்டினர்.

அவர்கள் திட்டப்படி எப்படியாவது மாதுரியை பிறந்தகத்தை விட்டு கிளப்பி விடவேண்டும். அது ஒன்றுதான் குறி! மேலும் புகுந்த வீடே அவள் கதி என செல்லும்படிவைத்து விட வேண்டும். அப்படிச் செய்துவிட்டால் போதும்! மகளுக்காக உருகும் தந்தையை தனியாக பிரித்து அந்த தந்தை பாசத்தை ரொம்பவும் குறைத்துவிடலாம். ஏன் தானக கூட அது குறைந்துவிடும். இதனால் பல கோடிகள் அவர்கள் கையைவிட்டுப் போகாமல் அவர்களிடமேதஞ்சமடைந்துவிடும்!

மருமகள்கள் இருவரும் திட்டம் தீட்டியதோடு அதை உடனே செயல்படுத்த ஆரம்பித்துவிட வேண்டும் என சமயம் பார்த்துக் கொண்டிருந்தனர்.

அவர்களுக்கு இரைபோடுவது போல் கதிரவன் தன் சுதந்திரத்தை சுயஉரிமையை விட்டுக் கொடுக்க மாட்டேன் என்ற பிடிவாதத்தோடு லஞ்ச் பாக்ஸைத் தூக்கிக் கொண்டு மாதச் சம்பள வேலைக்கு கிளம்பிவிட்டதுஇன்னும்வசதியாய் போயிற்று.

சரிதான்! மாப்பிள்ளை இப்படித்தன் உரிமையை விட்டுக் கொடுக்காமல் ரோஷமாய் இருப்பதுதான் சரியான பாயிண்ட்! இந்த பாயிண்டை வைத்துக் கொண்டே அவரை நன்கு உசுப்பேற்றிவிட்டு ஆடவைத்துவிடலாம்.

அப்படி அவரை நினைத்தது போல் ஆடவைத்து விட்டால் பின் தங்களது திட்டத்தை செயல்படுத்துவது வெகு சுலுவாய்ப் போய்விடும்.

யோசித்து, முடிவெடுத்து திட்டம் தீட்டி அதை

மறுவாரமேசெயல்படுத்தவும் ஆரம்பித்துவிட்டனர்.

அதன்படி கதிரவன் தன் பைக்கில் வேலைக்கு கிளம்பும் சமயமாய்ப் பார்த்து அவன் காதுபட உரக்கப் பேசினர்.

'ஐயோ.... பார்! இந்த மாதிரிபங்களா வீட்டில் இருந்து கொண்டு.... தூக்குச் சட்டியை தூக்கிக் கொண்டு வேலைக்கு கிளம்பியாயிற்று. பார்க்கவே கேவலமாக தெரிகிறது....'

ஒருவன் சொல்ல அதற்கு மற்றவள், 'இதில் கேவலப்பட என்ன அக்கா இருக்கிறது? சம்பளம் ஜாஸ்தியாக இருக்கும்.... என்றாள் அதே உயரும் குரலில்.

'ம்ஹூம்! சம்பளம் என்ன? அதல்லாம் ஒண்ணும் பெரிசில்லை.... நம்பங்களா செக்கியூரிட்டி ரெண்டு ஷிப்ட் பார்த்தா சேர்த்து வாங்குற சம்பளம்தான்.... குறைச்சல்தான்...'

'அப்படியா? அப்போ எதுக்கு இவரு இப்படி வேலை பார்க்கணும்....?'

'எல்லாம் ஒரு நடிப்புதான் பாரதி....'

'நடிப்பா என்ன சொல்றீங்க அக்கா?'

'ம்ம்... மொதல்ல ரோஷமுள்ள மாப்பிள்ளை மாதிரி வேலைக்குப் போவாரு.... பின்னால வேலை பிடிக்கலைன்னு அப்படியே.... நம்மமாமாவை தாஜா பண்ணுவாரு..பின் மெதுவா நகைக் கடையில மாமாவோட நகை பிசினஸில வந்து ஒட்டிக்குவாரு....'

'அப்படியா? என்னால் நம்பமுடியலையே திலோ.....'

'பின்ன என்ன பாரதி? நம்மமதுக்குட்டியை காதல்ங்கிற பேரில அவரு வளைச்சுப் போட்டதே.... மாமாவோட கோடிக்கணக்கான சொத்துக்கள் மேல கண் வைச்சுத்தானே?'

'திலோ, நீ சொல்ற மாதிரி இப்படிகூட இருக்குமோ?'

'இருக்குமோ...என்ன...? அதான் உண்மைநீயே பாரு.அந்த ஆளு இன்னும் நிறைய ஸ்டண்ட் போடுவாரு. நடிப்பாரு....!'



அவர்கள் சொல்லிக்கொண்டே போக இந்த குத்தல் பேச்சைக் கேட்ட கதிரவனின் முகம் இறுகியது. பெரிய இடத்து பெண்மணிகள் என்று பார்த்தால் சாதாரண குழாயடிச் சண்டைக்காரிகள் போல் இந்தவம்பு, பேசுகிறார்களே என்ற எரிச்சலுடனே வண்டியைக் கிளப்பினான்.

மாதுரி கையசைத்து விட்டு வேலையாய் உள்ளே சென்று விட்டதால் அவளாலும் இந்த அண்ணிமார்களின் குத்தலை கவனிக்க முடியாமல் போயிற்று.

தங்கள் பேச்சைக் கேட்ட முகம் கறுக்க கதிரவன் விறுவிறுவென கிளம்பிப் போவதைக் கண்ட திலோத்தமாவும் பாரதியும் சியர்ஸ் சொல்வது போல் ஒருவர் கையோடு மற்றவர் கையை ஆனந்தமாய் தட்டி சந்தோஷத்தை வெளிப்படுத்தினர்.

'நம் திட்டப்படியே நாம் எதிர்பார்த்தபடியே... எல்லாம் நடக்கு. இப்படியே கொஞ்சநாள் செய்தால் போதும். நம்மபுது மாப்பிள்ளை ரோஷம் வந்து பொங்கி எழுந்திருவாரு... நம் வேலையும் ஈஸியாப் போயிடும். என்ன நான் சொல்றது சரிதானே திலோ?' என பாரதி கேட்க பெரிதாய் தலையாட்டி ரசனையாய் சிரித்தாள் திலோத்தமா.

அண்ணிமார்கள் அத்தோடு நிறுத்தவில்லை. தங்கள் திட்டப்படி தங்கள் கணவன்மார்களிடமும் விஷயத்தை பற்ற வைத்தனர். ஆனால் அதை நேரடியாக இல்லாமல் அவர்களுக்கு ஏற்ப வஞ்சிப்புகழ்ச்சி ஐடியாவோடு.

அண்ணன்மார்கள் குணசிலன், தயானந்தன் இருவருமேதங்கை மாதுரி மீதுகொள்ளை பிரியம் கொண்டவர்கள். அதனாலே அதைப் புரிந்து கொண்டு தாங்கள் சொல்ல வந்த விஷயத்தை தேனில் தடவி குழைத்தே அவர்கள் காதுகளில் ஏற்றினர்.... இருவரும்.

'பாருங்கள், நம் மதுக்குட்டி ஆசையாய் காதலித்து கட்டிய கணவர் லஞ்ச் பாக்ஸை தூக்கிக்கொண்டு பைக்கில் அனல் அடிக்கும் வெயிலில் கிளம்புகிறார். இங்கு நாம் என்னடா வென்றால்

மார்க்கெட்டுக்கு காய்கறி வாங்கக் கூட டிரைவர் ஏஸி காரை எடுத்துக்கொண்டு போகிறார்? என்ன இருந்தாலும் உங்கள் அன்புத் தங்கையின் மாப்பிள்ளை இப்படியெல்லாம் வெயிலில் அலைந்து சங்கடப்படுவது கஷ்டமாக இருக்கிறது... அதை நீங்களும் பார்த்துக்கொண்டு இருக்கிறீர்களே? முதலில் மாப்பிள்ளையை தினம் நம்காரில் வேலைக்குப் போகச் சொல்லுங்கள்.....'

சரிபார்த்து சமயம் பார்த்து இருவரும் தங்களது கணவன் மார்களிடம் இப்படி ஒத்து ஊத அவர்கள் நினைத்தது போலவே சகோதரர்கள் இருவரும் திகைத்தனர்.

இது ஏற்கனவே மனதுக்கு நெருடலாய் அவர்களுக்கு உறுத்திய விஷயம்தான். மதுக்குட்டியிடம் இதை சொல்லியும் பார்த்தாயிற்று. அவரது சுதந்திரம், உரிமைஎன்றெல்லாம் ஏதேதோ சொல்லி சங்கோஜப்படுகிறாள்.

மாப்பிள்ளையும் இந்த விஷயத்தில் சங்கோஜம் மட்டுமல்ல கூச்சமும் கொள்ளக்கூடிய ஆள்தான்! அதனால் இந்த விஷயத்தில் நாம் தான் குறுக்கிட்டு தடாலடியாய் எதாவது செய்ய வேண்டும். நம் மதுக்குட்டியின் மணாளரது ஸ்டேட்டஸை உயர்த்த வேண்டும்.

இருவரும் அந்த முடிவுக்கு வந்து மறுநாளே அதை செயல்படுத்தவும் துணிந்தனர்.

மறுநாள் கதிரவன் வழக்கம் போல் ஃபைல்களை எடுத்துக்கொண்டு வேலைக்குச் செல்ல வெளிவந்தவன் தனது பைக்கை நிறுத்திய இடத்தில் காணாமல் திகைத்தான்.

சிரித்தபடிஅவன் பக்கம் வந்த தயானந்தன், 'மாப்பிள்ளை பைக்கைத் தேடுகிறீர்களா? தம்பி குணசீலன்தான் ஒரு அவசர வேலை கருதி காருக்குப் பதில் டக்கென உங்கள் பைக்கை எடுத்துச் சென்று விட்டான். இன்று ஒருநாள் மட்டும் அலுவலகத்திற்கு நம் காரில் சென்று வாருங்கள்....' என சொன்னதோடு மட்டுமில்லாமல் கதிரவன் பேசக்கூட இடம் கொடுக்காதவனாய் 'டிரைவர்...., இந்தாப்பா.... காரைஇப்படிக் கொண்டு வா.... மாப்பிள்ளை சாரை கொண்டு போய் விட்டுவிட்டுவா....' என்ற உத்தரவுடன் அகல.... திகைத்துப் போனான் கதிரவன்!



அவனால் குணசிலன் தன் பைக்கை எடுத்துச் சென்றிருப்பான் என கொஞ்சமும் நம்ப முடியவில்லை.

உள்பக்கம் திரும்பி மாதுரியைத்தேடினான். அதற்கும் தயானந்தன், "மாப்பிள்ளை மாதுவுக்கு இந்த விஷயம் தெரியாது. அண்ணி பாரதிதான் உள்ளே சென்று பைக் சாவியை எடுத்து வந்தார்கள்...." எனவும் கதிரவனால் ஒன்றும் பேச முடியவில்லை.

அதற்கு மேலும் அவனை யோசிக்கவிடாமல் டிரைவர் கொண்டு வந்த காரில் கதவைத் திறந்து தள்ளாத குறையாய் அவனை உள்ளே ஏற்றி வழியனுப்பிவைத்த தயானந்தன். முகம் இறுக எரிச்சல்கொள்ள ஆரம்பித்தான் கதிரவன்.




கார் அவனது அலுவலகத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்க தலையில் கைவைத்துக் கொண்டான் கதிரவன்.

என்ன ஒரு கோமாளித்தனம்! அவனது பைக்கைவிட்டு விட்டு காரில் போகும்படி செய்து விட்டார்களே!

இந்த தயானந்தன் அவனைக் கொஞ்சமும் பேசக்கூட விடவில்லையே...! வந்தான். சடசடவென பேசிக்கொண்டே காரை கொண்டு வரும்படி டிரைவரிடம் சொல்லி அவனை தள்ளாத குறையில் அதில் ஏற்றி அனுப்பியும் விட்டானே!

பொதுவாக தயானந்தனிடமும் சரி குணசிலனிடமும் சரி கதிரவன் அவ்வளவு பேசுவது கிடையாது. பார்க்கும் போதெல்லாம் ஒரு புன்னகை சிறுசிற விசாரிப்புகள் என்று முடிந்துவிடும். மற்றபடி மச்சான்... மாப்பிள்ளை.... என்ற உறவுமுறைகொஞ்சல் எல்லாம் கிடையாது.

அதனாலே தயானந்தன் அப்படி திடீரென உரிமைஎடுத்துச் சொல்லும்போது அதை சட்டென மறுக்க வழியில்லாமல் கதிரவன் திணறினான். அந்த அவனது திணறலை சரியாய் பயன்படுத்திக்கொண்டு தயானந்தன் வேகப்படுத்தி அவனைக்காரில்

ஏற்றி அனுப்பியும் விட்டான்.

கதிரவனுக்கு அந்த சந்தேகமும் உதிக்காமலில்லை. உண்மையிலேயே குணசீலன் அவசரத் தேவைக்காக அவனது பைக்கை கொண்ட சென்றிருக்கிறாளா? அல்லது அவனை காரில் அலுவலகம் போக வைக்க வேண்டுமென்றே இப்படி ஒரு ஏற்பாடு செய்து வெள்ளோட்டம் பார்க்கிறார்களா?

என்ன அவசரம் என்றாலும் ரெடியாக இருக்கும் காரையும் டிரைவரையும் விட்டு விட்டு பைக்கை எடுத்துச்சென்றிருக்கானே....அது எதனால்? என்ற சந்தேகமும் வலுத்தது.

ஆனால் அவன் மேலும் யோசிக்க விடாதபடிவேகமாய் சென்று கொண்டிருந்த கார் ஒரு சற்று திருப்பத்தில் திரும்பியபோது நெரிசலான டிராபிக் ஜாமில் மாட்டிக்கொள்ள கார்வேகம் குறைந்து ஊரந்துசெல்லும் நிலமைக்கு வந்து விட்டது.

அலுவலகத்திற்கு வேறு தாமதமாகிவிடுமோ..? என்று கதிரவன் எரிச்சலாகி நிமிர்ந்து நெற்றியை தேய்த்தபடி வெளியே பார்வையை ஓட்டினான்.

மறுபடியும் அவனுக்கு ஒரு அதிர்ச்சி!

அங்கு வலது புறமாய் பஸ்ஸ்டாப் பக்கம் நிற்பது.... சாட்சாத் அவளது தம்பி மற்று தங்கைகள்!

என்ன.... இது.... கார் வேறு ஒரு வழியாய் அவனது அலுவலகத்திற்குச் செல்ல இப்படி மீனாட்சிபுரத்தில் கட் அடித்து ரவுண்டானா வழியாகத்தானே செல்கிறது.... ரவுண்டானா.... பஸ்ஸ்டாப்...அவனது வீட்டுப் பக்கம்...அங்குதானே வந்து அவனது தம்பி தங்கைகள் தினம் தினம் பஸ் ஏறுவார்கள்.... அதைக் கூட மறந்து விட்டானே அவன?

டிராப்ஜாம் வேறு ஆகிவிட்டதால் பஸ்வர இன்னும் தாமதமாகிவிடுமோ என அவர்கள் தவிப்பாய் பார்த்துக்கொண்டிருப்பதை கதிரவன் உடனே புரிந்து உணர்ந்துவிட்டான்.



அதனால் அவர்கள் பக்கம் கார் வந்ததும் டக்கென நிறுத்தச் சொல்லி கதவைத் திறந்து இறங்கிவிட்டான். பெரிய பளபளப்பு கார் ஒன்று தங்கள் முன் நிற்பதையும் அதிலிருந்து அண்ணன் கதிரவன் சிரிப்போடு இறங்கி வருவதையும் பார்த்த தம்பி தங்கைகளுக்கு திகைப்பு!

சந்தோஷத்தில், 'அண்ணா..... நீங்களா?' என்றனர் எல்லோரும் ஒரே மகிழ்ச்சிக்குரலில்

அவர்கள் பக்கம் சென்று சிரிப்பை பெரிதாக்கிய கதிரவன், 'ஆமாம்!... பேச நேரமில்லை முதலில் காரில் ஏறுங்கள். டிராபிக் ஜாம் ஆகிவிட்டதால் இப்போதைக்கு பஸ் வராது....' என அவசரப்படுத்த.... படபடவென மூவரும் காரில் ஏறினர்.

அந்த காரின் குஷன் இருக்கையும் இதமான நறுமணம் தடவிய ஏஸிகுளிர்ச்சியும்.... அப்படியே பஸ்ஸுக்காக வியர்க்க விறுவிறுக்க காத்திருந்தவர்களுக்கு சொர்க்கத்தைக் காட்டுவது போல் இருந்தது.

அதை நன்றாக அனுபவிப்பது போல் ஸீட்டில் சாய்ந்து கொண்ட உதயாதான், 'அண்ணா நீங்கள் தினமும் இப்படி காரில்தான் அலுவலகம் செல்கிறீர்களா?' என சாதாரணமாய் ஒருகேள்வியை கேட்க தவித்துப் போனான்... கதிரவன்!

தாங்கள் வெயிலிலும் பஸ்ஸிலும் வியர்க்க விறுவிறுக்க சங்கடப்பட அண்ணன் மட்டும் தினம் சொகுசுக் காரில் இப்படி செல்கிறானோ என்றுதான் நினைப்பானள்!

அந்த எண்ணமே.... தீயாய் சுடுவதுபோல் கதிரவனை தவிக்க விட்டு திணறடித்தது. ஒருவாறு சமாளித்தான் அவன்.

'இல்லை.... உதயா... இன்று பைக் ரிப்பேர்... அதனால்தான் கார்... மற்றபடி தினமும் நான் பைக்கில்தான் செல்கிறேன்...' என்றான் அழுத்தமாய்.

'ஐயோ...! கார் இருக்கும்போது நீ ஏன்பைக்கில் செல்ல வேண்டும் அண்ணா? காரிலே செல்லேன்...!' என்றாள் இன்னொரு தங்கை வசுமதி.

'அப்படி தினம்காரை எடுத்துக் கொண்டு இந்த பஸ்ஸ்டாப் பக்கம் வந்தால் நாங்களும் இப்படி தினம் ஏறிக்கொள்வோம்... என்றான் தம்பி பாலு...' விடாமல் அசட்டுச்சிரிப்புடன்

'ஐயோ....! அது முடியாது...தினம் வந்தால் அண்ணாவை அவர்கள் சத்தம்போட்டு விடுவார்கள்..!' என்றாள் உதயா அவசரமாய் கதிரவனை ஒரு விதமாய் பார்த்தபடி

'அவர்கள் சத்தம் போடுவார்களா? யார் அது?' என்றான் பாலு புரியாமல் கண்களை விரித்தபடி.

'மக்கு! அது கூடவா புரியவில்லை அண்ணன் கட்டியிருக்கிறாரே... பெரிய இடம்! பெரிய பணக்காரர்கள்...! பெரும் கோடீஸ்வரர்கள் அவர்கள்! விளக்கம் கொடுத்து உதயா இழுத்து வாய் பிளக்கச் சொல்ல', ம்ம்... புரிகிறது... புரிகிறது... என்றான் பாலு பெரிய மனுஷன் போல்.

காரை ஓட்டிய டிரைவர் நடுத்தர வயசுக்காரர்தான். ஆனாலும் வந்த சிரிப்பை அடக்க அவர் ரொம்பவும் சிரமப்பட வேண்டியிருந்தது. கதிரவனுக்கோ என்ன பதில் எதைச்சொல்ல என்றே புரியவில்லை.

அவஸ்தையாய் நெளிந்தபடி மாறி, மாறி எல்லோரையும் பார்த்தான். அசட்டுப் புன்னகையை உதிர்த்தான்.

பாலுவோ விடாமல், 'என்ன அண்ணா? உதய் அக்கா சொல்வது சரிதானே? அவர்கள் சத்தம் போடுவார்கள்தானே?' என்றான் அதே அப்பாவித்தனத்துடன்.

'அதை.... அதை விடுடா.... உன் படிப்பெல்லாம் எப்படி இருக்கிறது? மாத பரிட்சை ஆரம்பித்தாகிவிட்டதா? அதைச் சொல்...!' என்றான் பேச்சை முற்றும் மாற்றுபவனாய். அவன் பாலு பதில் சொல்வதற்குள் காரின் குஷன் ஸீட்டில் ஒய்யாரமாய் சாய்திருந்த வசுமதி நிமிர்ந்தவள், 'அண்ணா, கொஞ்சம் சிடி பிளேயரை போடச்சொல்லு அண்ணா. இப்படி எஸிக்காரில் பாட்டு கேட்டுக்கொண்டே சென்றால் ரொம்பவும் நன்றாக இருக்கும்....' என்றாள் அவனது நிலைமைபுரியாமல்.



நம் மானத்தை இப்படி ஒரேடியாய் வாங்கிவிடுவார்கள் போலத்தான்! என உள்ளுக்குள் பெரும் எரிச்சல் கொண்டாலும் அதைக் கொஞ்சமும் காட்டிக்கொள்ளாமல் கதிரவன் அசட்டுப்புன்னகையை மீண்டும் உதிரவிட்டான்.

அவனை மேலும் சங்கடப்படுத்த விரும்பாமல் டிரைவரே மியூசிக்சிஸ்டத்தை ஆன் செய்துவிட்டார். ட்ரம்ஸ்களை அதிர இனிமையான இசை ஒலிக்க ஆரம்பித்தது.

உதயாவும் பாலுவும் கைகளை தங்கள் தொடையில் தட்டி பாட்டை வெகுவாய் ரஸிக்க ஆரம்பித்து விட்டனர்.

ஒருவாறு பத்து பதினைந்து நிமிடத்தில் அவர்கள் இறங்க வேண்டிய இடங்கள் வர கதிரவன் இறக்கி விட்டு பத்திரமாக போகச்சொன்னான். மாலை வீட்டுக்கு வருவதாகசொல்லி அனுப்பினான்.

அவர்கள் சென்றதும், அப்பாடா...! என பெருமூச்சுடன் அவன் ஸீட்டில் சாயவும் கார் சிறிது நிமிடங்களில் அவனது அலுவலகத்தை அடையவும் சரியாயிருந்தது.

ஃபைல்களை தூக்கிக் கொண்டு அலுவலகம் நோக்கி இறங்கி நடந்தான். அப்போது ஒன்றிரண்டு சகவேலை பார்க்கும் நண்பர்கள் கண்ணில் அவனும்காரும் பட்டுவிட அன்று ஒரே கிண்டல்தான்!

அட.... இது ஐஸ்வர்யா ஜீவல்லர்ஸ் கடைகாராச்சே..?


வோல்ஸ்வேகன் எப்படியும் பத்தி பன்னிரண்டு லட்சம் இருக்கும்... ம்ம்... கதிரவன் கொடுத்து வைச்ச ஆள்தான்!

பின்... சும்மாவா... நகைக்கடை அதிபரின் மாப்பிள்ளையாயிற்றே...? பணத்தாலும்... நகையாலும் குளிப்பாட்டி விட மாட்டார்? இன்னும் பார்...! நம் கதிரவனின் ஃலைப்ஸ்டைல் மாறிவிடும். இனி இந்த வேலைக்கே அவர் வருவாரோ.... இல்லை கௌரவம் கருதி ராஜினாமா செய்து விடுவாரோ? எது ஒன்று நடந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை...தான்....!

ஆள் ஆளுக்கு அவன் காதுபடவே பேச எரிச்சலான கதிரவன் எழுந்து கைகளை உயர்த்தினான். அப்படி எல்லாம் எதுவும் நடக்கப்

போவதில்லை. நான்வேலையை ராஜினாமாவும் செய்யப்போவதில்லை. தயவுசெய்து இப்படி கற்பனை செய்வதை முதலில் நிறுத்துங்கள்...! என்றான் வந்த கோபம் முழுவதையும் அடக்கியவனாய்.

ஆனால் அன்று இரவு ரூமினுள் நுழைந்து மாதுரியிடம் கோபத்தைக் காட்டி ஒரு ஆடு ஆடிவிட்டான் கதிரவன்!




மாதுரிக்கு கதிரவன் அலுவலகத்திற்கு காரில் சென்ற விஷயம் முதலில் தெரியாது தான்!. ஆனால் இரண்டு அண்ணன்களும் சிரிப்பு பொங்க தங்களது பிளானைச் சொன்னபோது திகைத்தேவிட்டாள்.

ஐயோ! எதற்காக இப்படிச் செய்தீர்கள்? இதெல்லாம்அவருக்கு சுத்தமாகப் பிடிக்காதே! என பதட்டம் காட்ட அவர்களோ, நீ சும்மா இரு... மதுக்குட்டி! மாப்பிள்ளையை மாற்றி நம் லெவலுக்கு கொண்டுவர இப்படி தடாலடியாய் எதாவது செய்தாக வேண்டும். அதனால் தான் நாங்கள் திட்டம் போட்டு செய்தோம் குணசீலன் வேண்டுமென்றே உன் கணவரது பைக்கை எடுத்துக்கொண்டு வெளியே போ்க நான், வேறு வழியில்லை மாப்பிள்ளை நீங்கள் காரில்தான் போகவேண்டும் என தள்ளாத குறையாய் அவரைகாரில் அனுப்பிவைத்தேன்....! என்றார்கள் தங்கள் சாகசத்தை விளக்குவது போல்.

மாதுரி நிஜமாகவே தலையில் கைவைத்துக் கொண்டு அவர்களைப் பார்த்தாள்.

'அண்ணா! அவரை நம் லெவலுக்கு கொண்டுவருவது, அவரை மாற்ற முயற்சி செய்வது எதற்கு அண்ணா? அவர் அப்படியே இருந்துவிட்டுப் போகட்டுமே!'

'முடியாது மதுக்குட்டி...! அவர் என்ன வேற்றுநபரா? உன் மாப்பிள்ளை ஆயிற்றே! நம் வீட்டு நபராய் நம்குடும்பத்து



உறுப்பினராய் ஆகிவிட்டார். பின் நம்மைப் போல் சொத்து சுகங்களை அனுபவிக்க வேண்டியதுதானே? மாட்டேன் என்று பிடிவாதம் பிடித்தால் எப்படி?' இரு அண்ணன்களும் வரிந்து கட்டிக்கொண்டு பேசவர திகைத்துப் போனாள் மாதுரி. இவர்களிடம் எப்படி விளக்குவது? எப்படி புரியவைப்பது?

கதிரவனின் முக்கியமான நிபந்தனையே இந்த மாற்றிக்கொள்ள மாட்டேன் என்று அடம் பிடிக்கிற பிடிவாதம்தானே.... அது அவனைப் பொறுத்தவரையில் நியாயமும்தானே? பின் ஏன் இவர்கள் புரிந்து கொள் மறுக்கிறார்கள்?

அவள் குழப்பமாய் யோசிப்பதைப் பார்த்து பக்கத்தில் வந்த அண்ணன் தயானந்தன் செல்லமாய் அவள் தலையை ஒரு தட்டுதட்டி, 'எதற்காக நீ குழம்புகிறாய் கண்மணி? எல்லாவற்றையும் நாங்கள் பார்த்துக் கொள்கிறோம். மாப்பிள்ளையை எப்படியும் மாற்றி நம் ஸ்டேட்டஸுக்கு ஏற்றார்போல் உருவாக்கிக்காட்டுகிறோம் பார்!' என சிரிப்புடன் சவால் விடுவது போல் சொல்லி விட்டு இருவரும் அகன்றனர்.

மாலை வேலை முடிந்து லேட்டாக வந்த கதிவரன் முகம் அவள் நினைத்தது போவே இறுக்கமாக இருந்தது. டிபன், காபி கொடுத்தபோதும் அவன் எதுவும் பேசிக்கொள்ளவில்லை.

கொஞ்சம் டி.வி. பார்த்துவிட்டு மேல் மொட்டைமாடியில் கொஞ்சம் நடந்து விட்டு படுக்க வந்தான் கதிரவன். அப்போதும் அவனிடம் அந்த இறுக்கம் குறையவில்லை.

அவள் யூகித்தது போலவே பேச்சை ஆரம்பித்தான் அவன். காலையில் நடந்த விஷயம் எல்லாம் கேள்விப்பட்டிருப்பாய்தானே?என சாதாணமாக அவன் ஆரம்பிக்க, ஆமாம்! என தலையசைத்தாள் அவள்.

'உன் அண்ணன் தயானந்தன் ஒரே பிடிவாதமாய் என்னை காரிலேற்றி அலுவலகத்திற்கு அனுப்பி... விட்டார். ஆனால் நான் பட்ட.... அவஸ்தை...? ம்ஹூம்.... அதைச் சொன்னால் உனக்குப் புரியாது....!' என்றவன், எதற்காக அவர் இப்படி நாடகமாட வேண்டும்? என்றான் முகம் மாறி கோபம் கொண்டவனாய்.

'நாடகமா?' கேட்டபடி தன் முகபாவங்களை மறைக்க உதட்டைக் கடித்தாள் அவள்.

கதிரவன் திரும்பி நேருக்கு நேராய் பார்த்தபடி அவள் பக்கம் வந்தான். 'நானும் அவர்கள் சொன்னதை நிஜம் என்றுதான் நம்பியிருப்பேன். ஆனால் நான் அப்படிக் காரில் ஏறிதெருமுனையை தாண்டும்போது உன் அருமைஅண்ணன் மர மறைவு ஒன்றில் பைக்கை பிடித்தபடி ஒளிந்திருந்ததும் என் கண்ணில் பட்டது. விஷயத்தையும் புரிந்து கொண்டேன். உன் அண்ணன் குணசீலனுக்கு கியர் உள்ள பைக்கை ஓட்டத்தெரியாது. சும்மா உருட்டிக்கொண்ட வந்து மர மறைவின் நின்றிருக்கிறார். உன் இரண்டு அண்ணன்மார்களும். ஒரு அருமையான நாடகம் போட்டிருக்கிறார்கள். எதற்கா? சொல் மது!'

அவன் குரலை உயர்த்திய விதமும் பார்த்த பார்வையும் அவளை நடுங்க வைத்தது. இதற்கு மேலும் தெரியாதது போல் அவனிடம். நடிப்பது நல்லதல்ல என்ற முடிவுக்கு வந்து அண்ணன்களின் திட்டம் முழுவதையும் கக்கினாள்.

'இது...முன்பே எனக்குத் தெரிந்தால் தடுத்திருப்பேன். எல்லாவற்றையும் செய்து விட்டு கடைசியில்தான் விஷயத்தைச் சொன்னார்கள். என்னால் ஒன்றும் செய்ய முடியவில்லை! என்றபவடி கைகளை விரித்தவள்,என்னை நம்புங்கள்!' என்றாள் உண்மையை அவனுக்கு தெளிவாக உணர்த்தும் விதத்தில்.

கதிரவன் அவளைப்புரிந்து கொண்டான் என்று தான் சொல்ல வேண்டும். பக்கம் பந்து அவளை தன்னோடு கட்டிலில் உட்காரவைத்து அவள் கைகளை எடுத்து தன் மடியில்வைத்துக்கொண்டவன், 'உன்னை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது மது. உன் அண்ணன்களையும் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால் என் நிலையைப் பார்.... அது... அது.. தான் ரொம்பவும் கஷ்டம்...!'என்றான்.

அவள் புரியாமல் பார்க்க வழியில் காரில் தம்பி, தங்கைகளை ஏற்றிச் சென்றது அவர்கள் காரைப் பார்த்து அதிசயித்து கேட்டது.... மகிழ்ந்தது... அலுவலகத்தில் நண்பர்கள் கேலி... கிண்டலாய் ரகளை



செய்தது... என எல்லாவற்றையும் விளக்கினான்.

'இப்போது சொல் மது, போகிற போக்கைப் பார்த்தால் இவர்களே என்னை மாற்றி என்னுடைய சுயமரியாதையை இழக்கச் செய்துவிடுவார்கள் போலவே....' என்றான் கவலைதோய்ந்தகுரலில்.

மாதுரிக்கு அவன் சொல்வது அவனது நிலைமைநன்கு புரிந்தது.

அவனோ மேலும் விளக்கினான்.

'மது, பணக்கார வீட்டில் மாப்பிள்ளையாகிவிட்டோம் என்ற ஒரே காரணத்தினாலே... நான் எனக்குள்ள உரிமைகளை, சுயகௌரவத்தை விட்டுவிட வேண்டுமா?மேலும் உன் தந்தை கஷ்டப்பட்டு உழைத்துச் சம்பாதித்த கோடிகளில் சொகுசாய் இளைப்பாற உனக்கும் உன் அண்ணன்களுக்கு உரிமைஇருக்கிறது. ஆனால் சோம்பேறியாய் மாறி அதை நான் அனுபவிக்க நினைப்பது கொஞ்சமும் நியாயமில்லை. அதில் துளியும் எனக்கு இஷ்டமில்லை....!'

உறுதியான குரலில் அவன் முடிக்க, 'இனி அப்படி நடக்காது. நடக்காமல் பார்த்து கொள்கிறேன்....' என்றாள் அவள் தன்பங்குக்கு.

கதிரவன் அதில் சமாதானமடைய வில்லைதான். ஆனாலும் இந்த விஷயத்தில் மாதுரி மீது கோபம் காட்டுவதைவிட, தன் தவறும் இருக்கிறதென்று நினைத்தான்.

தயானந்தன், பைக் இல்லை... காரில் போகும்படி சொன்னது சரி. ஆனால்அதற்கு கதிரவன் பிடிவாதமாய் மறுத்திருக்கலாம் அல்லவா? மறுத்து பஸிஸீலோ...ஓர் ஆட்டோ பிடித்தோ அலுவலகம் சென்றிருக்கலாமே?

அதை விட்டுவிட்டுஅவனும் தயானந்தன் பேச்சுக்கு உடன்பட்டு விட்டானே?

அது தவறுதானே? அவன் மட்டும் தன் மன உறுதியை செயலிலும் காட்டியிருந்தால் வீண் பிரச்சினைகளை இப்படி எழுந்திருக்காதே?

மேலும் மாதுரியின் அண்ணன்மார்களும் மாப்பிள்ளை பிடிவாதக்காரர். அவரை வளைக்க முடியாது என ஒதுங்கிச் சென்றிருப்பார்களே?

அதை தவறவிட்டு விட்டோமே!

யோசித்தவன் அதே சிந்தனையோடு கட்டிலில் படுத்துக்கொண்டான். தன்னையே கவலையாய்ப் பார்த்த மாதுரியின் முகம் அவனை மேலும் பாதிக்க, அப்படியே அவளை இழுத்து அன்பாய் நெற்றியில் முத்தமிட்டான்.

'ஒன்றும்கலக்கம் வேண்டாம். எல்லாம் சரியாகப் போய்விடும்... நிம்மதியாகத் தூங்குவோமா?' என்றான். பதிலுக்கு காது மடல்கள் அதிர தலையாட்டியவள் இனிமையாய் புன்னகைத்து வழக்கம் போல் அவன் நெஞ்சினில் சாய்ந்து நிம்மதியாய் தூங்கவும் ஆரம்பித்தாள்.

அத்தோடு இந்த கார் பிரச்சனை ஓய்ந்துவிட்டது என்றுதான் கதிரவன் நினைத்திருந்தான். ஆனால் மறுநாள் காலை வேறு ரூபத்தில் வந்து அது தாக்கியது.

வேறு என்ன? அண்ணிமார்கள் பாரதி, திலோத்தமா உருவத்தில்தான்!

மொட்டைமாடி பால்கனிப்பக்கம் சூரியஒளியை பார்த்தவாறு யோகா செய்யச் சென்றவனை பின்புற தோட்டத்துப்பக்கம்நின்று பேசிய அவர்களது குரல் தாக்கியது.

அவனுக்கு கேட்கவேண்டும் என்றே உச்சஸ்தாய குரலில் வம்புப் பேச்சு!

'பாருக்கா, நம் மதுக்குட்டியின் மாப்பிள்ளை ரோஷக்காரர்... இனி காரில் எல்லாம் போகமாட்டேன் என அடம்பிடித்துவிட்டார். எப்போதும் எளிமையாக இருப்பாராம்...'

பாரதி சொல்லி முடிப்பதற்குள் திலோத்தமாவின் அடக்கமுடியாத சிரிப்புச்சத்தம். தொடர்ந்து, எதற்கு அக்கா சிரிக்கிறீங்க? என்று பாரதிவினவ பதிலுக்கு அவளது விளக்கவுரை.

'ஐயோ! அப்பாவியா இருக்கிறியே பாரதி! அந்த மாதுரி



வீட்டுக்காரர் போடுவதெல்லாம் சும்மா... நடிப்பு.... ஒரு நாடகம்! உள்ளூர ஒர திட்டத்தோடதான் அவர் இந்த எளிமைவேஷத்தையே போட்டிருக்கார்....'

'அப்படியா?'

'ம்ம்...நீயே பாரேன்! கார் வேண்டாம்ன்னு காரில ஏறவே யோசிச்சவரு. கார் கிளம்பிய பத்து நிமிஷம் கழிச்சுப் பார்த்தா... அதே காரில தன்னோட தம்பி, தங்கைன்னு எல்லோரையும் அவங்க நின்ன பஸ் ஸ்டாப்பில போய் ஏத்திக்கிட்டு ரவுண்டு போறார.... காரில குஷால கூட்டிட்டுப்போய்அவங்க இறங்க வேண்டிய இடங்களில ட்ராப் செய்யறார். இதை தற்செயலா அந்தப் பக்கம்போன நான் என்னோட இரண்டு கண்ணால பார்த்தேன்... நீயே சொல்.... இது நியாயமா? பணக்காரத்தனத்தை காரைப்பிடிக்கல நான் நானாகவே இருப்பேன்னுல்லாம் டயலாக் பேசறவரு செய்யுற காரியமா? இப்ப புரியுதா? எல்லாமேநடிப்பு!'

திலோத்தமா சொல்வதைக் கேட்டு கதிரவனும் துணுக்குற்று விட்டான். 'அட... இதையும் பார்த்து விட்டார்களா? எப்படி? தற்செயலாய் பார்த்தார்களா? இல்லை.... காரை பின்தொடர்ந்து வந்து பார்த்தார்களா?' என்று யோசித்தவனுக்கு டக்கென டிரைவரின் ஞாபகம் வந்தது.

டிரைவர் அவர்களிம் வேலைபார்க்கும் விசுவாசமான ஆள். அவர்தான் சொல்லியிருக்க வேண்டும். முடிவுக்கு வந்தவன் தொடர்ந்து அவர்களது வம்பு பேச்சைக் கேட்க விரும்பாதவனாய் அங்கிருந்து அகன்றான்.

வேறு எந்த சிந்தனையும் போட்டுக் குழப்பமால் அடுத்த அரை மணி நேரத்தில் அலுவலகம் கிளம்ப தயாரானவனுக்கு அடுத்த சோதனையும் ஏற்பட்டது.

வாசல் கூர்க்கா பங்களாவின் பெரிய கேட்டை திறக்க...உள்ளே நுழைந்து கொண்டிருந்தது அவனது தம்பியும்,தங்கைகளும்தான்!

பார்ப்பது கனவா... நிஜமா? இவர்க்ள எப்படி இங்கு...?

பள்ளிக்கு காலேஜுக்கு செல்ல வேண்டிய நேரத்தில்.... அவனைத் தேடி...? என திகைத்தவன் அவர்க்ள கையில் புத்தகங்கள் இருப்பதைப் பார்த்து ஓரளவு நிம்மதியடைந்தான்.

வந்தவர்களை புன்னகையுடன் வரவேற்று சோபாவில் உட்காரவைத்து கேட்டபோது வசுமதி கையில் கொண்டு வந்திருந்த இரண்டு ஃபைல்களை நீட்டினாள்.

'அண்ணா, நீ நேற்று மாலை வீட்டுக்கு வந்து விட்டுச் சென்றபோது மறதியாய் இந்த ஃபைல்களை வீட்டிலேயே வைத்துவிட்டுப்போய் விட்டாய். அதான் கொடுத்து விட்டுப்போக வந்தோம்.....'

வசுமதி சொல்ல அவனுக்கு எல்லாம் புரிந்துவிட்டது. தனக்காக மெனக்கெடுத்து வந்திருக்கிறார்கள். என்ன ஒரு மறதி! இவர்களைப் போய் ஏன் இங்கு வருகிறார்கள்? என எரிச்சல் கூட கொண்டோமே.. சே! என தன்னைத்தானே நொந்து கொள்ளவும் செய்தான் அவன்.

அதற்குள் அவர்கள் வந்திருப்பதை அறிந்து மாதுரி ஓடிவந்து வரவேற்றாள். காபி, டிபன், பலகார அயிட்டங்கள் என தட்டில் நிறைய கொண்டுவந்து உபசரித்தாள். ஐயோ, அண்ணி! நாங்கள் வீட்டில் சாப்பிட்டு விட்டோம். காபி மட்டும் போதும்! என்றனர். எல்லோரும்.

பின் மாதுரி வீட்டுத்தோட்டச் செடிகளை சுற்றிக் காண்பித்தாள். அதற்குள் கதிரவனும் அலுவலகத்திற்கு தயாராகிவிட்டான்.

'சரி போவோமா? வாருங்கள்! உங்களை பஸ் ஏற்றி விட்டு நானும் கிளம்புகிறேன்!' என்றபடி கதிரவன் நடக்க முயலதங்கைகளின் குரல் அவனைத் தடுத்தது.

'பஸ்ஸா...? ஐயோ அண்ணா! மணியைப் பார்... இன்னும் பத்து நிமிடங்கள் தான் இருக்கிறது.... இதில் பஸ் ஸ்டாப் போய் பஸ்ஸுக்காக நின்றால்... அவ்வளவுதான். பேசாமல் காரை எடு...நேற்று போல் இன்றும் எங்களை ட்ராப் செய்துவிட்டு உன் ஆபீஸிக்குப் போ....!' என சர்வசாதரானமமாய் சொல்லிவிட்டு



முன்புற போர்டிகோவில் தயாராய் நிற்கும் கார்பக்கம் அவர்க்ள நடக்க ஆரம்பித்துவிட்டார்கள்.

கதிரவன் அவர்களின் அந்த பேச்சைக் கேட்டு ஸ்தம்பித்துப் போனான். திருமபி மாதுரியைப் பார்த்தான். அவள் முகத்திலும் அதிர்ச்சி! ஆனால் இதனால் கதிரவன் வேறு ஒரு முடிவு எடுக்கக் கூடும் என அப்போதே மாதிரி யூகித்து விட்டாள்.



## 13



மாதுரி நினைத்து போலவே அலுவலகம் வந்த கதிரவனுக்கு ஒன்றும் ஓடவில்லை தான். தான் நினைப்பது ஒன்று நடப்பது ஒன்று என்று இருப்பது பெரும் பயத்தை உண்டு பண்ணியது.

பயம் என்றால் எது நடக்கக் கூடாது எந்த பணக்காரத்தனத்தில் தான் சிக்கிக்கொள்ளக்கூடாது என நினைக்கிறானோ அதில் அவனே வலியப் போய் சூழ்நிலைக் கைதியாய் மாட்டிக் கொள்ளும் நிலைமை!

இப்படியே போனால் கண்டிப்பாய் அதுதான் நடக்கும் என கதிவனுக்கு தோன்றியது.

நேற்றோடு கார் பிரச்சினை முடிந்தது என்றால் இன்று மறுபடியும் சூழ்நிலைவசப்பட்டு, தம்பி தங்கைகளுக்காக காரில் வர வேண்டியதாயிற்று.

அப்படி அவன் காரில் ஏறும்போது எதிர்மாடியிலிருந்து பார்த்த மருமகள்கள் பாரதியும், திலோத்தமாவும் அவுனைப் பார்த்தது...அந்த அலட்சியமான நமட்டுச் சிரிப்பை அவனைப் பார்த்து சிரித்தது... எல்லாம் அவன் வாழ்நாளில் மறக்க முடியாத அவமானம் போல் ஆகிவிடுமோ... என்ற அச்சம் உண்டாயிற்று.

அன்று முழுவதும் வேலையில் லயிக்க முடியாமல் தவித்தவன் ஒருவாறு நேரத்தைப் போக்கி மாலை வரை காத்திருந்தான்.

வேலை நேரம் முடிந்ததும் கிளம்பி வீடு வந்தான்.

சீக்கிரமேஅன்று அவன் வந்து விட்டதை உணர்ந்த மாதுரி அவன் முகத்தில் ஓடிய குழப்ப ரேகைகளைப் பார்த்து ஒன்றும் கேட்காமல் காபியை கலந்து கொண்டுவந்து நீட்டினாள்.

தம்ளரை வாங்கி பக்கத்தில் வைத்தவன் அப்படியே கைகளால் அவளை தன் பக்கம் இழுத்தான்.

அவள் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை.

சட்டென அவளை தன்மேல் சாய்த்து இறுக அணைத்தான்.

அவளுக்கும் குபீர் என ஒரு சந்தோஷஊற்று.

தாலி கட்டி கணவன், மனைவி ஆகிவிட்டாலும் அது என்னவோ இதுவரை நடப்பது எல்லாம் இதுபோன்ற சிறுசிறு அணைப்புகள்தானே?

அந்த சுகத்தை ஏன் விடுவானேன்? என்பது போல் அவளும் அவனை அணைத்துப் பிடித்துக்கொண்டாள்.

கொஞ்ச நிமிடங்கள் இருவரும் அந்த நிலையிலேயே இருந்தார்கள்.

பின் அவன் அணைப்பை விலக்கி அவள் முகம் நிமிர்த்தினான். பார்த்தான். 'நம் அன்புக்கு முன்னால் எதுவும் குறுக்கே வரக்கூடாது மாது....' என்றான்.

அவளுக்கு அவன் சொல்வது எதுவும் புரியவில்லை. இருந்தும் அவள் பாட்டுக்கு தலையசைத்தாள். அவன் விடவில்லை.

மறுபடியும் அதேபோல் இறுக ஒரு அணைப்பு செய்தான்.அவளைத் தழுவிய கரங்களால்அவள் முதுகுப் பகுதியை மெல்ல வருடியவன், 'பார் மது, இந்த சின்ன அணைப்புகூட எவ்வளவு சுகத்தைக் கொடுக்கிறது. நீ ஏன் புரிந்து கொள்ள மாட்டேன் என்கிறாய்?' காதோரமாய் அவன் அப்படி கிசுகிசுத்தது மகிழ்ச்சிக்கு மாறாக அவளை அதிரவே செய்தது.

அவன் இந்த அணைப்பை வெறும் அன்பினால் செய்யவில்லை எதையோ அவளுக்கு உணர்த்த எதையோ அவளிடம் சொல்லப் போவதற்கு ஆரம்பமாய் இதைச் செய்கிறான்



என்பதும்அவளுக்கு புரிந்து விட்டது.

மீண்டும் அவளை விடுவித்து நேருக்கு நேர்அவள் கண்களைப் பார்த்து, 'நான் சொல்ல நினைப்பது உனக்குப் புரிகிறதா?' என வெளிப்படையாகவே கேட்டான்.

அவளுக்கு ஓரளவு புரிந்து விட்டதுதான். ஆனாலும் இதைத்தான் சொல்ல வருகிறான் என எப்படி கணிக்க முடியும்? நாம் ஒன்று நினைக்க அவன் வேறு ஏதோ சாதாரண விஷயத்தைச் சொல்லிவிட்டால்.... பின் அவள் நிலை... வலியப்போய் வாயைக் கொடுத்தது போல் அல்லவா ஆகிவிடும்?

'நீங்களே சொல்லுங்கள்....' என்றாள் அவள்... ஜாக்கிரதை உணர்வுடன்.

அவன் இன்னும் அவளை அணைத்த கரங்களை விலக்கவில்லை. அதே தழுவலுடனே குனிந்து அவளது முகத்தை ஆசையாய் பார்ப்பது போல் பார்த்தான். எவ்வளவு அழகாய் தங்கச்சிலையாய் நீ ஜொலிக்கிறாய் தெரியுமா? கேட்டபடி அவள் நெற்றியில் ஸ்டைலாய் புரண்டிருக்கும் கூந்தல் சுருளை விலக்கி அங்கு மென்மையாய் முத்தமிட்டான்.

பின், 'இங்கு வேண்டாம் மது.... பேசாமல் என் வீட்டுக்கு...' வந்து விடு. புது மருமகள் புகுந்த வீட்டில் இருப்பதுதான் சரி....! என்றான்.... தீர்மானம் செய்தது போல்.

பழத்தில் ஊசியேற்றுவது போல் என கதைகளிலும் சினிமாக்களிலும் வசனங்கள் வருவதை அவள் கேள்விப்பட்டவள் இன்றுதான்அதை நேரிடையாய் உணர்ந்தாள்.

எவ்வளவு சாதாரணமாய் எவ்வளவு ஈஸியாய் அந்த வார்த்தைகளைச் சொல்லிவிட்டான் அவளால் நம்ப முடியவில்லை.

'என்ன சொல்கிறீர்கள்?'"என்றாள்.

திரும்பவும்அதே போல் அவளைப் பார்த்தவன், 'எனக்கு இந்த உன் வீடு... பணக்காரத்தனமான சூழ்நிலை சுத்தமாக ஒத்துவரவில்லை மது. பேசாமல் நீ என்னுடைய அந்த ஏழைக் குடிசைக்கே வந்துவிடு. நாம் சந்தோஷமாக அங்கு வாழலாம். என்ன

சொல்கிறாய்?'

வெகு சாதாரணமாக கேட்டு விட்டான். என்ன இவன்? எல்லாவற்றையும் மறந்து விட்டானா? அவர்களது கல்யாணம் நடந்ததே இந்த விஷயத்தை அஸ்திவாரமாய் வைத்துதானே? அப்பா திருமணத்திற்கு சம்மதித்ததே வீட்டோடு மாப்பிள்ளை என்ற நிபந்தனையுடன் தானே?

பின் அதையே மறந்து உதறிவிடுவதுபோல் பேசினால் எப்படி?

என்ன யோசிக்கிறாய் மது?

அவளால் உடனே பதில் சொல்ல முடியவில்லை. கொஞ்ச நிமிடங்களுக்குப்பின் அடைத்த தொண்டைக்குழிழை சரி செய்தபடி, 'அப்பா... அவர்.... அவர்... சம்மதிக்க வேண்டுமே?' என்றாள்.

'அவரை சம்மதிக்க வைக்க வேண்டியது உன் பொறுப்பு....' என்றவன் தொடர்ந்து, 'மது, உனக்காக எவ்வளவோ செய்ய நினைக்கிறவர் நீ சந்தோஷமாக வாழ வேண்டும் என்றால் இதைக்கூட செய்ய மாட்டாரா? இதற்கு வட சம்மதிக்க மாட்டாரா?' என்றான். எதிர்கேள்வி கேட்பது போல்.

முதலில் சொன்ன விதமும், முகபாவனையும் மாறி அவன் முகத்தில் ஒருவித இறுக்கம் படர்வதை உணர்ந்து திடுக்கிடவே செய்தாள்.

அதை உணர்த்துவது போல் அவனும் அவளை முழுவதும் விடுவித்து கைகளை கட்டிக்கொண்டான். 'ஒரு விஷயத்தை மீண்டும் தெளிவு படுத்தி விடுகிறேன் மது. எந்தச் சூழ்நிலையிலும் என் தன்மானத்தை இழந்துவிட்டு, உன் வீட்டு வசதிகளில், உன் தந்தையின் சம்பாத்தியத்தில் என்னால் உழன்று திளைக்க முடியாது. என் உழைப்பில் என் சம்பாத்தியத்தில் வாழ்வதுதான் எனக்குப் பிடிக்கும். சந்தோஷத்தைக் கொடுக்கும். அதை நீ புரிந்து கொள்வது நல்லது...' என்றவன் திரும்பி அவளை உற்றுப் பார்த்துவிட்டு, மற்றபடி உன் இஷ்டம்....' என முடித்தான்.



அதன்பின் ஒன்றும் கதிரவன் பேசவில்லை. படுக்கையில் படுத்தவன் அவளுக்கு எதிர்புறமாய் திரும்பிக்கொண்டு தூங்கியும் விட்டான்.

எவ்வளவு பெரிய விஷயம்? இதை எந்த முகத்தை வைத்துக்கொண்டு தந்தையிடம் அவளால் பேசமுடியும்?

திகைத்து திடுக்கிட்டாள் அவள்.




அடுத்து வந்த சில நாட்களில் கதிரவன் அவளை அரிக்காத குறையாய் ஒரே நச்சரிப்புத்தான். உன் தந்தையிடம்இன்னுமா சொல்லவில்லை? சீக்கிரம் சொல்லு. இந்த வாரமேஇங்கிருந்து கிளம்பி விட வேண்டும்! எனகெடுவேறு வைத்து விட்டான்.

கல்யாணம் முடிந்து இன்னும் ஒரு மாதம் கூட முடியவில்லை. அதற்குள் கல்யாணத்திற்காக அப்பாவிடம் கொடுத்த வாக்குறுதியை காற்றில் விட்டால் எப்படி?

அவள் தயங்குவதைப் பார்த்து தோளோடு அவளை அணைத்துப் பேசியவன், 'இது நமது வாழ்க்கை மாது. நாம் தான் முடிவெடுக்க வேண்டும். மற்றவர்கள் தீர்மானப்படி நடந்தால் அது சரிப்பட்டு வராது' என தத்துவமும் சொன்னான்.

ஒருவாறு மாதுரி தைரியம் பெற்று அவன் வேலைக்குச் சென்றிருக்கும் சமயமாய்ப் பார்த்து தந்தையைத்தேடிச் சென்றாள். தயங்கித் தயங்கி அவள் விஷயத்தை ஆரம்பித்ததுமேடக்கென முழுவதையும் யூகித்துக்கொண்டார் மோகன்ராம்.

'ஏன், மாப்பிள்ளைக்கு இப்படி சொகுசாய் இருப்பது அதற்குள் கசந்து விட்டதா?' என்றார் தனது கோபத்தை குரலில் காட்டி.

'இல்லையப்பா.... அது அவருக்கு உறுத்தலாக இருக்கிறதாம்... அடுத்தவர் கஷ்டப்பட்டு உழைத்து சம்பாதித்த பணத்தில்....'

அவள் முடிப்பதற்குள், 'சரியான ரோஷக்காரர்தான். ஆனால் இதையெல்லாம் காதலிக்கும்போத அவர் புத்திசாலித்தனமாய் யோசித்திருக்கவேண்டுமே? கோடீஸ்வர குடும்பப் பெண் ஒருத்தியை காதலிக்கிறோம். இதெல்லாம் சரிப்பட்டு வருமா? அப்படி சரிப்பட்டு வந்தால் என்னென்ன மாறும், மாற்றம் வரும் என்றெல்லாம் எளிதில் கணிக்க கூடியது தானே? இது கூடவா அவருக்கு தெரியாமல் போயிற்று?' என்றார் முகம் இறுக.

தந்தையின் கேள்விகளுக்க மாதுரியால் ஒன்று பதில் சொல்ல முடியவில்லை. குனிந்து பல்லைக் கடித்தபடி இருந்தாள்.

மோகன்ராம் அதற்குப்பின்மௌனமாகி தீவிரமாய் யோசிப்பது போல் கைகளை கட்டியபடி குறுக்கும் நெடுக்கும் நடந்தார்.

என்ன முடிவு எடுக்கப் போகிறார்? என்ன பதிலைச் சொல்லப் போகிறார்? என்ற தவிப்பு மாதுரியுள்அதிகரித்தது.

'ஆக... கல்யாணத்தின் போது சொன்ன வாக்குறுதியை மீறப் பார்க்கிறார்... சொன்ன சொல்லை மறந்து விட்டார்...' என்றவர் தொடர்ந்து, அவனை நோக்கி முகத்தை திருப்பி கண்களைச் சுருக்கியபடி' இப்போது என்ன... வீட்டோடு மாப்பிள்ளையாய் இருக்கப் பிடிக்காமல் உன்னை அவரது வீட்டுக்கு அழைத்துச் செல்ல ஆசைப்படுகிறார். அப்படித்தானே?' என்றார் கோபக்குரலை மேலும் உயர்த்தியபடி.

தரைதாழ வைத்த கண்களை கொஞ்சமும் விலக்காமல் தலையசைத்தாள் அவள். ஆனால் அதைத் தவிர நிமிர்ந்து தந்தையிடம் ஒன்றும் பேசமுடியவில்லை.

தந்தை கேட்பது நியாயம் தானே? கல்யாணத்தின்போது கல்யாணத்திற்கு சம்மதிக்க அவர் போட்ட முக்கியமான நிபந்தனையே இந்த வீட்டோடு மாப்பிள்ளை விஷயம்தானே...? பின்



அதையே மீற நினைத்தால் எப்படி? இது ஏன் கதிரவனுக்கு கொஞ்சமும் புரியவில்லை... மண்டையில் உரைக்கவும் இல்லையே?

முகம் இறுக கோபமாய் பேசிய மோகன்ராம் மேலும் ஒரு சில நிமிடங்கள் மௌனித்து விட்டு பின் அதே வேகத்தில் நிமிர்ந்தார்.

அவரது சிவந்த விழிகள் பயப்பார்வையுடன் தன்னையே பார்த்து தவித்த மாதுரியின் நிலைமையைக் கண்டதும் ஓரளவு சாந்தமும் ஆகியது. அதே யோசனையில் அவள் பக்கம் வந்தவர் அவள் தலையை பரிவாய் தடவியபடி, 'நீ எதற்கு கலங்குகிறாய் செல்லம்? இதில் உன் தவறு எதுவும் இல்லையே!... என்ன.... மாப்பிள்ளைதான் என்னை... என் முடிவை அலட்சியப்படுத்துகிறார். அவருக்கு நான் யாரென்று விரைவில் புரிய வைக்கிறேன்...' என்றவர் டக்கென முகத்தை எதிர்புறமாய் திருப்பிக்கொண்டு, 'நீ தாராயளமாய் அவருடன் புகுந்த வீட்டுக்குச் செல்லலாம். எனக்கு ஒன்றும் ஆட்சேபனை இல்லை போய் வா செல்லம்!' எனச் சொல்லியபடி விறுவிறுவென அங்கிருந்து அகன்று விட்டார் அவர்.

தந்தை முழுமனதுடன் சொல்லவில்லை. கடும் கோபத்தை அடக்கிக்கொண்டுதான் இப்படியெல்லாம் பேசுகிறார் என்பது மாதுரிக்கு நன்றாகப் புரிந்துவிட்டது.

ஆனால் அதற்கு மேல் அவரிடம் பேசி அவரைச் சமாதானப் படுத்துவதோ அவரது கோபத்தை குறைக்க நினைப்பதோ முடியாத காரியம். இந்த அளவுக்கு அது கோபத்தில்ன வெளிப்பாடாக இருந்தாலும் அவர் எரிச்சலாய் சம்மதித்ததே பெரியவிஷயம்.

அதை கெட்டியாக பிடித்துக்கொண்டு இப்போதைக்கு பிரச்சினையை சமாளிப்போம் என முடிவுக்கு வந்தாள் அவள்.

கதிரவனிடம் அன்று இரவே தந்தை சம்மதித்து விட்ட விஷயத்தைச்சொல்லியவள், அவர் உள்ளூர காட்டிய கோபத்தை சொல்லாமல் மறைத்தாள்.

அவனோ அதற்கு, 'பார்த்தாயா? நான் சொன்னது சரிதானே? உன் மீது அபரிதமான பாசம் வைத்திருக்கிறார். நீ என்ன சொன்னாலும் தலையாட்டுவார்... என்று...?' என பெரும்

கண்டுபிடிப்பு செய்தது போல் அவன் கூற, ஏன்,அந்தப் பாசம் உங்களிடம் இல்லையா? என கேட்கத் துடித்து நா வரை வந்த வார்த்தைகளை கஷ்டப்பட்டு அடக்கினாள்.

ஆனால் கதிரவன் கில்லாடியாயிற்றே! நொடியில் அவளது மௌனத்தையும், அதனால் ஓடிய முக மாற்றத்தையும் கவனித்து விட்டவன், 'நானும் அதேபோல் உன்னிடம் பாசம் வைத்திருக்கத்தான் செய்தேன். இல்லாவிட்டால் கல்யாணத்தின்போது வீட்டோடு மாப்பிள்ளை விஷயத்திற்கு சம்மதித்திருப்பேனா... யோசித்துப் பார்... என்ன... இப்போது சில சூழ்நிலைகளால் நான் இந்த முடிவுக்கு வர வேண்டி இருக்கிறது....' என விளக்கம் கொடுத்தான்.

அவன் சொல்வதிலும் ஓரளவு உண்மைஇருக்கத்தான் செய்கிறது என்பதை அறிந்தவள் போல் தலையாட்டியவள், 'எனக்குப் புரிகிறது....! என்றாள். பின் தன் சம்மதத்திற்கு அடையாளமாய் புன்னகை முழுவதையும் காட்டி, சிரிக்கவும் செய்தாள். அதில் உற்சாகமான கதிரவன் பக்கம் வந்து அவளை தோளோடு அணைத்துப் பிடித்தான், 'இந்தப் புன்னகை ஒன்றே போதும் கண்மணி, நாளையே நாம் கிளம்பிவிடுவோம். ஆனால் அங்கு பார்... என் வீட்டில் உன்னை ராணி போல வைத்து கவனித்துக்கொள்கிறேன். என்ன சரிதானா?' என்றவன் அத்தோடுகண்களைச் சிமிட்டி கிசுகிசுப்பாய்', இதுவரை நாம் தடைபோட்டு வைத்திருக்கும் எல்லா இன்பங்களுக்கும் அங்கு அனுமதி கிடைத்துவிடும்...' என்றபோது முகம் முழுவதும் சூடேற சிவந்தாள் அவள்.

அதற்குப் பின் இன்னும் இரண்டு நாளில் கிளம்பிவிடுவோம் என நாளும் குறித்தான் கதிரவன்.

அந்த இரண்டு நாளும் மாதுரிக்கு ஒரே தவிப்புதான். அவஸ்தைதான். இரண்டு அண்ணன் மார்களிடமும் சொன்னபோது, 'மாதுரி, உனக்கு என்னதான்ஆயிற்று? அங்கு மாப்பிள்ளையின் ஒட்டு வீட்டில் போய் உட்கார்ந்து என்னதான் நீ செய்வாய்?' என கேள்விகளால் பிய்த்தெடுத்தபோது, 'கொஞ்சநாள்தான் அண்ணா...



அவர் விருப்பப்படுகிறார்.... எனக்காக பொறுத்துக் கொள்ளுங்கள்... ப்ளீஸ்!' எனக் கெஞ்சிக் கூத்தாடி ஒருவாறு அவர்களை சமாளித்தாள்.

ஆனால் தந்தை மோகன்ராம்தான் எதையும் காட்டாமல் அவளிடம் பேசினாலும் அந்த உள்ளத்து கடுகடுப்பை குறைக்காமல், 'தாராளமாக போய் வா செல்லம்! ஆனால் அந்த ஆளை நான் சும்மா விடமாட்டேன்...!' என்றார் சவால் விடுவது போல்.

அதற்குள் மாப்பிள்ளை மூன்றாம் நபர் போல் அந்த 'ஆள்' ஆக மாறிவிட்டாரா தந்தைக்கு? கலவரமாய் திகைத்தாள் மாதுரி.

கதிரவன் சொன்னபடியே மூன்றாவது நாளில் புகுந்தவீடு வந்தாகிவிட்டது.

புகுந்த வீட்டு உறுப்பினர்களுடன் ஏற்கனவே பேசிப் பழகி சிரித்து மகிழ்ந்திருந்ததால் மாதுரிக்கு ஒன்றும் அங்கு வித்தியாசம் தெரியவில்லை.

அவள்அறியாத தாய்ப் பாசத்தை உணர்த்த கதிரவனின் தாய், உடன் பிறவா சகோதரிகளாய் அவனது தங்களைகள் என சந்தோஷமாகவே உணர்ந்தாள்.

ஆனால் முன்பு போல் இல்லாமல் தாயும் மகள்களும்அவளிடம் பேச ஒருவிதமாய் சங்கோஜப்படுவதை உணர்ந்து சரிசெய்ய முயற்சித்தாள் கற்பகம் அவளை எந்த வேலையும் செய்யவிடாமல் வலியப் போய் தடுத்தாள்.

'வேண்டாம் கண்ணு.... நீ செல்வ செழிப்பில் வளர்ந்தவள். இப்படியெல்லாம் வீட்டு வேலை செய்து கஷ்டப்படக்கூடாது...' என்ற போதுதான் அவர்கள் சங்கோஜப்பட்டதற்கான காரணமேஅவளுக்குப் புரிந்தது.

ஆக... அவள் பணக்காரி... கோடிஸ்வரர் மகள் என்றெல்லாம் மனதில் பதிந்து தான் இந்த பயமா?

இது ஆபத்தானே... உடனே அதை போக்கியாக வேண்டும் என தீர்மானித்தவள் பிடிவாதமாய் சமையலில் இருந்து துவைப்பது வரை வீட்டு வேலைகள் அத்தனையும் இழுத்து போட்டுக்கொண்டு செய்தாள்.

அத்தோடு காய்கறி, மார்க்கெட் மளிகைச் சாமான் என்று எது வாங்க வேண்டுமானாலும் சின்னத்தங்கை உதயாவுடன் கூடையைத் தூக்கிக்கொண்டு கிளம்பினாள்.

வசுமதிக்கு கல்லூரிப் பாடங்களின் சந்தேகங்கள், ரிக்கார்டு நோட்டில் படங்கள் வரைவதில் இருந்து குட்டித்தம்பி பாலுவை படிக்கவைத்து டியூசன் எடுப்பது வரை தன் வேலையாய் அவள் சந்தோஷமாய் செய்தாள்.

இரவில் கூடி டி.வி. முன் வரியாய் அமர்ந்து கேலியும், கிண்டலுமாய் சிரிக்கச் சிரிக்க உணவருந்தினாள்.

தங்கைகள், அவளது இனிமையாய் பழகுதன்மையும் பணக்காரத்தனம் இல்லாத எளிமையும் அவர்களை அப்படியே மாறச்செய்து அவர்களும்,அண்ணி அண்ணி என உரிமையோடு பழகினார்கள். கற்பகமும் அவளை இன்னொரு மகளாகவே உணர்ந்தாள்.

ஒருநாள்,அவள் தன் குடும்பத்தில் அப்படி ஒன்றிவிட்டதை உணர்ந்து கதிரவன் மிகுந்த சந்தோஷத்துடன் அவளைத் தூக்கி தட்டாமாலை சுற்றி கன்னங்களில் முத்தமழை பொழிந்து ஆனந்தமாய் கொண்டாடினான்.

சிணுங்கியவளின் காதுகளில், 'இன்று இரவு நமக்கு விசேஷமாக இருக்கும்..!' எனசூசகமாய் சொல்லி அவளை ஒரேடியாய் சிவக்க வைத்துவிட்டு வேலைக்கு கிளம்பிப் போனான்.

ஆனால் அன்றுஅப்படி வேலைக்கு கிளம்பி அலுவலகத்திற்கு சென்றவனுக்கு அங்கு பேரதிர்ச்சி ஒன்று காத்துக்கொண்டிருப்பது தெரியாததுதான்!




கதிரவனுக்கு மார்க்கெட்டிங் மேனஜர் பதவியில் நல்ல சம்பளத்தில் அந்த ஆர்.கே. கன்ஸல்டன்ஸியில் பணி. பங்கு மார்க்கெட், கமாடிட்டி மார்கெட், சந்தை நிலவரம், என



பலதுறைகளில் வாடிக்கையாளர்களில் கவர்ந்து நன்மதிப்பை பெற்ற நிறுவனம் அது.

அங்கு சாதாரண ட்ரெய்னியாக சேர்ந்து தனது திறமையாலும் கடும் உழைப்பாலும் இரண்டே வருடங்களில் புரோமஷனாகி மார்க்கெட்டிங் மேனஜர் பதவியைப் பிடித்தவன் கதிரவன். அப்படிப்பட்டவனுக்கு திடீர் என வேலை போனால் எப்படி இருக்கும்?

ஆனால் அப்படித்தான் நடந்தது!

அலுவலகத்தில் நுழைந்து ஸீட்டில் உட்கார்ந்தவனிடம் பணியாள், டைரக்டர் அழைப்பதாய் சொன்னதுமேதிகைத்தான். காலையிலே எதற்கு அழைக்க வேண்டும் என்ற யோசனையுடன் எம்.டி.ரூமைநோக்கிப் போனான்.

கண்ணாடி கதவைத் திறந்து உள்ளே நுழைந்தபோது எம்.டி.மாதவன் நாயர் வழக்கம் போல் புன்னகைக்காமல் இறுகிய முகத்தோடு கடுகடுப்பாய் இருந்தது அவனை மேலும் அதிர்ச்சியடையச் செய்தது.

முகத்திடில் கடுகடுப்பு ஏற தன் முன் இருந்த ஃபைல் ஒன்றைத் தூக்கி அவன் பக்கம் போட்டார்.

'பார்! எவ்வளவு கவனக்குறைவாக நீ வேலைபார்க்கிறாய்...? இதுதான் மார்க்கெட்டிங் மேனஜர் என்ற முறையில் வேலை பார்க்கும் லட்சணமா?' அவர் பொரிந்து தள்ள கதிரவன் திடுக்கிட்டு அந்த பைலை வாங்கிப் பார்த்தான்.

க்ளையண்ட் ஒருவருக்கு ஷேர்கள் வாங்க பரிந்துரை செய்து அனுப்பிய கம்பெனிகளின் வரிசையும...ஷேருக்கான விலை மதிப்பும் அதில் குறிப்பிடப் பட்டிருந்தது.... அந்தப் பட்டியலில் விலைகள் பகுதியில் கணினியின் பிரிண்டரில் சரியான மைஇல்லாத காரணத்தினால் எண்கள் அரைகுறையாக பதிந்து வேறுபட்ட மதிப்பை காண்பித்துக் கொண்டிருக்க... அது தான் ஏற்பட்ட தவறு. கதிரவன் அதைக் கவனியாமல் அந்த கடிதத்தை கையெழுத்திட்டு க்ளையண்டுக்கு அனுப்பிவிட்டான்.

தன்னம்பிக்கை பகுதி

## வாழ்க்கை ஒரு போராட்டமே!



-G.அகிலாண்டம்

என்ன சார் வாழ்க்கை இது? எப்பப் பார்த்தாலும் போராட்டமாகவே இருக்கு. மனுஷனுக்குக் கஷ்டம் வரவேண்டியதுதான். ஆனா கஷ்டப்படுறதே வாழ்க்கையா ஆயிட்டா என்ன பண்றத சொல்லுங்க!' என்ற புலம்புகிறவர்கள் உண்டு.

'என்னவோ வாழ்க்கை ஓடிக்கிட்டிருக்கு' என்று சொல்பவர்களும் உண்டு.

வாழ்க்கையில் யாருக்குத்தான் பிரச்சனைகள் இல்லை. கஷ்டங்கள் இல்லை? சாப்பாட்டிற்கே கஷ்டம் ஆனால், சிரித்தபடி வலம் வருகிறார் என் நண்பர் ஒருவர்.

கேட்டால் 'பழகிப் போச்சு சார்' என்கிறார்!

ஆக, 'கஷ்டங்களுக்குப் பழக வேண்டும்' என்பதுதான் நாம் தெரிந்து கொள்ளவேண்டிய முதல்படி

சலித்துப் பேசுகிறவர்களின் மனதில் இன்னோர் எதிர்பார்ப்பும் இருக்கிறது. அது அனுதாபத்தைப்பெறப் பார்ப்பது, அல்லது ஏதேனும் உதவி கிடைக்குமா என்று எதிர்பார்ப்பது.

மற்றவர்களின் அனுதாபம் நமக்குத் தேவையில்லை. உதவி கிடைத்தால் நல்லதுதான். ஆனால் அது புலம்பலால் நமக்கு கிடைக்காது. புலம்பல் என்பது ஆற்றமாட்டாமை, இயலாமை.

சிலர் தாம் செய்யும் பணி அல்லது தொழில் பற்றிச் சலித்துப் பேசுகிறார்கள். 'ஒரே போர்! மனுஷன் செய்வானா இந்தத் தொழிலை?' என்று. இவர்களுள் நேசிக்காத தொழில் சறுக்குப் பாறையில் காலை வைத்துவிட்டார்கள் என்று பொருள். இது அதலபாதாளத்திற்குக் கொண்டு போகும் செயலே தவிர, வேறல்ல!

அதனால் எப்போதும் மனமகிழ்வோடு எதையும் செய்யவேண்டும்.எ திர் கொள்ளவேண்டும். அதுதான் வாழ்க்கை!



க்ளையண்டும் விலைகள் சரியாக தெரியவில்லை.வேறு ஒரு காபி அனுப்புங்கள் எனக் கேட்டிருக்கிறார். இதுதான் விஷயம். சொல்லப்போனல் இது அடிக்கடி நடக்கும் சின்னத் தவறுதான்.இதற்குப் போய் எம்.டி.ஏன் இந்தக் குதி குதிக்க வேண்டும்? எனத்தான் கதிரவன் திகைத்தான்.

ஆனால் எம்.டி.யோ அவனை சில மாதங்களாக கவனித்து வருவதாகவும் அவன் வேலையில் ஈடுபாடு இல்லாமல் பணியாற்றுவதாகவும்குற்றம் சாட்டினார். இதுபோன்ற கவனக்குறைவுகளை அவரது கம்பெனியில் அனுமதிக்க முடியாது எனவாகவும் அதற்காக கடும் நடவடிக்கை அவன் மீது எடுக்கப் போவதாகவும் பொரிந்து தள்ளினார்.

கடைசியில் அவனை கம்பெனியை விட்டு மூன்று மாதம் சஸ்பென்ஸ் செய்வதாக அவர் அறிவித்தபோது கதிரவன் ஸ்தம்பித்தே விட்டான்!

அவனுக்கு நடப்பது ஒன்றும் புரியவில்லை!

சாதாரண ஒரு கவனக் குறைவுக்கு மூன்று மாத சஸ்பென்சா?

அவனால் அதை நம்பவே முடியவில்லை!

எதனால் இப்படி? ஏன் எம்.டி.அவன் மீது இப்படி கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும்?

அவனது கேள்விகளுக்கெல்லாம் எம்.டி.பதில் சொல்லத் தயாராய் இல்லை. கழுத்தைப் பிடித்து தள்ளாத குறையாய் அவனை வெளியே தள்ளி விட்டார்.

அதிர்ச்சியோடு வெளி வந்தவனுக்கு சக ஊழியர்கள் விஷயத்தைச் சொன்னதும் தான் புரிந்தது.

அது தெரிந்ததும் அதிர்ச்சியின் உச்சிக்கே போனான் அவன்!

அதாவது அவனது மாமனாரும் ஐஸ்வர்யா ஜுவல்லர்ஸின் உரிமையாளருமான மோகன்ராம் அவன் கம்பெனி எம்.டி.யை சந்திக்க வந்திருக்கிறார். அவர்களது கம்பெனியில் ஒரு கோடி ரூபாய் வரை ஷேரில் முதலீடு செய்வதாய் உறுதி கொடுத்திருக்கிறார்.

அதற்கு பிரதி பலனாக கதிரவனை வேலையை விட்டு அனுப்ப வேண்டும் பணிநீக்கம் செய்ய வேண்டும் என்ற நிபந்தனை அவரிடமிருந்து.

ஒரு கோடி கிடைக்கிறது... என்றவுடன் எம்.டி.யும் வாயைப் பிளந்து கொண்டு சம்மதித்து விட்டு... இப்படி அவன் முன் சிறிய தவறை பெரிதாய் காட்டி நாடகமாடியிருக்கிறார். சஸ்பென்சனும் செய்திருக்கிறார். மூன்று மாத சஸ்பென்சனுக்குப் பிறகு அதையே காரணம் காட்டி அவனை வேலையிலிருந்து டிஸ்மிஸ் செய்வதுதான் அவரது திட்டமாம்.

அவர்கள் சொல்லச் சொல்ல கேட்ட கதிரவன் அப்படியே அரண்டு போனான்.

முதலில் கதிரவன் எதையும்நம்பவில்லைதான். ஆனால் அவனது நண்பனும் உடன் வேலை பார்ப்பவனுமான சுந்தரம் தான் தற்செயலாய் எம்.டி.ரூம் பக்கம் போனபோது காதால் கேட்ட விஷயம்என உறுதிப் படுத்தியபோது நம்பாமல் இருக்கமுடியவில்லை.

அலுவலகத்தில் எல்லோரும்ஒரு மாதியாய்ப் பார்க்க,அந்த பரிதாபப் பார்வைகளை தாங்க முடியாமல் உடனே கிளம்பி விட்டான்.

பைக்கை வெளியே எடுத்து சாலையில் வேகமாய் ஓடவிட்டவனுக்கு முதலில் எங்கு போவது என்றே தெரியவில்லை. முதலில் இப்படியெல்லாம் நடக்குமா... மாதுரியின் தந்தை இவ்வளவு தூரம் செய்வாரா? அப்படிச் செய்தாலும் எதற்காக இப்படி எல்லாம் அவர்செய்ய வேண்டும்? என்ன காரணமாய் இருக்கும்? என்றெல்லாம் கேள்விகள் தலைதூக்கியது.

அதனால் முதலில் விஷயத்தை தெளிவுபடுத்திக்கொள்வோம் என நேராக மாமனாரின் ஐஸ்வர்யா ஜுவல்லர்ஸை நோக்கி பைக்கை ஓடவிட்டான் அவன்.

பதினைந்து நிமிட யணத்தில் கடையை அடைந்துவிட்டான். காலை வேளையானாலும் அப்போதுதான் கடை



திறக்கப்படிந்தாலும் ஐஸ்வர்யா ஜுவல்லர்ஸ் வாடிக்கையாளர்களின் நெரிசலோடு பரபரப்பாய்த்தான் இருந்தது.

முன் கண்ணாடிக் கதவு காவலாளி அவனை அடையாளம் கண்டு பெரிய சல்யூட் அடித்து உள்ளே அனுப்பி வைத்தான். உள்ளேநுழைந்ததும் மேனஜரும் அவனை அறிந்து கொண்டு ஓடிவந்து வரவேற்று அழைத்துப் போனார்.

தான் மோகன்ராமைபார்க்க வந்திருப்பதாக கூறவும் லிப்ட்டில் அழைத்துப்போய் மாடியின் வலது ஓரமாய் இருந்த பெரிய ஏஸி அறையைக் காட்டினார்.

அவருக்கு தலையசைத்துவிட்டு ஒருவித வேகத்துடனே அந்த அறையின் கதவைத் திறந்து விருட்டென நுழைந்தான் கதிரவன்.

உள்ளே தினபேப்பரை பார்த்துக் கொண்டிருந்த மோகன்ராம் மெல்ல நிமிர்ந்தார். கதிரவனைப் பார்த்ததும் எதையும் வெளிக்காட்டாத முக உணர்ச்சியுடன், 'வாங்க... மாப்பிள்ளை....! வாங்க...!' என உற்சாகமாய் வரவேற்றார்.

தன்னை வரவேற்று பற்கள் தெரிய சிரிக்கும் அவரைப் பார்த்து இவர்.. இவ்வளவு தூரம் செய்திருப்பாரா... நம்ப முடியவில்லையே...! யாரோ சொல்வதைக் கேட்டு வீணாக இவரிடம் சண்டைபோட வந்து விட்டோமோ?

நினைப்புடன் கதிரவன் தயங்க மோகன்ராமோ, 'என்ன மாப்பிள்ளை... தயங்குறீங்க?நீங்க நினைப்பது சரிதான். உங்க வேலை போனதுக்கு காரணம் நான்... நானே தான்...!' என்றார் உணர்ச்சியற்ற குரலில் முகம் இறுக.

அதிர்ந்து போனான் கதிரவன்!

மேலும் சில நிமிடங்கள் சிலையாய் நின்றவன் கூர்ந்து அவரது முகத்தையே பார்த்தான்.

அந்த முகத்தில் இருந்த இறுக்கம், கண்களில் தெறிந்த அந்தக் கோபமானவெறி... எல்லாம் அவனை என்னவோ செய்ய... விருட்டென அங்கிருந்து வெளியேறினான் அவன்!




மாதுரியோ அவன்று சூழ்நிலை அறியா பேதையாய் வரப்போகும் இரவுக்கு தயாராகிக்கொண்டிருந்தாள். இன்று இரவு நமக்கு விசேஷமாக இருக்கும்... என கதிரவன் கண்சிமிட்டிச் சொல்லிச் சென்றதின் அர்த்தம் அவளுக்குப் புரியாமல் இல்லை.

மனதில் சந்தோஷப் புயல் அடிக்க அவனுக்கப் பிடித்த கிளிப்பச்சை ஜரிகை சேலையை எடுத்துக் கட்டினாள். நேரம் மாலை மயங்கி இருள் படர்வது கண்டு கண்ணாடி முன் உட்கார்ந்து சின்னச் சின்ன ஒப்பனைகள்... சிறுசிறு அலங்காரங்கள் செய்ய ஆரம்பித்தாள். அன்று திருமணத்தன்று இரவு அவள் செய்த அலங்காரங்களை கூட அவன் சரியாகப் பார்க்கவில்லை என்ற வருத்தம் ஏக்கம் அவளுக்கு!

அந்த ஏக்கத்தை போக்குவதுபோல் இன்று ஓரளவு பார்த்துப் பார்த்து செய்தாள். கூந்தலை தளரப்பன்னி பின்புறமாய் உயர்த்தி தூக்கிப் பின் மாட்டி, அதில் சரம் சரமாக தொங்கும்படி நிறைய பூக்களும், காதுகளின் இருபுறமும் மிடுக்கான தொங்கட்டான்களும்... நடுநெற்றியில் டாலருடன் கூடிய நெற்றிச் சூடியும்.

அவள் அப்படி ஒரு அசைவுடன் தலை சாய்த்து ஒரு விழிப் பார்வை அப்படி பார்த்தால் எப்படிஇருக்கும்? என ஒப்பனை செய்தபடி நினைத்தவள்அதே போல் செய்து எதிர் கண்ணாடியில் பார்த்தாள்.

அவளுக்கே பிரமிப்பாய் இருந்தது தான் இவ்வளவுஅழகோ...? என்ற வியப்பு மனம் முழுவதும் ஊடுருவி அவள் கன்னங்களைமேலும் சிவக்க வைத்தது.

இந்த ஒப்பனையில் கதிரவன் அவளைப் பார்த்தால்... நிச்சயம் ஆடித்தான் போவான் என்ற எண்ணம் குபீரென சந்தோஷமாய் எழுந்துஅவளை குதூகலிக்க வைத்தது.

அந்த சந்தோஷத் துள்ளலுடன் நடமாடினாள்.



நல்லவேளையாய் உதயாவும், வசுமதியும் டிவி நிகழ்ச்சி ஒன்றில் முழுகவனம் செலுத்தியதால் அவளையோ அவளது ஒப்பனையையோ சரிவரக் கவனிக்கவில்லை.

வழக்கம்போல் இல்லாமல் அன்று தாமதமாய் ஒன்பது மணிக்கே வீட்னுள் நுழைந்தான் கதிரவன்.

யாரையும் பார்க்காமல் அல்லது பிடிக்காதது போல் முகம் இறுக அவன் நடமாடியது அவளை என்னவோ செய்தது. அந்த சிறிய டைனிங் டேபிளில் அவனுக்கு உணவை எடுத்து வைத்த போதும் அவன் நிமிர்ந்து பார்க்க வில்லை. படபடவென குனிந்தபடியே விழுங்கினான்.

அட...! நிமிர்ந்து ஒரு சாதாரண பார்வை அவளைப் பார்த்தால் கூட போதுமே? அப்படியே குளிர்ந்து விடுவாளே? இந்த ஒப்பனையில்இந்த அலங்காரத்தில் அவளை அவன் ஆசைதீரப் பார்க்க வேண்டும்.... அப்படிப் பார்த்தால் தான் தனக்கு ஜென்மசாபல்யம் கிடைப்பது போல், அவளுள் அப்படி ஒரு நினைப்பு அல்லவா ஓடிக்கொண்டிருக்கிறது?

அதே நிமிர்ந்து அவளை பார்க்காத இறுக்கமான தோற்றத்துடன் அவளர்களது தனியறைக்குள் நுழைந்தான்.

கொஞ்ச நிமிடங்களில் பால் தம்ளருடன்அவளும் நுழைந்தபோது மூடியிருந்த ஜன்னல் பக்கம் கைகளைக் கட்டியபடி விரைப்பாக அவன் நிற்பது அவள் பயத்தை அதிகரித்தது. அவளுக்கு முதுகு காட்யபடியே நின்றவன், 'உன் அலங்கார ஒப்பனைகளை எல்லாம் கொஞ்சம் கலைத்து விட்டு வருகிறாயா? உன்னிடம்பேச வேண்டும்!' என்றாள் தெளிவான பட்டாணி உடைப்பது போன்ற குரலில்.

அவள் திடுக்கிட்டு விட்டாள்.

அவள் சொன்ன வார்த்தைகள்அவளுக்கு அதிரச்சிதான்.அதைவிட ஒப்பனைகளை கலைத்து விட்டுவா... என்றால், வீட்டிற்குள் நுழைந்தவன் அவள் பார்க்காதபோதுஅவள் அப்படி அலங்காரங்கள் செய்திருப்பதை கவனித்திருக்க வேண்டும்.

கவனித்துவிட்டான்!

எப்போது பார்த்தான்? குனிந்த தலையாய் நடமாடினானே? நாம் கூட அவன் அப்படி பார்த்ததை கவனிக்கவில்லையே... ஆக...அவளதுஅலங்கார அழகை பார்த்து விட்டுத்தான் இந்த குனிந்த தலை நாடகமா?

அவளுக்கு எதுவோ புரிவதுபோல் இருந்தது.

முன்பு முதல் இரவு அன்று இதே போல்தானே ஒரு முத்து உதிர்த்தாள். அவளை அப்படி அத்தனை அலங்காரங்களுடன் பார்த்தால் உடைந்து விடுவானாம். அதனால் அவளை பார்த்துப் பேச பயப்படுவதாய் சொன்னானே?

அதே போல் இன்றும் அந்த அவளது அலங்கார பயத்தில் இப்படி குனிந்த தலை மோகமா? எதுவும் புரிந்து கொள்ள முடியாதவளாய் ஒப்பனைகளை கலைத்து சேலையை மாற்றி சலனமில்லாமல் எளிமையாய் அவன் பக்கம்போய் உட்கார்ந்தாள்.

அவனது இறுக்கமான முகமும் அந்த நெற்றியில் ஓடிய வளைவுகளும்எதோ ஒரு முக்கியமான செய்தி அவனிடமருக்கிறது என்பதை அவளுக்கு உணர்த்தியது.

இல்லாவிட்டால், இப்படியெல்லாம் அவளை ஒப்பனைகளை, அலங்காரங்களை கலைத்துவிட்டு வா...என்றெல்லாம் கூறி கதிரவன் அசிங்கப்படுத்தமாட்டான். கதிரவனைப் பற்றி அவளுக்கு நன்கு தெரியும்!

அந்தநம்பிக்கையில் அவனையே பார்த்தாள் அவள்.

'எனக்கு வேலை போய் விட்டது... காரணம் உன் தந்தை...!' என ஒர வரியில் நேரிடையாய் வெடிகுண்டை வீசினான் கதிரவன்.

அவள் அதிர்ந்துதான் போனாள்.

இப்படி ஒரு குற்றச்சாட்டை அவள் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை!

அவளை மேலும் திகைப்பில் ஆழ்த்தியவாறு நடந்த எல்லாவற்றையும் விளக்கினான் கதிரவன். முதலில் அவளைப் போல்



அவனும் விஷயததை நம்ப முடியாமல் அவளது தந்தையின் கடைக்கே அவரைத் தேடிச்சென்றது... அவர் சர்வசாதாரணமாய், நான் தான் எல்லாவற்றுக்கும் காரணம் என அவளிடமேஒப்புக் கொண்டு அவனை அதிர்ச்சியடையச்செய்தது என எல்லாவற்றையும் கதிரவன் விவரிக்க அவள் அரண்டுதான்போனாள்.

அப்பா அவளிடம் பங்களாவை விட்டு கிளம்புகையில், அந்த ஆளை சும்மா விடமாட்டேன் செல்லம்... எனச் சொன்னாரே... அதற்கான அர்த்தம் இதுதானா?

அப்படியானால் தந்தை கதிரவனை தன் விரோதி போல் நினைத்து பழிவாங்க ஆரம்பித்துவிட்டாரா?

கடவுளே! என்ன இது?

நினைக்க நினைக்க அவள் நெஞ்சம் மேலும் பதறியது. தந்தை தான் புகுந்தவீடு போக ஒரு மனதாய் சம்மதித்தது விட்டார். கதிரவன் மேல் அதனால் சற்றுக் கோபம் அவருக்கு. அதுவும் போகப் போக சரியாகிவிடும் என அவள் நினைத்ததெல்லாம் பொய்யாய் போயிற்றே!

வஞ்சகமாய் குறிபார்த்து அடிப்பது போல் தனது செல்வாக்கை பயன்படுத்தி கதிரவனின் வேலையை தகர்த்திருக்கிறார் என்றால் அது எவ்வளவு பெரிய அநியாயம்?

அவளால் கதிரவனை நிமிர்ந்து பார்க்க முடியவில்லை. அதற்குமேல் அவனுடன்ஒருவார்த்தை பேச முடியவில்லை.

இருவரும் வேறுபட்ட மனநிலை உணர்வோடு சுவரையே வெறிக்க வெறிக்க பார்த்து கடைசியில் படுக்கையில் சாய்ந்து தூங்கியும் போனார்கள்.

மறுநாள் அதே கொதிப்போடு அவள் தந்தையைத் தேடி நியாயம்கேட்கச் சென்றபோது 'இதற்கெல்லாம் நீ கவலைப்படாதே செல்லம். எப்படியும் அவரை என் வழிக்கு கொண்டு வந்து உன்னையும்அவரையும் இந்த வீட்டில் ராணி மாதிரி வாழ வைக்கிறேன் பார்...!' என அவளிடமும் அதே சவாலை விடுவித்தார்

மோகன்ராம்.

அவள் எவ்வளவோ தன் சூழ்நிலையை விளக்கிச் சொன்னபோதும்அவர் புரிந்து கொள்ளவில்லை. காது கொடுத்து கேட்கத் தயாரில்லை.

'என்னால் முடியும். நான் நடத்திக் காட்டுகிறேன். என்ன என்னவென்று நினைத்தாய்?' என ஆங்காரத்துடன் தொடர்ந்து சவால்தான் விட்டுக் கொண்டிருந்தார் அவர்.

இவருக்கு புரிய வைப்பது கஷ்டம். இவரை திருத்த முடியாது! என்ற சலிப்புடன் அங்கிருந்து கிளம்பினாள் மாதுரி.

அவளுக்கு அன்று இன்னொரு அதிர்ச்சி கொடுக்க அங்கு வீட்டில் தயாராக இருந்தான் கதிரவன்.




தயக்கமும் ஒருவித பயமுமாகத்தான் அன்று காலை முழுவதும் தந்தையிடம் தர்க்கம் செய்வதிலும், சகோர்களிடம் நியாயம் கேட்பதிலும் போராடி ஓய்ந்துதான் போனாள் மாதுரி.

'அப்பா எது செய்தாலும் அது உன் நல்லதுக்குத்தான் மதுக்குட்டி...!' என ஒற்றை வார்த்தைகளுடன் சமாதானம் பேசி அண்ணன்மார்கள் அகன்று விட்டனர்.

அண்ணிமார்களை சந்தித்தபோது அவர்கள் வேறு ஒரு புது விஷயத்தை கக்கியது ஆச்சரியத்தோடு அவளை தூக்கி வாரிப்போட்டது.

இன்று காலை பொருட்கள் வாங்க ஸ்பென்சர் பிளாசா பக்கம் இருவவரும் சென்றபோது தற்செயலாக கதிரவனைப் பார்த்தார்களாம். அவன் அவர்களை கூப்பிட்டுப் பேசினானாம்.

அப்போது, வேலை மாமனாரால் போன விஷயத்தைச் சொன்னவன்,அவள் மாதுரியும்அவள் தந்தையின் திட்டப்படிதான் எதற்காகவோ அப்படி புகுந்தவீடு வர சம்மதித்து வந்திருப்பதாக



அவன் சந்தேகப்படுவதாகவும் சொன்னானாம்.

இது என்ன புதுக்கதை?என மேலும் அரண்டாள் மாதுரி.

ஆனால் அன்று மாலை வீட்டிற்கு வந்தபோது முழுவிஷயமும் அவளுக்குப் புரிந்து போயிற்று.

அவளிடம்பேசுவதற்காக எரிமலையாக தகதகத்து காத்து கொண்டிருந்தான் கதிரவன்.

'புரிந்து போயிற்று.... இப்போது? எல்லாம் உன் தந்தையின் சதிதான்...' என்று ஆரம்பித்தவன், 'அந்தச் சதியில் உனக்கம் பங்கு இருக்குமோ... என்பதுதான் இப்போது எனக்கு கிடைத்த அதிர்ச்சியான செய்தி...' என்றான்.

'என்ன சொல்கிறீர்கள்?' எ ன்றாள் திடுக்கிட்டு.

'உன் இரண்டு அண்ணிமார்களை இன்று சந்தித்தேன். அவர்கள் சொல்லிய விஷயம்தான் இது. உனக்கும் செல்வச் செழிப்பில் வ்ளர்ந்து விட்டு இப்படி நடுத்தர குடும்பமான புகுந்த வீட்டில் இருப்பது உடன்பாடு இல்லையாம். அ்தனால் நீயும் உன் தந்தையுடன் கூட்டுச் சேர்ந்துதான் இப்படியெல்லாம் நாடகமாடுகிறாயாம். உன் தந்தை என் வேலையைக் காலி செய்ததுபோல் என்னுடைய குடும்பத்ினரோடு என்னை சண்டைபோடச் செய்துஅவர்களிடமிருந்து பிரித்துக்கொண்டு போவதுதான்உன்னுடைய பயங்கரத்திட்டமாம். அதற்காக

அக்டோபர் 1 அன்று கடைகளில்
அடுத்த... வெண்ணிலா நாவலில்
அகிலா கோவிந்த் எழுதும்
"என் கண்மணி
என்காதலி!..."
பரவசமான நாவல்!
படிக்க தவறாதீர்கள்!!

தலையனை மந்திரங்கள் ஓதி என் மனதை மாற்ற நீ நிறைய விபரித திட்டங்களையும் தயார் செய்து வைத்திருக்கிறாயாம்... என்ன நான் சொல்வது எல்லாம் சரிதானே?'

அந்த அறையே அதிரும்படி கதிரவன் குற்றஞ்சாட்டி கேட்டபோது அப்படியே கிடுகிடுத்துப் போனாள் மாதுரி.

உதடுகள் தந்தியடிக்க, 'ஐயோ, அபாண்டம....! அபாண்டம்...!' என கத்தத்தான் அவளுக்கும் தோன்றியது. ஆனால் அதிர்ச்சியில் வார்த்தைகள்தான் வரவில்லை.

அண்ணிமார்கள் தன்னிடம் நல்லவர்கள் போல் ஒன்றைச் சொல்லிவிட்டு கதிரவனிடம் விஷமமாய் இப்படி ஒரு பொய்ச்செய்தியை பரப்பியது பெரும் அதிர்ச்சியைத் கொடுத்தாலும் அதை தன்னைக் காதலித்து கைப்பிடித்த கதிர்வன் அப்படியே நம்பி அவளை கேள்விகள் கேட்பது பெரும் பேரதிர்ச்சியாக இருந்தது.

'என்ன குட்டு வெளியாகி விட்டது என ஊமையாகி விட்டாயா?' என்றவன், 'நான் அப்போது தடாலென மனம் மாறி நீ இங்கு வர சம்மதித்தபோதே உறுத்தலான சந்தேகம் கொண்டேன். அது உன் தந்தையின் செய்கை மூலம் உறுதிப்படுத்தப் பட்டு விட்டது.இப்போது உன்னால் என்ன பதில் சொல்ல முடியும்? எப்படித்தான் சமாளிக்கப் போகிறாய் நீ?' என்றான் அதே குற்றம் சாட்டும் தொனியில்.

'நான் தவறேதும் செய்யவில்லை. என்னிடம் எந்த நடிப்பும் எவ்வித திட்டமும் இல்லை... என்னை நம்புங்கள்...!' என்றாள் அவள் குரல் உயர்த்தி தன் கூற்றை நியாயப்படுத்துவது போல்

ஆனால் மறுப்பாய் வேகமாய் தலையசைத்தான் கதிரவன்.

'இல்லை... மது... நான் உன்னை நம்பி இருப்பேன்.. ஆனால் பார்... உன் தந்தை என் வேலையை போகச் செய்யுமளவுக்கு கொடூரமான செயலை செய்திருக்கிறார். அதை செய்துவிட்டு நான் தான் செய்தேன் உன்னால் முடிந்ததைப் பார் என திமிராகச் சொல்கிறார். அதை உன்னால் தடுக்க முடிந்ததா? அவரை உன்னால் மாற்ற முடிந்ததா?' என்றவன் ஒரிருநிமிடம் நிறுத்தி அவளையே



கூர்ந்து பார்த்து விட்டு, இல்லைதானே? உன்னால் எதுவும் செய்ய முடியவில்லைதானே? அப்படியானால் என்ன அர்த்தம்? நியும் அவரோடு ஒத்துப் போகிறாய் என்றுதானே அர்த்தம்...? பின் உன்னை எப்படி நான் நம்ப முடியும்?

முகம் இறுகி ஏற்றி இறங்கும் பாவனைகளுடன் கதிரவன் கடுமையாய் கேட்டபோது தன்னிடம் பேசுவது கதிரவன்தானா? அவன்தானா... இப்படியெல்லாம் இரக்கமில்லாமல் விஷமமாய் கேள்விகளைக் கேட்கிறான்?என தவித்துதான் போனாள் அவள்.

எல்லாவற்றையும் விட அவன் அடுத்துச்சொன்ன வார்த்தைகள் தான் அவளைப் பாதித்தது ரொம்பவும்கதிகலங்க வைத்து விட்டது.

'மேலும் இன்னொரு விஷயமும் இருக்கிறது மது... உன் அண்ணிமார்களின் பேச்சை என்னால் முழுவதுமாய் அலட்சியப் படுத்த முடியவில்லை. என்னதான் புத்தி இருந்தாலும் இந்த தலையனை மந்திரம் என்பார்களே.... அந்த விஷயத்திற்கு மகத்தான சக்தி உண்டு. எப்படிப்பட்ட அறிவாளியையும் மழுங்கடித்துவிடும் அது. சும்மாவாக நீ அலங்காரம் செய்துகொண்டு வந்தாலே.. என் கட்டுப்பாடு போய் விடுமோ என பயப்படுகிறவன் நான்... இதில் நான் போய் அந்த தலையனை மந்திரத்தில் வேறு சிடிக்கிக்கொண்டால் எம்மாத்திரம்....நீயே சொல்?'

அவள் கோபம் சட்டென பொங்கியவளாய், 'அப்படியானால் அப்படி தலையனை மந்திரம் போட்டு உங்களை உங்கள் குடும்பத்திலிருந்து பிரித்துச் சென்றுவிடுவதாக நான் திட்டம் போட்டிருக்கிறேன். இதை நீங்கள் நம்புகிறீர்கள் அப்படித்தானே?' என்றாள் ஆத்திரம் சிறிதும் குறையாதவளாய்.

கதிரவனோ தெளிவான குரலில், நம்புகிறேனோ நம்ப வில்லையோ... என்பதெல்லாம் வேறுவிஷயம். முதலில் அந்த மாதிரியான ஆபத்திலிருந்து என்னை பாதுகாத்துக் கொள்ள விரும்புகிறேன். அதற்காக ஒரு வழியும் நான் கண்டு பிடித்து விட்டேன்...' என்றான் முகம் மேலும்இறுக.

'ஓஹோ! அப்படியானால் பிறந்தகத்திற்கு ஓடிப்போ....! என விரட்டியடிக்குமளவுக்கு துணிந்துவிடுவீர்களா?' என்றாள் அவள் ஆற்றாமைக்குரலில் அதிர்ச்சி முழுவதையும் காட்டி

மறுப்பாய் தலையசைத்த கதிரவன், 'அந்தஅவளவுக்கு நான் ஒன்றும் கொடுமைக்காரனில்லை மது. நீ தாராளமாக இங்கு என்னுடனே இருக்கலாம். ஆனால் உன் தலையனை மந்திர ஆபத்தில் இருந்து என்னைக் காப்பாற்றிக் கொள்ள... நான் தேர்ந்தெடுத்திருக்கும் ஒரு வழி....' என நிறுத்தியவன் திரும்பி அவள்கண்களை ஊடுருவது போல் ஒரு பார்வை பார்த்து விட்டு, 'கொஞ்ச நாட்களுக்கு உன்னுடன் பேசாமல் மௌ விரதத்தை கடைபிடிக்க முடிவு செய்திருக்கிறேன்...!' என்ற ஊசியை மெல்ல அவள் நெஞ்சினில் இறக்கினான்அவன்.

என்ன... ஒரு கொடுமை.... என்ன ஒரு தண்டனை இது...?! அவளுடன் பேசமாட்டானாம். மௌ விரதமாம்...!

அப்படியே நொறுங்கிப் போனாள் மாதுரி.



அன்று எல்லாவற்றையும் தெளிவாகப் பேசி அவளை மேலும் மேலும் அதிர வைத்துவிட்டான் கதிரவன்!.

அவள் அவனை மினுக்கி குலுக்கி பேச்சில் மயக்கி தலையணை வித்தையை போட்டு விடக்கூடாதாம். பின் அவன் பூம்பூம்மாடாய் மாறி அவள் பேச்சிற்கெல்லாம் தலையாட்டி தன் உடன்பிறப்புகளை எல்லாம் பெறுத்து அவர்களை விரட்டும் அளவுக்கு கூட போய்விடக் கூடுமாம். அதிலிருந்து தப்பிக்க அவளுடன் பேசாத இந்த மௌன விரதமாம். ஆனால் அந்த மௌன விரதத்தில் வாயால்தான் பேச மாட்டானாம். சைகையால் சொல்லிவிடுவானாம். அதனால் அவளுக்கு ஒன்று பெரிதாய் பாதிப்பு வந்து விட்டதாம்....!

'ஏன்.... கண்களால் வேறு அடிக்கடி என்னைப் பார்க்க



வேண்டியிருக்குமே... அப்படிஇந்த மயக்குக்காரியை பார்க்காமலிருக்க கண்களுக்கு சிறிதாய் ஒரு திரைகூட போட்டுக்கொள்ளலாமே? கோபமும் குத்தலுமாய் அவள் கேட்டதுக்குக்கூட அவன் அதிராமல்', தேவைப்பட்டால்முகம் பார்க்காமல் சுவரைப் பார்த்துக் கூட பேசிக் கொள்ளலாம் தானே...?' என தெளிவுப்படுத்தி அவளுக்கு மொத்த அதிர்ச்சியையும் கொடுத்தான்.

மாதுரிக்கு அவன்பேச்சைக்கேட்டு மயக்கம் வராத குறைதான்!

முதலில் இடிந்து போனவளாய் அன்ற இரவு முழுவதும் தூங்காமல் வெறிக்க வெறிக்கயோசித்தவள் மறுநாள் தன்னை முழுவதும் திடப்படுத்திக்கொண்டாள்.

கதிரவன் கோபத்தில் ஒரளவு நியாயமும் இருக்கிறதுதானே?

தந்தை இப்படி வீம்பு பிடித்து அவன்வேலையைப் பறித்தது மிகப் பெரிய தவறுதானே?

தந்தை என்ன நினைத்திருக்கிறார்? இப்படி அவன் வேலையைப் பறித்து பணத்திற்கு திண்டாடவைத்தால்தன்மானம் கௌரவத்தை எல்லாம் தக்கிப் போட்டுவிட்டு கதிரவன் தன் காலடியில் வந்து, 'மாமா இனி உங்கள் சொல்படி நடக்கிறேன் என்று கெஞ்சுவான் என்று தானே?

அவர் தப்பு செய்து விட்டார் அவருக்கு கதிரவனைப் பற்றி சரியாகத் தெரியாது. ரோஷக்கார கதிரவன் என்ன முட்டு முட்டினாலும் வலுக்கி கீழெ விழுவானே தவிர யார் காலிலும் போய் கெஞ்சமாட்டான். இதைக் கொஞ்சமும் புரியாமல் அல்லவா தந்தை காய் நகர்த்தி விளையாட முயறசிக்கிறாரே? என மனம் ஒடிந்தாள் அவள். மேலும் யோசித்தவளுக்கு ஒரு விஷயம் பொட்டிலடித்தாற்போல் தெளிவாய் புரிய ஆரம்பித்தது.

தந்தையின் போக்கிற்கும் கதிரவனின் பதிலடிக்கும் இருக்கும் ஒரே இடைவெளி அந்த ஸ்டேட்டஸ்! பணக்காரத்தன்மை நடுத்தர வர்க்க கதிரவனும் கோடீஸ்வர ஸ்டேட்டஸில் இருக்கும் அவளது தந்தையும் மோதுகிறார்கள். எல்லாவற்றுக்கும் ஒரே காரணம் பணம்.!

அந்த பணக்காரத்தன்மையை கோடீஸ்வர ஸ்டேட்டஸ்ஸை கதிரவனுக்கு மட்டும் கொண்டுவந்து விட்டால்...?

திடீரென அப்படி நினைத்துக் கொண்டிருந்தவளுக்கு மின்னலாய் தோன்றிய அந்தக் கீற்று அப்படியே உற்சாகப்படுத்தி எழுந்து உட்கார வைத்து விட்டது.

சரிதான் அவள் நினைப்பது சரிதானே? கதிரவன் மட்டும் நிறைய பணம் சம்பாதித்து தன் நிலையை உயர்த்தி விட்டால்...அவளது எல்லா பிரச்சினைகளும் சரியாகிவிடும்தானே?

படபடவென அவளுள் எழுந்த நினைப்பு உயிர்பெற்றது. இது மிகச் சரியான ஒரு வழி என உற்சாகமாகி மேலும் மேலும் அது பற்றி சிந்தித்தாள். அன்று மதியம் பொழுது போகாமல் பக்கத்து தெரு லைப்ரரி பக்கம்போன போது லாரன்ஸ் சாரை சந்தித்தாள். அவரை சந்தித்த அந்தக் கணமேமனதுள் அவள் கொண்டிருந்த அந்த திட்டங்கள் எல்லாம் உயிர் பெற ஆரம்பித்தது. மிகவும் குதுகலம் அடைந்தாள்அவள்..!

'லாரன்ஸ்' சார் என மாணவர்களால் அன்பால் அழைக்கப்படும் லாரன்ஸ் அவளது கல்லூரிப் பேராசிரியர். அவளும் கதிரவனும் சேர்ந்து படித்த கல்லூரியின் பௌதிகத்துறை தலைவர். பேராசிரியர் மாணவன் உறவுகளை மீறி ஒவ்வொருவரிடமும் அக்கறை காட்டி அவர்கள் வாழ்க்கை முன்னேற்றங்களை பற்றி பேசுபவர் எந்த நேரத்தில் அவர் வீட்டுக் கதவைத் தட்டினாலும் ஓடோடி வந்து உதவி ஆலோசனைகளை வழங்குபவர். என்ற பெயரெல்லாம் அவருக்கு உண்டு;.

அதனால் அவரை லைப்ரரியில் பார்த்ததும் மாதுரி மிகவும் உற்சாகமாகி தனது பிரச்சனையைச் சொல்லி ஆலோசனையைக் கேட்க அவர்தான் சரியான ஆள் என முடிவெடுத்தாள். அதனால் அவரை பார்த்து நலம் விசாரித்து விட்டு கையோடு அழைத்துக் கொண்டு லைப்ரரி ஆலமர பக்கம் உள்ள மரப்பெஞ்சிற்கு கூட்டி வந்து விட்டாள்.

அங்கு உட்கார வைத்து கதிரவனை காதலித்தது முதல் கல்யாணமாகி தான் சந்தித்ததுக் கொண்டிருக்கும் மௌனவிரத



விரச்சினை வரை ஒன்று விடாமல் சொன்னாள். முழுவதையும்கேட்ட லாரன்ஸ் சார் குழப்பம் நீங்கி கடகடவென சிரித்தார்.

'பயப்படத் தேவையில்லை... மாதுரி..உன்.. பிரச்சினையை ரொம்பவும் எளிதாக தீர்த்து விடலாம்...' என்றார்.

'எப்படி ஸார்..?' என்றாள் அவள்விழிகளை அகலமாக்கிய ஆச்சரியத்துடன்.

லாரன்ஸ் சார் விளக்கினார், 'மாதுரி நீ சொல்வது ஒரு வகையில் உண்மைதான் உன் கணவரையும் உன் தந்தையையும் மனதால் பக்குவப்படுத்தி சமாதானப்படுத்துவதை விட... இப்படி தடாலடியாய் மாற்றி யோசித்து கதிரவனை தன் வாழ்க்கை தரத்தை உயரத்தும்படி யோசிப்பதும் சரியான யோசனைதான் அதற்கு ஒரே வழி கதிரவன் சம்பாதிப்பது.. பெரும் பணக்காரனாய் ஆவதுதான் இன்றைய அதிவேகமான விஞ்ஞான உலகில் யார் முயற்சி செய்தாலும் யார் கடுமையாக உழைத்தாலும் நிச்சயம் சரியான பன் கிடைக்கும் மிகப்பெரிய வெற்றியையும் அடைந்து விடலாம்தான் அதற்கு தற்போது வேலைக்கு தேடி அலையாமல் சொந்தமாய் எதாவது தொழில் தொடங்க வேண்டும். அதில் கடுமையாக உழைத்து வாழ்வில் முன்னேற வழிதேடவேண்டும். கதிரவனைப் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும் அவன் கொள்கை பிடிப்பானவன். பயங்கரமாய் வெறி கொண்டு உழைக்க தயாரானாவன்தான். அதனால் நான் அவனுக்கு ஒரு வழி வைத்திருக்கிறேன்.என்றார் லாரன்ஸ்சார். லாரன்ஸ் சார் சொல்லியபடி தனது யோசனையை விவரித்த போது மாதுரிக்கு மிகுந்த உற்சாகம். அப்போதே கதிரவன் அதுபடி நடந்து ஜெயித்து விடுவது போன்ற சந்தோஷத்துள்ளல்.

அதனால் நெகிழ்ந்தவளாய் அவருக்கு காலில் விழாத குறையாய் நன்றியைச் சொல்லி அவரிடம் விடைபெற்றுக் கிளம்பினாள்.

அன்று வீட்டில் கதிரவனைப் பார்க்க அவளுக்கு ஒருபுறம் பாவமாகவும் மறுபுறம் அவன் கைகளை அசைத்து சைகையாலே பேசுவது கண்டு சிரிப்பாகவும் வந்தது. அதுவும் அவனது அந்த

மௌன விரத தண்டனையை வீட்டினுள் உள்ள மற்ற யாருக்கும் தெரியாதபடி அவன் சமாளிப்பதும் தடையில்லாமல் தண்டணையை நிறைவேற்றுவதும் அவளை ஆச்சரியப்படுத்தியது.

மேலும் இன்னும் வீட்டில் கூட அவன் தனக்கு வேலை போன விஷயத்தை சொல்லியிருக்கவில்லை. வீணாக கலவரப்பட்டுவிடுவார்கள் என தவிர்த்திருந்தான். மேலும் ஒவ்வொரு நாளும் தெரிந்த நண்பர்களின் உதவியோடு தீவிரமாக வேறு கம்பெனிகளில் வேலை தேடும் முயற்சியில் இருந்தான்.

அப்படி அவள் அவனையே கவலையோடு பார்ப்தைப் பார்த்து 'ஒருநாள் யாரும் எனக்காக கவலைப்பட வேண்டாம். இன்னும் இரண்டொரு நாளில் வேலை கிடைத்துவிடும்' என்றான். சுவரைப் பார்த்தபடி.பின்அடுத்த இரண்டு நாள் கழித்து அதே போல் அவள்பக்கம் வந்து சுவரைப் பார்த்தபடி 'இன்னும் பத்து நாட்களில் சொந்தமாய் ஒரு தொழில் தொடங்கப்போகிறேன். நம்கல்லூாரிபேராசிரியர் லாரன்ஸ் வார் எனக்கு வழிகாட்டியாய் உறுதுணையாய் உதவுகிறார். என்றான் கதிவரன்'. விஷயத்தை என் காதில் சொன்னதற்கு ரொம்பவும் நன்றி. அவரே என அவளும் வந்த சிரிப்பை அடக்கிக்கொண்டு சுவரைப் பார்த்து நன்றி சொன்னாள்.






பேராசிரியர் லாரன்ஸ் சாரை புத்திசாலி என்றுதான் சொல்ல வேண்டும் அவரும் கதிரவன் விஷயத்தில் அவசரப்படவில்லை.

மாதுரியைப் போலவே அவரும் திட்டம் தீட்டியிருக்கிறார். கதிரவன் தினம் போகும் இடங்களைத் தெரிந்து கொண்டு அங்கு போய் யதோச்சையாய் அவனைச் சந்திப்பது போல் சந்தித்திருக்கிறார்.

அப்படி சந்தித்து பேசிய போது கதிரவன் தனக்கு வேலை போய் தான் வேலை தேடிக் கொண்டிருக்கும் விஷயத்தைச்சொல்ல



என்னப்பா நீ? இன்னும் மாத சம்பள வேலையை நம்பிக்கொண்டு இருக்கிறாயா? சொந்தக் காலில் நின்று சொந்தமாய் தொழில் தொடங்கி வாழ்வில் முன்னேறலாமே? என யதோச்சையாய் சொல்வது போல் ஒரு யோசனையைச் சொல்ல... மிகவும் ஆர்வமாகிவிட்டான் கதிரவன்.

தனக்குத் தெரிந்த நான்கைந்து சிறு தொழில்களையும் அவற்றை தொடங்க பேங்க் லோன்கள் மூலம் மூலதனம் செய்து கொள்ளலாம் என்கிற விஷயத்தை எல்லாம் விவரிக்க அப்படியே சம்மதம் கொடுத்து உற்சாகமாகிப் போனான் கதிரவன். லாரன்ஸ் சார் அவனை நகரின் சிப்காட் தொழில் கிடங்கு காம்ப்ளெக்ஸிற்கு கூட்டிச் சென்றதும் அந்த சிறுதொழில்கள் பற்றி விளக்கினார்.

எல்லாவற்றையும் பார்த்த கதிரவன் 'காரு கேட்டட் பாக்ஸ்' என சொல்லப் படும் மரப்பெட்டிகள் செய்யும் 'பேக்கேஜிங் இன்டஸ்ட்ரீஸ்' என்ற சிறுதொழிலை தேர்நதெடுத்து தொடங்க முடிவு செய்தான்.

அதைத் தொடங்க பத்து லட்ச ருபாய் தேவைப்படும் எனவும் பேங்க் லோன் முலமாக ஐந்து லட்ச ருபாயும் மீதி ஐந்து லட்ச ருபாயை லாரன்ஸ்சார் தன்னிடம் படித்த இன்னொரு மாணாக்கன் ஒருவனிடம் கடனாக வாங்கித் தருவதாகவும் ஏற்பாடு.

ஒரு பத்து நாட்களில் எல்லாம் முடிவு செய்யப்பட்டு வேலைகள் கடகடவென நடக்க ஆரம்பிக்க மிகுந்த சந்தோஷமாகி விட்டான் கதிரவன்.

நகருக்கு வலது ஓரமாய் பத்து சென்ட் இடம் ஒன்றை வாடகைக்கு பிடித்து ஒரு நல்ல நாளில் முன்று ஊழியர்கள் ஒரு ப்ரஸ்ஸிங் இயந்திரத்துடன் கதிரவன் பேக்கேஜிங் இன்டஸ்ட்ரீஸை தொடங்கி விட்டான் கதிரவன்.

சிறிய பெரிய தொழிற்சாலைகளுக்கு அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு ஏற்ப சைஸ் வாரியாக பெட்டி செய்து பேக்கிங் செய்து கொடுப்பதே அவனது கம்பெனிப் பணி.

அதற்காக தொழில் கிடங்குகளில் அலைந்து சிறிய பெரிய

தொழிற்சாலைகளிடம் ஆர்டர் பிடித்தான். முதலில் சிறிய தொழிற்சாலைகளே பேக்கிங் ஆர்டரை அவனை நம்பி ஒப்படைத்தன.

அவன் வேலையில் காட்டிய ஆர்வத்தையும் தானே முன் நின்று பணியாளர்களை வைத்து ஒவ்வொரு பெட்டியையும் கவனமாய் உருவாக்கிய விதாமும் மற்ற தொழில் நிறுவனங்களை கவர்ந்து அவன் பக்கம் பார்க்க வைத்தது.

முதலில் ஆர்டர் கொடுக்க யோசித்தவர்கள் மெல்ல மெல்ல அவனை நம்பி ஆர்டர் கொடுக்க முன் வந்தார்கள்.

எப்படியும் இந்தத் துறையில் ஜெயித்தாக வேண்டும் வாழ்க்கையில் எதையாவது சாதிக்க வேண்டும் என கதிரவனும் இரவு பகலும் பாராது கடுமையாய் உழைத்தான்.

அப்படி அவன் உழைக்க உழைக்க மெல்ல ஆர்டர்கள் குவிந்தது மூன்றாய் வேலைபார்த்த பணியாளர்களின் எண்ணிக்கை முப்பதாக உயர்ந்தது. பத்து சென்டாக இருந்த தொழிற்கூடம் இடம் மாறி விஸ்தாரமான பத்து ஏக்கர் நிலப்பரப்பிற்கு போனது.

ஆறே மாதத்தில் லாரன்ஸ் சார் வழிகாட்டலிலும் கடுமையாக உழைத்து தரமான பெட்டிகளை உருவாக்கினதாலும் கதிரவன் பேக்கேஜிங் இன்டஸ்ட்ரீஸின் டர்ன் ஓவர் லட்சங்களில் ஆரம்பித்து கோடிகளுக்கு உயர்ந்தது.

மாதம் முப்பதாயிரம் சம்பளத்திற்கு உழைத்து அல்லாடிக் கொண்டிருந்த கதிரவனின் வாழ்க்கைத்தரம் மாதம் மூன்று லட்சம் சம்பாதிக்கும் அளவுக்கு உயர்ந்து விட்டது.

வீட்டை மாற்றி பெரிய பங்களா போன்ற வீடொன்றை வாடகைக்கு பிடிக்க முடிவு செய்தான்.

புதியதாய் கார் ஒன்றை வாங்கவும் தீர்மானம் போட்டான். தம்பி தங்கைகள் கல்யாணத்தின் பொருட்டு விதவிதமான நகை அணிகலன்கள் என ஒவ்வொன்றாய் வாங்கிக் கொடுத்தான். மாதுரியால் எதையும் நம்பவே முடியவில்லை. கனவு போல் மேஜிக் செய்வதுபோல் அவள் வாழ்க்கையில் கதிரவன் முயற்சியில்



உழைப்பில் கிடுகிடுவென நடந்து கொண்டிருந்தது.

அதற்கு காரணத்தையும் அவனே சொன்னான் 'வெறும் உழைப்பு மட்டுமில்லை. நான் இந்த பேக்கிங் இன்டஸ்ட்ரீயை தொடங்கிய நேரம் சரியான நேரமும் கூட. பல சிறு பெரு தொழிற்சாலைகளுக்கு பேக்கிங் பாக்ஸ்கள் கிடைக்காமல் பெரும் தட்டுப்பாடு உள்ள சூழ்நிலை அதனால் நான்ஆரம்பித்து உற்பத்தியை பெருக்கியதும் டிமாண்ட் ஜாஸ்தியாக ஆகி பணம் நம் பக்கம் கொட்ட ஆரம்பித்துவிட்டது. எல்லாம் எல்லாவற்றுக்கும் வழிகாட்டியாய் இருந்த அந்த லாரன்ஸ் சாருக்குத்தான் நன்றி சொல்ல வேண்டும். என்றான் உணர்ச்சி வசப்பட்டவனாய்.

பின் அன்று இரவே ஒரு பையில் போதும் அளவுக்கு எதையோ கொண்டு வந்து அவர்கள் ரூமில் வைத்தான். இரவு வழக்கம் போல் பால் கொடுக்க வந்தவளை கட்டிலில் உட்கார வைத்து பையில் இருந்த பொருளை அவள் தலையில்கவிழ்த்தான். அத்தனையும் ஆயிரம் ரூபாய் பணக்கட்டுகள், கரன்ஸிகள்.

திகைத்தவளிடம் 'பணமழை பணமழை' என்று சொல்வார்களே அதுதான் உன்மீது பொழிந்து கொண்டிருக்கிறது. ஒரு மாதம் லாபமாய் எனது புதுத் தொழில் கிடைத்த ஐந்து லட்சம் இந்தப் பணம் போதுமா, இன்னும் கொஞ்சம் வேண்டுமா? என ராகமாய் வேறு பாடி அவளைப் பார்த்தான்.

அவள் எவ்வித உணர்ச்சியுமில்லாமல் அவனையே வெறித்தாள்.

தொடர்ந்து அவனே, 'எனக்கு உன் மீது எவ்வித கோபமும் இல்லை மாது. அதனால் இன்றோடு அந்த மௌன விரதத்தை முடித்து உன்னிடம் பேச ஆரம்பித்து விட்டேன். என்னுடையகோபம் எல்லாம் உன் தந்தை மீதுதான். என் வேலையைப் போக்கி என்னை ஒட்டாண்டியாக்க நினைத்தாரல்லவா.:. அவர் மீதுதான்! நாளை பார் அவரை சந்தித்து சரிசமமாய்நாக்கை பிடுங்குகிற மாதிரி அவரிடம் என்ன கேள்வியெல்லாம் கேட்கிறேன் என்று..' உதடு துடித்து முகம் இறுகச் சொல்லி சிவந்தவனைக் கண்டு திகைக்கவே செய்தாள் மாதுரி.



## 20



மலையடிவார முருகன் கோவில்.

அங்குதான் ஐஸ்வர்யா ஜீவல்லர்ஸ் அதிபர் மோகன்ராம் தன் குடும்ப சகிதம் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் ஆஜராகி முருகனை மன முருக வழிபடுவது வழக்கம்.

அன்றும் அப்படியே மாலை நேரத்தில் முருகனை வழிபட்டு விட்டு தனது இரு மகன்கள், மருமகள்கள் சகிதமாக கோயிலுக்கு வெளியே வந்தவருக்கு அந்த அதிர்ச்சி!

தனது புது பளபளகாரில் இருந்து இறங்கி நின்றபடி கதிரவன் பக்கத்திலேயே மாதுரி அவரது வருகைக்காக காத்திருப்பது போல் கதிரவன் கைகளை கட்டியபடி நின்று கொண்டிருந்தான். இவன் முகத்தில் என்று மில்லாத அந்த கடுமை. ஒருவித இருக்கம்!

பக்ககத்தில் நின்றிருந்த மாதுரியும் சிரிக்கவில்லை எவ்வித உணர்வுமில்லாமல் கல் போல்தான் நின்றுகொண்டிருந்தாள்.

மோகன்ராம் கதிரவனின் கோட் சூட் தோரனையையும் பளபள புதுக்காரையும் பார்த்து நொடியில் யூகித்துக் கொண்டார், அவர் காதுபட முன்பே விஷயங்கள் காற்றில் வரத்தான் செய்தது. உங்கள் மருமகன் புதிதாய் சிறுதொழில் ஒன்று தொடங்கி அது நன்றாக லாபகரமாய் ஒட ஆரம்பித்துவிட்டதாமே. என அவரின்காதுகளுக்கு எப்பவோ செய்தி வந்து விட்டது. ஆனாலும் அவரிடம் இப்போது தயக்கம்!.

எந்த முகத்தை வைத்துக் கொண்டு அவனைப் பார்க்க முடியும்? வஞ்சகமாய் அவனது வேலையை காலி செய்து அவன் வருமானம் இல்லாமல் தன் காலில் விழுந்து அல்லாடுவான் என்று நினைத்தவர்தானே?



அவர் தயங்க கதிரவன் மிடுக்காய் அவரை நோக்கி நடக்க ஆரம்பித்தான். பின்னால் மாதுரியும் தொடர்ந்தாள்.

அவன் நெருங்க நெருங்க அவன் பார்வையின் சூட்டைத் தாங்க முடியாமல் தலைகுனிந்தார் மோகன்ராம்.

ஆனால் அவன்பக்கத்தில் வந்து நெருக்கமாய் நின்றதும் அவரால் தாங்க முடியவில்லை.

'என்னை மன்னித்து விடுங்கள் மாப்பிள்ளை' என கைகளைப் பிடித்துக் கொண்டு தேம்ப ஆரம்பித்து விட்டார்.

அதன்பின் அங்கு தவறை உணர்ந்து வருந்தும் படலமும் மன்னிப்பை வேண்டும் படலமுமேஅரங்கேறியது.

'பணம்தான் பெரிது என திமிராக நினைத்து உங்களை என் காலடிக்கு கொண்டு வர கீழ்த்தரமாக நினைத்தேன். நடந்தேன். உங்களது கடின உழைப்பு முலம் இன்று நீங்களும் பல லட்சங்களை சம்பாதித்து உங்களது திறமையை காட்டி விட்டீர்கள். எனக்கு தகுந்த பாடம் புகட்டிவிட்டீர்கள் என்னை மன்னித்து விடுங்கள்!'.

கையைப் பிடித்துக் கொண்டு நிஜமாய் வருந்திக் கெஞ்சுபவரை எப்படி உதாசீனப்படுத்த முடியும்?

கதிரவன் அக்கணமேமனம் மாறி லேசானவனாய் மன்னித்தான். எத்தனையோ மாதங்களுக்குப்பிறகு உதடுகளை விரித்து அழகான புன்னகை செய்தான் அவரை மன்னிப்பது போல்.

அவரைத் தொடர்ந்து மாதுரியின் சகோதர்களும் அண்ணிமார்களும் தாங்கள் அவ்வப்போது அவன் மனம் புண்படும்படி நடந்து கொண்டதற்குமன்னிப்பை வேண்ட அவர்களையும் புன்னகையால் மன்னித்தான்.

மோகன்ராம் அப்படியே மாதுரி பக்கம் திரும்பி 'நீயும் என்னை மன்னித்துவிடு செல்லம்...' என கை கூப்பினார்.

'ஐயோ அப்பா, என்னிடம் போய் நீங்கள்! என பதறி அவர்

கைகளை பிடித்து ஆறுதல் படுத்தினாள் அவள்.

'எனக்கு எல்லாம் தெரியும் செல்லம் நேற்றுநம்கடைக்கு உன் கல்லூரிப் பேராசிரியர் லாரன்ஸ் சார் தற்செயலாய் யாருக்கோ நகைகள் வாங்க வந்திருந்தார். அவரிடம் பேச்சுக் கொடுத்த போது நீ செய்த அத்தனை பெரிய காரியங்களையும் புட்டு புட்டு வைத்துவிட்டார். நிஜமாகவே உன்னை நினைத்து உன்னை பெற்றமைக்கு பெருமைப்படுகிறேன் மதுக்குட்டி நீபிறந்த வீட்டுக்ப் பெருமையை மட்டுமல்ல... புகுந்தவீட்டுப்பெருமையும் விட்டுக் கொடுக்காமல் உயர்த்திவிட்டாய். நிலைநாட்டிவிட்டாய், இனி உன்விருப்பம் போல் நீ புகுந்த வீட்டிலே இருந்து கொள்ளம்மா..என்ன.. இந்தப் பாசக்காகரத்தந்தையை மட்டும் அடிக்கடி வந்து பார்த்துவிட்டுப் போகவேண்டும் என்ன சரிதானே?'

செல்லமாய்பேசி அவள்கன்னங்களைத் தட்டி மகிழ்வோடு விடைபெற்றார். மற்றவர்களும்விடைபெற்றுகிளம்பினர்.

இப்போது கதிரவனும் மாதுரியும் மட்டும் தனியே!

கதிரவன் திரும்பி மாதுரியை திகைப்பாய் பார்த்தான்.

மோகன்ராம் சொன்ன வார்த்தைகள் அவன் காதினுள் எதிரொலித்தன நேற்று லாரன்ஸ் சார் கடைக்கு வந்து எல்லாவற்றுக்கும் காரணம் நீ என்று சொன்னார்.

அப்படியானால் அப்படியானால் என்ன அர்த்தம்? என்ன அர்த்தம்.?

நினைப்பில்திடுக்கிட்டவனாய்ய பக்கம் வந்து மாதுரியின்தோள்ககளைப்பற்றி முகம் நிமிர்த்தினான்.

'நிஜமாகவா மாது?'

அவன்தவிப்பாய் கேட்க புரியாததுபோல் 'என்ன கேட்கிறீர்கள்?' எதைச் சொல்கிறீர்கள்? என்றாள்.

'லாரன்ஸ் சார் என்னை சந்தித்தது...சிறுதொழில்



தொடங்குவது பற்றி பேசி ஆர்வம் கொடுத்தது..என்னை உற்சாகப்படுத்தி வழிமுறைகளை சொல்லிக் கொடுத்தது.. இன்னும்?'

அவன் முடிப்பதற்குள், 'லாரன்ஸ் சாரை உங்க ளிடம் அனுப்பி வைத்தது நான்தான்...!என்றாள் குரல் கனிய சாதாரனமாய்.

'ஐயோ மாது' அது நீதானா? அப்படியானால் லாரன்ஸ் சார் என்னை யதோச்சையாக சந்திக்கவில்லையா? எல்லாம் உன் ஏற்பாடுதானா? இது கூடத் தெரியாமல் உன்னை எப்படியெல்லாம் சந்தேகப்பட்டுவிட்டடேன்..?மௌனவிரதம் என்றெல்லாம் முட்டாள்தனம் பண்ணி துன்புறுத்தி விட்டேன் என்னை..என்னை ..மன்னித்துவிடு...மாது நம்பமுடியாமல்! திணறினான் கதிரவன்.

மாதுரியோ விடாமல் 'அவசரப்பமாதீர்கள் உங்கள் மன்னிப்பை மொத்தமாகக் கேளுங்கள் லாரன்ஸ் சார் உங்கள் தொழில் முலதனத்திற்கு பேங்க லோன் ஐந்து லட்சம் போக மீதி ஐந்து லட்சத்தை தனக்குத் தெரிந்த மாணாக்கன் ஒருவரிடம் வாங்கி உங்களிடம் கொடுத்தார் அல்லவா... அந்த மாணாக்கன் மாணவி வேறு யாருமல்ல நான் நான் தான் எனது நகை ஒன்றைஅடகு வைத்துதான் உங்களிடம் பணம் கொடுக்கச் சொன்னேன்..அவள் சொல்லி முடிப்பதற்குள் சந்தோஷமாய் அவளை கைகளால் தூக்கி தட்டாமாலை சுற்றி கொண்டாடினான் அவன். என் செல்ல மாது, என்னிடம் கூட சொல்லாமல் எவ்வளவு விஷயங்கள் செய்திருக்கிறாய்...என்னிடம் சொல்லியிருக்கலாமேஏன் மறைத்தாய்? ஏன் மறைத்தாய்?' என அவள் கைகளால் சிறைப்பிடித்து கன்னம் உரசி கெஞ்சலாகவே கேட்டான் அவன்.

'என்ன..என்ன..சொன்னீர்கள்? சொல்லி இருக்கலாம்..என்றா? அதுதான் பேச..பேச... பேசவே கூடாது என்று மௌனவிரதத் தடை போட்டு விட்டீர்களே.அதற்குள்அது இந்த கதிரவன் சாருக்குமறந்து போயிற்றா?'

கேலியும் கிண்டலுமாய் அவள் கேட்க மருகினான் அவன்

'ஐயோ மாது! நான் முட்டாள் போல்தான் அப்போது நடந்திருக்கிறேன். தொழிலில் ஜெயித்தாலும் உன்னிடம் உன்னைப் புரிந்து கொள்ளாமல் தோற்றுத்தான் போயிருக்கிறேன். அதற்காக என்னை தயவு பண்ணி பெரிய மனது கொண்டு நீ மன்னிக்கவேண்டும். மன்னிப்பாயா கண்மணி?'

அவன் தன்னை முழுதுமாய் உணர்ந்து புரிந்து கொண்டான் என்ற சந்தோஷத்தில் மனமகிழந்தவளாய் அப்படியே அவனை தன் நெஞ்சினில் பொதித்து இறுகக் கட்டிக் கொண்டாள், அவள்.

கூடவே 'இந்த மாப்புமன்னிப்பு கேட்டதெல்லாம் போதும் உங்களைக் கட்டிக் கொண்டதில் இருந்து எனக்கு எப்போதும் பகல் ஆகவே வருகிறதே. இரவு என்பது உண்டா. எப்போதாவது வருமா? இல்லை கதிரவன் சார். தொழில் ஆர்வத்தில் அதையும் மறந்து விட்டாரா?'என்றாள். கண் சிமிட்டி துடுக்கான குரலில்.

முதலில் புரியாமல் ஒரு விநாடி திகைத்தவன் புரிந்தவன் புரிந்ததும், அடடா! என் கண்மணியை இப்படி ஏங்குமளவுக்கு வைத்து விட்டேனே எவ்வளவு பெரிய முட்டாள் நான்..என்றபடி தன் காலையிலேயே செல்லமாய் ஒரு தட்டு போட்டுக் கொண்ட கதிரவன் எல்லாவற்றுக்கும் சேர்த்து இன்றுஇரவு பார் பிரமாதப்படுத்தி விடுகிறேனாக்கும்... என்றான் அவளைப் போலவே கண்சிமிட்டி.

...................

அன்று இரவு-

ஆவலாய் தன் தனியறையினுள் நுழைந்த கதிரவன் மாதுரி எவ்வித அலங்காரமுமில்லாமல் சாதாரணமாக கையில் பால் சொம்புடன் நிற்பதைப் பார்த்து திகைத்தான்.



'என்ன மாது அந்த கண்ணைப் பறிக்கும் அலங்காரங்கள். இந்த மனதை அள்ளும் அபார ஒப்பனைகள் எதுவுமே இல்லையே? என ஏக்கமும் ஆச்சரியமாகவும் அவன் கேட்க கோபமாய் முகம் வெட்டினாள் அவள்.

'வேண்டாம் சாமி இரண்டு முறை நான் பார்த்து பார்த்து அப்படி ஒப்பனை செய்தது உங்களை மயக்க அலங்காரங்கள் செய்யதது அதனால் ஏமாந்தது எல்லாம் போதும். இனி ஒன்று ம் செய்யமாட்டேன் இப்படி இப்படியாகவே இருப்பேன்! என்றாள் இறுமாப்பு கொண்டவள் போல் உதடுகளை குவித்துக் கொண்டு கதிரவன் வெண்பற்கள் தெரியும் வசீகரச்சிரிப்போடு பக்கம் வந்து அவள் தோளைப் பற்றியவன், 'அதற்காக கோபம் வேண்டாம் கணமணி நீ இருமுறை செய்து வீணாய் போயிற்று. என வருந்துவது கூட நியாயம்தான். அதனால் என்ன? இனி நீ செய்யவேண்டாம் அந்த ஒப்பனைகளை அலங்காரங்களை நான் நானே என் கண்மணிக்குச் செய்து அழகு பார்க்கட்டுமா?' என்றவன், 'பார்க்கட்டுமா என்ன? இதோ பார்க்கப் போகிறேன் என்றபடி அவளை இருக்கையில் உட்கார்த்தி வைத்தான்.

சிணுங்கலோடு உட்கார்ந்து, 'உங்களுக்கு என்ன தெரியும்?' என்பது போல் மைவிழிகளைள உயர்திப் பார்த்தவளிடம், 'அழகை ரஸித்தவனுக்கு.. அழகுபடுத்தவும்தெரியும்தான் இப்போது பார்!' என்றபடி அவள் கூந்தலைவிடுவித்து முன்பு அவள் செய்திருந்தது போல் பின்புறமாக தழைய தழையப் பொறுமையாய் பின்னினான் .பின் ஒய்யாரமாய் அதை தூக்கி கிளிப் செய்தான். அவளுக்குப் பிடித்த டாலர் தொங்கட்டான்களை மிருதுவாய் காதுகளில் மாட்டி விட்டான். அழகு நெற்றியில்அந்த முத்து பதித்த நெற்றிச்சூடியை பொதித்து அழகு பார்த்தவன், 'யம்மாடி..என்ன ஒரு அழகு கண்மணி! நீ கொஞ்சம் அப்படியே இடப்புறமாய் பக்கவாட்டில் திரும்பி லேசாய் தலைசாய்த்து உன் மைவிழிக் கண்களை நிமிர்த்தி அப்படி ஒரு பார்வை பார்ப்பாயே..அதை அதைக் கொஞ்சம் பாரேன்! நான்

அதில்இன்பமாய் இனிமையாய் அடிபட்டு காலம் முழுவதும் கிறங்கிப் போய் உன்மடியிலேயே கிடக்க வேண்டும்..என்ன சரிதானா? என்ன பார்க்க ஆரம்பிக்கிறாயா? ப்ளீஸ் மாது! எனக்காக அப்படிப் பார் மாது!',அவன் கெஞ்சி கொஞ்ச ஆரம்பித்தான்.

அவள் வந்த சந்தோஷத்தையும் சிரிப்பையும் அடக்கிக்கொண்டு அவன் சொன்னது போல் செய்து அந்த அத்தனை அமர்த்தலானா ஒப்பனைகளும் அலங்காரங்களையும் தூக்கும் அந்த வசிகரப் பார்வையை (பார்க்க.... அட்டைப்படம்) அவனுக்காக அவனை நோக்கிப் பார்த்தாள்.

அந்தப் பார்வையின் ஜொலிப்பையும் அதில் பளீரிட்ட அவளது அழகையும் பார்த்து தாங்க முடியாதவனாய் குபீரென அவள் மீது பாய ஆரம்பித்தான் கதிரவன்!.

முற்றும்.


விநியோக உரிமை

**ராஜ்ஶ்ரீ பப்ளிகேஷன்ஸ்**

**7/4, வி.என்.தாஸ் ரோடு,**
**பார்டர் தோட்டம், அண்ணாசாலை,**
**சென்னை-600 002**
**செல்:9444111767**

Owned and Published by G. Velayutham on behalf of Govindaswamy Publications, 7.Raj Flats, 42, Harrington Road, Cennai-30. and Printed at Premium prints, Chennai-2. Editor : G.S.Manian. Cell : 98424 49517